தமிழரசு
ஜனவரி 2006




வாய்மையே வெல்லும்
Partners in Learning
Microsoft
கல்விக்கான
தொழில்நுட்பம்
Core Text

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036–37
மார்கழி – தை
மலர்: 37 இதழ்: 7
ஜனவரி 2006
விலை ரூ.10

## இந்த இதழில்...

★ தமிழகத்தில் மீண்டும் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டதற்கு, **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் காட்டிய திடநோக்கும், உறுதியுமே காரணமாகும் – **மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்கள், தமிழக சட்டப்பேரவையில் ஆற்றிய உரை (13.1.2006) ..... 2

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி ..... 12

★ ஆட்சிப் பொறுப்பேற்ற ஐந்தாண்டு காலத்திற்குள் அனைத்து தரப்பினரது நிலைமை உயர நித்தமும் திட்டமிட்டு, திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது இந்த அரசு – தேனி மாவட்ட அரசு விழாவில், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆற்றிய உரை (9.1.2006) ..... 13

★ வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசு அறிவித்துள்ள நிவாரணத் தொகுப்பு உதவி உறுதியாக வழங்கப்படும் – **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் அறிவிப்பு ..... 17

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் கூடுதலாக 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க ஆணை ..... 20

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள பல்வேறு நிவாரண உதவிகள் மற்றும் மறுவாழ்வு திட்டங்கள் பற்றிய புத்தகம் – **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் வெளியிட்டார்கள் ..... 21

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களால் ரூபாய் ஒரு கோடியே 40 லட்சம் செலவில் திறக்கப்பட்ட இணைப்புப்பாலம் ..... 24

★ நெரிசலில் சிக்கி உயிரிழந்த 42 பேர் குடும்பங்களுக்கு தலா ரூபாய் ஒரு லட்சம் நிதிஉதவி – **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் உத்தரவு ..... 25

★ ஏழு கிறிஸ்துவ தேவாலயங்களில் அன்னதானத் திட்டம் – **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் தொடங்கிவைத்தார்கள் ..... 27

★ வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் நகர்ப்புற விவசாயிகளுக்கு 135 கோடி ரூபாய் வட்டித்தள்ளுபடி – **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆணை ..... 31

★ மழை வெள்ளத்தை திறமையாக சமாளித்து நிவாரணப் பணிகளை மேற்கொண்ட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களுக்கு, **மாண்புமிகு இந்தியப் பிரதமர்** அவர்கள் பாராட்டு ..... 37

★ புதிய ஓய்வு ஊதியத் திட்டம் – திருக்கோயில்களில் பணியாற்றும் நிரந்தரப் பணியாளர்கள் பயன்பெற – **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் உத்தரவு ..... 55

★ மேலும் 180 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் – **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆணை ..... 57

★ காவேரி நதிநீர் பாசன அமைப்பில் பாதிப்புக்குள்ளான பாசனக் கட்டுமானங்களில், உடனடியாக பழுதுநீக்கி, புதுப்பித்து, புனரமைக்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆணை ..... 60

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள், கச்சத்தீவை நீண்டகால குத்தகைக்கு எடுக்க வலியுறுத்தி **மாண்புமிகு இந்தியப் பிரதமர்** அவர்களுக்கு கடிதம் (8.1.2006) ..... 62

★ பாலாற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டத்தை உடனடியாகக் கைவிட வலியுறுத்தி, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆந்திர முதலமைச்சருக்குக் கடிதம் (5.1.2006) ..... 68

★ ரூ.256 கோடி செலவில் 3.28 கோடி பேருக்கு இலவச வேட்டி, சேலைகள் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆணை ..... 69

### அட்டைப்பட விளக்கம்

| | | |
|---|---|---|
| **முதலாம் பக்க அட்டை** | : | தேனி மாவட்ட அரசு விழா (9.1.2006) |
| **இரண்டாம் பக்க அட்டை** | : | **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களுடன் மைக்ரோசாஃப்ட் கணினி மென்பொருள் நிறுவனத்தின் தலைவர் திரு.பில்கேட்ஸ் சந்திப்பு (9.12.2005) |
| **நான்காம் பக்க அட்டை** | : | உதகை பைக்காரா ஏரி மற்றும் குன்னூரின் பசுமைத் தோற்றம் |

*ஆசிரியரும் வெளியிடுபவரும்* : **சி. முத்துக்குமாரசாமி**, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

# தமிழகத்தில் மீண்டும் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காட்டிய திடநோக்கும், உறுதியுமே காரணமாகும்

மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்கள், தமிழக சட்டப்பேரவையில் ஆற்றிய உரை (13.1.2006)



**மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே,**

2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரின் தொடக்கத்தில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது பன்னிரெண்டாவது சட்டப் பேரவையின் நிறைவுக் கூட்டத் தொடர் ஆகும். மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் மாண்பமை இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் ஆற்றியுள்ள அரும்பணிக்கு இத்தருணத்தில் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக மக்கள் இவ்வரசின் மீது வைத்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையை நிறைவு செய்ய, வெல்லுதற்கரிய சவால்கள் அனைத்தையும் முறியடித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு, அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

2. தொலை நோக்குப் பார்வையோடு, தமிழகத்தை நாட்டிலுள்ள மாநிலங்களுள் முதன்மை மாநிலமாக மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முனைந்தார்கள். இந்நிலையை அடைவதற்கான செயல்திட்டம், மாண்புமிகு முதல்வர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டது. இன்று தமிழ்நாடு, மிக வேகமாக முன்னேறி பல துறைகளில் முதன்மை மாநிலமாகவே திகழ்கிறது. முதலீடுகளுக்கு உகந்த இடம், பொதுச் சேவைகள், சமூக நலத் துறைகள், சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு போன்ற அனைத்துக் கூறுகளிலும் தமிழகம் முதன்மை மாநிலமாக இருப்பதாக பெரும்பான்மையான நடுநிலை ஆய்வுகள் மதிப்பீடு செய்துள்ளதில் இச்சாதனை பிரதிபலிக்கப்படுகிறது.

3. கடந்த 2005 ஆம் ஆண்டு பெய்த அதிகப்படியான மழை, மாநிலத்தின் வறட்சிப் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்த்து, உழவர்களுக்கு அடுத்த பருவ காலத்தில் நல்ல விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ள போதிலும், அக்டோபர் திங்கள் முதல் டிசம்பர் திங்கள் வரை தமிழகம் தொடர் மழை மற்றும் வெள்ளத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். இதனால் பலமுறை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் உயிர்ச் சேதமும், பயிர்கள் மற்றும் பொதுக் கட்டமைப்புகளுக்குப் பெருமளவில் பாதிப்பும் ஏற்பட்டுள்ளன. வெள்ளம் பாதித்த 22 மாவட்டங்களிலும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. வெள்ளத்தின் பாதிப்பை மதிப்பீடு செய்யவும், நிவாரண மற்றும் சீரமைப்புப் பணிகளை முடுக்கிவிடவும், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களே பலமுறை நேரில் சென்று பார்வையிட்டார். இவ்வெள்ள நிலையை சமாளிப்பதற்காக அரசு நிருவாகம் முழு அளவில் முடுக்கிவிடப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் வெள்ளப் பகுதிகளிலிருந்து மீட்கப்பட்டு தற்காலிக வெள்ள நிவாரண மையங்களில் தங்கவைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருந்துகள் ஆகியன வழங்கப்பட்டன. விரிவான வெள்ள நிவாரணத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் ஆகியோரின் நேரடி மேற்பார்வையின்கீழ் செயல்படுத்தப்பட்டது.

4. மத்திய அரசிடமிருந்து உதவிகோரி, 2005 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாள், ஒரு விரிவான கோரிக்கை மனு முதற்கண் அளிக்கப்பட்டது. அதன்பின்னர் மேலும் இரண்டு கோரிக்கை மனுக்கள் அளிக்கப்பட்டன. நிவாரணம், சீரமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, மொத்தம் ரூபாய் 13,685 கோடி நிதியுதவி, 2.58 இலட்சம் டன் அரிசி மற்றும் 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணை ஆகியவற்றை இவ்வரசு கோரியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2005 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் மாண்புமிகு பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, சேதத்தின் அளவு, மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் மற்றும் மாநிலத்திற்குத் தேவைப்படும் உதவி ஆகியன குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இவ்வுறுதியான வேண்டுகோளையடுத்து, மத்திய அரசு இதுவரை நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக மொத்தம் ரூபாய் 1,000 கோடி நிதியுதவியும் மற்றும் 21,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணையும் அளித்துள்ளது.

5. பலமுறை ஏற்பட்ட வெள்ளப் பெருக்கையும், நீர் சூழ்ந்ததையும் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்டோர் அனைவரையும் சென்றடையும் வகையில் நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் தாராளமான நிவாரணத் திட்டத்தை இவ்வரசு அறிவித்து செயல்படுத்தியது. இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு உதவும் வகையில், மாபெரும் அளவில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும், முழுவதும் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூபாய் 2,000 ரொக்கமும், பகுதி சேதமடைந்த குடிசைகளுக்கு ரூபாய் 1,000 ரொக்கமும், பத்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணை, சேலை மற்றும் வேட்டி ஆகியவை வழங்கப்பட்டன. சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூபாய் 2,000 ரொக்கம், பத்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணை, சேலை மற்றும் வேட்டி ஆகியவை வழங்கப்பட்டன. சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதிக்கப்பட்ட தெருக்களையும், பிற பகுதிகளில் பாதிக்கப்பட்ட வார்டுகள் மற்றும் குடியிருப்புகளையும் கண்டறிவதற்காகப் பின்பற்றப்பட்ட எளிமையான முறை, வீடுதோறும் சென்று கணக்கெடுக்கும் முறையில் வழக்கமாக ஏற்படும் சிக்கல்களை பெரிதும் குறைத்தது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் விரைவில் வழங்கப்பட இம்முறை உதவியுள்ளது.

6. வெள்ள நிவாரணத்திற்காகவும், புனரமைப்புப் பணிகளுக்காகவும், மொத்தம் ரூபாய் 1,079 கோடியை இவ்வரசு ஒதுக்கியுள்ளது. உடனடி நிவாரண உதவிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபாய் 566 கோடியும் இதில் அடங்கும். தமிழ்நாட்டில் இதுவரையில் இந்நிவாரண உதவி 31 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் மட்டுமே, 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அரசின் நிதி உதவியைப் பெற்றுள்ளன. இத்தகைய பெரும் அளவிலான நிவாரண நடவடிக்கைகள், இதுவரை எப்போதுமே மேற்கொள்ளப்பட்டதில்லை. பாதிக்கப்பட்ட சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், ஏரிகள், பாசனத் திட்டங்கள் மற்றும் கட்டடங்கள் போன்ற பொதுக் கட்டமைப்பு வசதிகளை செப்பனிடவும், சீரமைக்கவும் ரூபாய் 513 கோடி ஒதுக்கீட்டில் பெரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும், நிரந்தரச் சீரமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கும் மத்திய அரசு மேலும் நிதியை ஒதுக்குமென இவ்வரசு நம்புகிறது. மாண்புமிகு முதல்வரின் வேண்டுகோளை ஏற்று, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நிதியுதவி வழங்கிய, நல்லெண்ணம் கொண்ட நிறுவனங்கள் மற்றும் பொது நலத்தில் அக்கறை கொண்ட குடிமக்கள் ஆகியோருக்கு இத்தருணத்தில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. பேரழிவுச் சுனாமிப் பேரலைகள், தமிழகத்தின் கடலோரப் பகுதிகளைத் தாக்கி பெரும் உயிர்ச் சேதத்தையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்தி மக்களின் வாழ்வை நிலைகுலையச் செய்த துயர நிகழ்வு ஏற்பட்டு ஓராண்டு ஆகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தெளிவான அணுகுமுறை மற்றும் சீரிய கொள்கை வழிநடத்துதலினால் இவ்வரசு, தேடுதல், காப்பாற்றுதல், உடல்களைப் புதைத்தல்/எரித்தல் மற்றும் உடனடி உதவிகள் ஆகிய முதல் கட்டப் பணிகளை மிகக் குறுகிய காலத்திலேயே செம்மையாகச் செய்து முடித்து, உலகளாவிய பாராட்டைப் பெற்றது. ஏற்கனவே கருத்தடை அறுவை செய்திருந்து, இச்சுனாமிப் பேரழிவின்போது தமது குழந்தைகளைப் பறிகொடுத்த தாய்மார்கள் மீண்டும் கருத்தரிப்பதற்கான அறுவை சிகிச்சை செய்துகொள்வதற்கு ஆகும் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என்ற முடிவு, அக்கறைகொண்ட இவ்வரசின் கருணை உள்ளத்தைப் புலப்படுத்துகிறது. தற்போது நீண்டகால மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்கான பெருந்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு சுனாமி நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 812 கோடியை மட்டுமே அளித்துள்ள போதிலும், இவ்வரசு நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 1,136 கோடியை அனுமதித்துள்ளது. இத்துடன், இவ்வரசு பல்வகை பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நீண்ட காலச் சீரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 2,618 கோடி அளவிற்கு நிதியுதவியைப் பெற்றுள்ளது. இவ்வுதவியில், உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூபாய் 1,903.50 கோடி முழுவதும் கடனாகவும், ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து ரூபாய் 304 கோடி கடனாகவும், ரூபாய் 343 கோடி மானியமாகவும் பெறப்பட்டுள்ளது. மேலும் வேளாண்மை வளர்ச்சிக்கான சர்வதேச நிதியிலிருந்து ரூபாய் 67.50 கோடி கடனாகப் பெறப்பட்டுள்ளது. இக்கடன்கள் முழுவதும் மாநில அரசாலேயே திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். இத்தகைய பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ், இவ்வரசு ஏற்கனவே ரூபாய் 832 கோடி நிதியை சீரமைப்புப் பணிகளுக்கும், வாழ்வாதார உதவிகளுக்கும் அனுமதித்துள்ளது.

8. தீர்க்கமான குறிக்கோளுடனும், உறுதியுடனும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புனரமைப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்ட முறை, தமிழகத்திற்கு சர்வதேச அளவில் பெரும் புகழை ஈட்டித்தந்துள்ளது. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த, ஆதாய நோக்கில்லாத சர்வதேச அமைப்பான ஃபிரிட்ஸ் நிறுவனம் அண்மையில் நடத்திய ஆய்வு, தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின்போது மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் இவ்வரசின் சிறப்பான பங்கினைப் பெரிதும் பாராட்டியுள்ளது.

9. சட்டம்–ஒழுங்கைச் சீரிய முறையில் பேணிப்பாதுகாப்பதற்கு இவ்வரசு அளித்த முக்கியத்துவமானது, தமிழகத்தை ஒரு அமைதிப் பூங்காவாக மாற்றியுள்ளது. சட்டம்–ஒழுங்கில் விழிப்பான கண்காணிப்பு, உறுதியான நடவடிக்கை, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் தொடர் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறை ஆகியவற்றால் தீவிரவாதம் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது. கடந்த இருபது ஆண்டுகளாக, சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டு, அரசுக்கு மாபெரும் சவாலாக இருந்துவந்த காட்டுக் கொள்ளையன் வீரப்பனை வீழ்த்தியது இவ்வரசின் மிகப்பெரும் சாதனையாகும். அண்டை மாநிலங்களான ஆந்திரம் மற்றும் கர்நாடகம் ஆகியவற்றை அடுத்துள்ள எல்லை மாவட்டங்களில் நக்சலைட்டுகளின் அச்சுறுத்தல் வெற்றிகரமாகக் கையாளப்பட்டுள்ளது.

10. கடந்த ஐந்தாண்டுகளில் **தமிழகத்தில் மீண்டும் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டதற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காட்டிய திட நோக்கும், உறுதியுமே காரணமாகும்** என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வர். இன்று தமிழக காவல்துறை நமது நாட்டிலேயே மிகச் சிறப்பாக சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் அமைப்பாக மாறியுள்ளது. தமிழக காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக, ரூபாய் 479 கோடி ஒதுக்கீட்டில் விரிவான திட்டம் வகுக்கப்பட்டு, 2001 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துரிதமான புலனாய்வுக்கு வழிவகுக்கும் வகையில் நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள், ஊர்திகள், ஆயுதங்கள், தளவாடங்கள் மற்றும் அனைத்து வசதிகளும் காவல்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. காவல் துறையினை நவீனப்படுத்துவதில் தமிழக முதலமைச்சர் காட்டிய தாராள ஆதரவின் பயனாக, 2001 இல் 71 சதவீதமாக இருந்த குற்றக் கண்டுபிடிப்பு வீதம், 2005 ஆம் ஆண்டில் 86 சதவீதமாக உயர்ந்துள்ளது. காவல்துறையின் பல்வேறு பதவி நிலைகளைச் சேர்ந்த காவலர்களுக்காக, 2001 ஆம் ஆண்டிலிருந்து ரூபாய் 416 கோடி செலவில் 10,000 வீடுகள் கட்டப்படுவதன் காரணமாக, நாட்டிலேயே தமிழக காவல் துறையினர் வீட்டுவசதி குறித்து அதிகமான மன நிறைவை அடைந்துள்ளனர். வளர்ந்து வரும் சென்னை மாநகரின் பாதுகாப்புத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக சென்னைப் பெருநகரக் காவல்துறை ஆணையரகம் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது. அதிக அளவில் பெண்கள் காவல்துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளதும், 196 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதும், தேசிய அளவில் தமிழக காவல்துறையின் பாலின நேர்மை உணர்வை மேலும் உயர்த்தியுள்ளது.

11. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைச்சாலைத் துறை ஆகியவற்றை

மேம்படுத்துவதற்காக, முறையே ரூபாய் 25 கோடி மற்றும் ரூபாய் 48 கோடி செலவில், இவ்வரசினால் செயல்படுத்தப்பட்ட நவீனமயமாக்கல் திட்டங்கள் அனைவரின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றுள்ளன. தமிழகத்தில் தொடங்கப்பட்ட தொலை நீதிமுறைத் திட்டம், சிறைகள் மற்றும் நீதிமன்றங்களை மின்னணு முறையின் மூலம் இணைத்து விசாரணை செய்ய உதவும் வீடியோ கலந்தாய்வுத் திட்டங்களில், இந்தியாவிலேயே மிகப் பெரியது என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை அருகே உள்ள புழலில் அமைக்கப்பட்டுவரும் ரூபாய் 77 கோடி செலவிலான நாட்டிலேயே அதிநவீன சிறைச்சாலை வளாகம் விரைவில் கட்டி முடிக்கப்படவுள்ளது.

12. பொருளாதார வளர்ச்சி குறித்த பெரும் ஐயப்பாடுகள், அச்சுறுத்தும் நிதிநிலைச் சீர்கேடு மற்றும் முடங்கிய வளர்ச்சி நிருவாகம் ஆகியவற்றோடு தமிழகம் இந்தப் புத்தாயிரமாண்டை எதிர்கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நினைவு கூர்வர். ஐந்தாண்டுகளுக்கும் குறைவான இக்குறுகிய காலகட்டத்தில் நமது மாநிலம் மிகச் சீரிய திருப்புமுனையை அடைந்துள்ளது. பொருளாதாரத்தின் முக்கிய துறைகள் மீண்டும் முன்னேற்றப் பாதையில் செல்லத் துவங்கியுள்ளன. சுனாமியால் ஏற்பட்ட பேரழிவு மற்றும் வரலாறு காணாத வெள்ளத்தால் ஏற்பட்ட சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தும் 2005–2006 ஆம் ஆண்டில், தமிழகம் 8 சதவீதத்திற்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சியை எய்தும் என முதல்கட்ட மதிப்பீடுகளின்படி எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டிற்குப் பாய்ந்துவரும் புதிய முதலீடுகளே மாநிலத்தின் பொருளாதார ஏற்றத்திற்குத் தக்க சான்றாகும்.

13. மாநிலத்தின் பொருளாதாரச் சீர்திருத்தத்தையும், வளர்ச்சித் தேவைகளையும் ஒருங்கிணைத்து, இவ்வரசு மாநிலத்தை நடத்திச் சென்ற பாங்கு தனிச் சிறப்பிற்குரியதாகும். இதன் விளைவாக, புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகளை, இலக்காண்டான 2015 க்கு வெகு முன்னரே நமது மாநிலம் எய்த உள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 5,200 கோடியாக இருந்த தமிழகத்தின் வளர்ச்சித் திட்ட ஒதுக்கீடு, 75 சதவீத அளவிற்கு உயர்ந்து, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 9100 கோடியை எட்டியுள்ளது. மேலும் 2002–2007 ஆண்டுகளுக்கான பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 40,000 கோடியையும் இவ்வரசு விஞ்சவுள்ளது. பொதுக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதற்கான மாநிலத்தின் மூலதனச் செலவிற்கான ஒதுக்கீடு, 2001–2002 ஆம் ஆண்டிலிருந்த ரூபாய் 1778 கோடியிலிருந்து, ஏறக்குறைய மும்மடங்கு உயர்ந்து தற்போதைய வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 4792 கோடியை எட்டியுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 182 கோடியாக இருந்த ஏற்கெனவே அமைக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பிற்கான ஒதுக்கீடு, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 754 கோடியாக உயர்ந்துள்ளது.

14. தமிழகத்தின் இத்தகைய வளர்ச்சி மற்றும் சீர்திருத்தச் சாதனைகள், சர்வதேச நிதி நிறுவனங்களை மீண்டும் மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவிடத் தூண்டியுள்ளன. தமிழகத்தில் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மதிப்பு, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 8,550 கோடி (1.90 பில்லியன் அமெரிக்க டாலர்) என்ற சாதனை அளவை எட்டியுள்ளதென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இவற்றுள், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் (ரூ.2,160 கோடி), தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம் (ரூ.597 கோடி), தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III (ரூ.1,957 கோடி), புதுவாழ்வுத் திட்டம் (ரூ.717 கோடி) மற்றும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் (ரூ.567 கோடி) ஆகியன தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏழை எளிய மக்களை எவ்விதத்திலும் பாதிக்காத வகையில் சீர்திருத்தத் திட்டங்களை இக்குறுகிய காலத்தில் மேற்கொண்டு, மாநிலத்தை மீண்டும் நிலை நிறுத்தியமைக்கான முழுப் பெருமையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களையே சேரும்.

15. விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் முழுமையான சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான முன்னோடித் திட்டமாக, மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை இவ்வரசு துவக்கியுள்ளது. இத்திட்டம் தனது குறிப்பிடத்தக்க விரிவான அமைப்பிற்கும், நல்கும் பயனிற்கும் மிகப்பரவலான பாராட்டைப் பெற்றுள்ளது. புரட்சிகரமான இத் திட்டம், தமிழ்நாட்டிலுள்ள 1.37 கோடி விவசாயத் தொழிலாளர்களுக்கும் சிறு மற்றும் குறு உழவர்களுக்கும் வாழ்நாள் முழுவதும் அவர்களின் துயர் நீக்கி பாதுகாப்பளிப்பதாக அமைந்துள்ளது. இத்திட்டம், உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் திருமணம், மகப்பேறு மற்றும் தரமான கல்வி ஆகியவற்றிற்கும், உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்திற்கும், மரணம் மற்றும் எதிர்பாராச் செயலிழப்பு ஆகிய நேர்வுகளிலும் அரசு உதவியளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

16. ஊரகப் பகுதிகளில் வருவாய் மற்றும் வளவாய்ப்புகளின் பெருக்கத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்த தடைகளைத் தகர்த்தெறிந்து, வேளாண்மைத் துறையின் வளர்ச்சியினை கட்டுப்படுத்தி வந்த சவால்களை வெற்றி காண்பதில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்துதல், வேளாண்மையில் மதிப்பு கூட்டுதல், திறம்பட்ட நீர்ப்பயன்பாடு, துல்லிய பண்ணையியல் நடைமுறை, தரிசு நில மீட்பு மற்றும்

நீர்பிடிப்புப் பகுதி மேம்பாடு, சீரமைக்கப்பட்ட விவசாயக் கடன்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட விரிவாக்கப் பணிகள் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வருவது, வேளாண்மைத் துறையை தொடர் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல வழிவகுத்துள்ளது.

17. தமிழகத்தின் வேளாண் பொருளாதாரத்திற்கு விரைந்து புத்துயிரூட்டி, வலுப்படுத்த இவ்வரசு உறுதி கொண்டுள்ளது. தொடர்ந்து நிலவிய வறட்சி நிலைகளும், வரலாறு காணாத 2005 ஆம் ஆண்டு வெள்ளப் பாதிப்புகளும், ஒருங்கிணைந்த நீர்வள நிருவாகத்தில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன. வறட்சி மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு இழப்பீடு வழங்கியது தவிர, 2000 ஆம் ஆண்டு கரிப் (kharif) பருவம் முதல் 2004–2005 ஆம் ஆண்டு ரபி (Rabi) பருவம் வரை பயிர் காப்பீட்டுத் தொகையாக ரூபாய் 98 கோடி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு போன்ற நீர் வளம் குன்றிய மாநிலங்களின் துயர் அகற்ற ஆறுகளின் இணைப்பே சரியான தீர்வாக அமையும். ரூபாய் 3,900 கோடி செலவு மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, உலக வங்கி உதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் மற்றும் நீர்வள நிருவாகத் திட்டம், மாநிலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். இத்திட்டத்தை வடிவமைக்கும் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

18. ஆந்திரப் பிரதேச மாநில அரசு, பாலாற்றின் குறுக்கே 2000 மில்லியன் கன அடி (2 டி.எம். கன அடி) உயர் கொள்ளளவு கொண்ட நீர்த் தேக்கம் ஒன்றைக் கட்ட உத்தேசித்திருப்பதாக வெளியாகியுள்ள ஊடகச் செய்திகள் இவ்வரசுக்கு மிகுந்த கவலையை அளிக்கின்றன. இது தமிழ்நாட்டில் பெரும் அச்சத்தையும் ஐயப்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளது. ஆந்திரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த குப்பம் பகுதியில், பாலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதற்கான எந்தவொரு திட்டப்பணியையும் மேற்கொள்ளக்கூடாது என மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதல்வரை உடனடியாக வலியுறுத்தியுள்ளார். தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் ஏறக்குறைய ஒரு இலட்சம் ஏக்கர் பாசனப் பகுதிகளில் வேளாண்மைப் பணிகளை மேற்கொண்டுவரும் விவசாயிகள் தங்கள் பாசனத்திற்கு இந்தப் பாலாற்றையே நம்பி இருப்பதாலும், பல நகர்ப்பகுதிகள் மற்றும் கிராமங்களுக்கு இந்நதி ஒன்றே முக்கியக் குடிநீர் ஆதாரமாகத் திகழ்வதாலும், பாலாற்றின் நீரை தடுத்து நிறுத்துவதற்கான எந்தவொரு முயற்சியும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

19. விவசாயம் சாராத்துறை புத்துயிர் பெறவும் ஊரக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் ஊக்கம் அளிக்கும் வகையில், இவ்வரசு மேற்கொண்ட முன்னோடித் திட்டமாகிய புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நல்ல பயனளித்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 210 வட்டாரங்களில், ரூபாய் 212 கோடி முதலீட்டில் மொத்தம் 330 நிறுவனங்கள் உற்பத்தியை தொடங்கியுள்ளன. 82 வட்டாரங்களில், ரூபாய் 128 கோடி முதலீட்டில் 227 நிறுவனங்கள் செயல்படத் துவங்குவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ளன. இவை விரைவில் செயல்படத் துவங்கும்.

20. விவசாயிகளின் நலன் கருதி அவர்களது வேளாண்மை வருவாய் மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இவ்வரசு அயர்வின்றி நல்கிவருகிறது. கரும்பு பயிரிடுவோருக்கு 9 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான பிழிதிறன் கொண்ட கரும்புக்கு, மெட்ரிக் டன் ஒன்றிற்கு முன்னெப்போதிருந்திராத உயரளவாக, ரூபாய் 1,014–ஐ அரசின் குறைந்தபட்ச பரிந்துரை விலையாக (State Advised Price) நிர்ணயித்ததோடு, 9 சதவீதத்திற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்கும், மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூபாய் 8.80 ஊக்கத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ச்சியடைவார்கள். ரூபாய் 28 கோடி செலவிலான, இவ்வரசின் சிறு தேயிலை பயிரிடுவோர் பாதுகாப்புத் திட்டம், பன்னாட்டளவிலும் உள்நாட்டிலும் ஏற்பட்ட விலைச் சரிவினால் வாடும் நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலைப் பயிரிடுவோருக்கு பெரும் ஆறுதலை அளித்துள்ளது.

21. விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்கும் வண்ணம் திட்டங்களைச் செயல்படுத்தி, விவசாய கூட்டுறவுக் கடன்களைச் சீரமைத்த இவ்வரசின் சாதனை என்றென்றும் நினைவில் கொள்ளப்படும். 31.3.2004 அன்றுள்ளபடி, கூட்டுறவு வங்கிகளிடமிருந்து விவசாயிகள் பெற்ற ரூபாய் 2,598 கோடி அளவிலான பயிர்க் கடன்கள், முதல் 2 ஆண்டு காலத்திற்கு கடன் அசலை திருப்பிச் செலுத்துவது நிறுத்திவைக்கப்பட்ட 5 ஆண்டுகாலக் கடன்களாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இக்கடன்களுக்கு, 2006 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள் வரை உள்ள, வட்டியைத் தள்ளுபடி செய்து ஒரு பெரும் வட்டி தள்ளுபடி திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டம் ரூபாய் 645 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்ட தொகையை அரசே திருப்பித் தருவதன் மூலம், கூட்டுறவு நிதி நிறுவனங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

22. சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதிசெய்வது, மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாகவும், இவ்வரசின் முக்கியக் குறிக்கோளாகவும் இருந்துவருகிறது. காடு வளர்ப்புத்

திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்பட்டமையால், 2001 ஆம் ஆண்டிலிருந்து தென் மாநிலங்களிலேயே மிக அதிகமான அளவில், தமிழ்நாட்டில் வனப்பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது. துறையின் களப் பணியாளர்களுக்கு குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கு ஏற்பளித்தும் அனைத்து சரக அலுவலர்களுக்கும் (Territorial Rangers) வாகனங்களை வழங்கியும் மாண்புமிகு முதலமைச்சர் காடுகளைப் பாதுகாப்பதில் வனத் துறையின் திறனுக்கு அரண் சேர்த்துள்ளார்.

23. ஊரக விவசாயக் குடும்பங்களுக்கு துணை வருவாயினை அளிக்கும் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீனளம் ஆகியவை முன் எப்போதுமிருந்திராத அளவிற்கு அரசின் உத்வேகத்தை பெற்றுள்ளன. அரசின் தீவிர நடவடிக்கைகளின் வாயிலாக, செயற்கைமுறை கருத்தரித்தல் மூலம் கால்நடைகளின் மரபணுத்தன்மை மேம்படுத்தப்பட்டு, தமிழ்நாடு பால் உற்பத்தியில் நாட்டில் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாக திகழ்கிறது. தொலைதூரப் பகுதிகளில் கால்நடை மருத்துவ வசதிகளை வழங்கிட, சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை ரூபாய் 10 கோடி செலவில் 24,051 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மொத்தம் 234 கால்நடை சுகாதார துணை மையங்கள் முழு வசதியுடன்கூடிய கால்நடை மருந்தகங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

24. கச்சத்தீவைச் சுற்றியுள்ள பாக் ஜலசந்தியில், தமிழ்நாட்டு மீனவர்களுக்கெதிராக தொடர்ந்து நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் இந்த அரசுக்கு ஆழ்ந்த கவலை அளிக்கின்றன. கச்சத்தீவுப் பகுதியில் இயல்பான மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் பாதுகாக்க, இந்திய அரசு அத்தீவை நிரந்தரக் குத்தகை அடிப்படையில் பெற வேண்டுமெனக்கோரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

25. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் துயர் நீக்கும் வகையில், சேதமடைந்த படகுகள் மற்றும் வலைகளைப் பழுதுபார்ப்பதற்கும், முற்றிலும் சேதமடைந்த படகுகள் மற்றும் வலைகளுக்குப் பதிலாக புதியனவற்றை வாங்கவும், இவ்வரசு ரூபாய் 146 கோடி இடருதவி வழங்கியுள்ளது. மீனளத் துறையில் தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளை சர்வதேசத் தரத்திற்கு இணையாக உயர்த்துவதற்காக ரூபாய் 103 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 108 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுவரும் மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், 10.36 இலட்சம் மீனவர்கள் பயனடைந்துள்ளனர். மத்திய அரசு பெட்ரோலியப் பொருட்களின் விலையை பலமுறை உயர்த்தியதிலிருந்து மீனவர்களை பாதுகாக்கும் வகையில், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 63 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டதையும் பொருட்படுத்தாது, இவ்வரசு, மீன்பிடி நடவடிக்கைகளுக்காக மீனவர்கள் வாங்கும் டீசலுக்கு 100 சதவீதம் விற்பனை வரி விலக்கு அளித்துள்ளது.

26. நம்முடைய வறுமைக் குறைப்பு நடவடிக்கைகளில் ஆற்றலளித்தல் (empowerment) மிக முக்கியக் கருவியாக விளங்கும் அதே வேளையில், ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் எப்போதும் வாதிட்டு வந்துள்ளார். தமிழ்நாட்டில் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய குறிப்பிடத்தக்க இரு வறுமைக் குறைப்புத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. முதலாவதாக, ரூபாய் 717 கோடி செலவில், 15 மாவட்டங்களில் புதுவாழ்வுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அடுத்தது, மிக வறியவர்கள் தங்களுடைய வறுமை நிலையிலிருந்து மீளும் வகையில் அவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கி, சமூக மூலதனத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன், வறியவர்களிலும் மிகவறிய 3 இலட்சம் குடும்பங்களுக்கு பயனளிக்கும், மிகவறியோருக்கான வறுமைக் குறைப்புத் திட்டமாகும்.

27. தமிழக மக்கள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற இவ்வரசின் உறுதிப்பாட்டின் தொடர்ச்சியாக, பயனுள்ள உணவுப் பாதுகாப்பு வளையத்தை அமைக்கும் வண்ணம், பொது வினியோக முறையை திருத்தியமைத்துச் சீரமைக்கும் மாபெரும் பணியை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும், குடும்ப அட்டை பெறுவதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்துள்ளார். பழைய குடும்ப அட்டைகளைப் புதுப்பித்தல் மற்றும் தகுதியுள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் புதிய குடும்ப அட்டைகளை வழங்குதல் ஆகியவற்றால், மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 1.88 கோடியாக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் பொது வினியோக முறை நாட்டிலேயே மிகச் சிறந்ததென நடுநிலையான நிறுவனம் ஒன்று கணித்துள்ளது.

28. தமிழ்நாட்டைத் தவிர, வேறு எந்த ஒரு மாநிலத்திலும், அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற குறைந்த விலையில் தேவைப்படும் அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்படுவதில்லை. இத்திட்டம், ஆண்டொன்றுக்கு மானிய வகையில் ரூபாய் 1200 கோடி அளவிற்கு அரசுக்கு பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ளது. நிலை இவ்வாறிருக்க, மத்திய அரசு, பொது வினியோக முறையின் மூலம் வறுமைக்கோட்டிற்கு மேல் இருப்போர்க்கு வழங்கப்படும் அரிசியின் மத்திய இடு விலையை கிலோ

ஒன்றுக்கு ரூ. 8.30 லிருந்து ரூ.9.15 ஆக உயர்த்தியிருப்பது இவ்வரசுக்கு கடும் அதிருப்தி அளித்துள்ளது. மேலும், அனைத்து இனங்களிலும் குடும்ப அட்டை ஒன்றுக்கான ஒதுக்கீடும் குறைக்கப்பட்டுள்ளது. இம்முடிவால், மத்தியத் தொகுப்பிலிருந்து மாநில அரசால் வாங்கப்படும் அதிக விலையுடைய வறுமைக்கோட்டிற்கு மேலிருப்போர்க்கான அரிசியின் அளவும் அதிகரிக்கும். இது, மாநிலத்திற்கு மிகப் பெரும் கூடுதல் மானியச் சுமையை ஏற்படுத்தும். இவ்வாறு அரிசியின் விலை மிகக் கடுமையாக உயர்த்தப்பட்டிருக்கும் போதிலும், மாநிலத்தில் அரிசியின் விலை தொடர்ந்து கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற அளவிலேயே இருக்கும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். ஏழை எளியவரைப் பாதுகாப்பதற்காக இவ்வரசு மேற்கொண்டுள்ள இந்நடவடிக்கைகளின் விளைவாக ஆண்டுதோறும் ஏற்படும் ரூபாய் 300 கோடி கூடுதல் உணவு மானியச் சுமையால், ஓராண்டிற்கான மொத்த உணவு மானியம், ரூபாய் 1,200 கோடியிலிருந்து ரூபாய் 1,500 கோடியாக உயரும்.

29. ரூபாய் 250 கோடி செலவில், அனைத்து மாவட்டங்களிலும் அடிப்படை வசதித் தேவைகளை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்ட ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கான அடிப்படை வசதிகள் திட்டம் அண்மையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பன்னோக்குத் திட்டம், மாநிலம் முழுவதும் குடிநீர் வழங்கல், வெள்ளநீர் வடிகால் அமைத்தல், பள்ளிகள் மற்றும் சத்துணவு மையங்களை பழுதுபார்த்தல், தெருக்கள், நடைபாதைகள், அணுகுசாலைகள், இடுகாட்டுக்குச் செல்லும் பாதைகள் ஆகியவற்றை அமைத்தல் போன்ற பணிகளை செயற்படுத்துவதில் மாவட்ட நிருவாகத்திற்குத் தேவையான நிதியை அளித்து, அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும்.

30. ஊரக ஏழை மக்களுக்கு வீட்டுவசதிப் பாதுகாப்பு அளிப்பது, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இவ்வரசின் உயர் முன்னுரிமையைப் பெற்றுள்ளது. ஊரகப் பகுதிகளிலும் சிறப்பு கிராம ஊராட்சிகளிலும் 1991–க்கு முன்னர் கட்டப்பட்ட சுமார் 65,000 ஓட்டு வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக, அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ், தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1.5 இலட்சம் கூரை வீடுகளை நிரந்தர வீடுகளாக நிலை உயர்த்துவதற்காக, ரூபாய் 37.50 கோடி செலவில் 2005–2006 ஆம் ஆண்டில் பெருந்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது.

31. அனைவரும் பாராட்டும் "நமது கிராமம்" திட்டம், இம்மாநிலத்தில் ஒரு சமூக இயக்கமாக உருவெடுத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 100 சதவீத அளவிற்கு குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்த்தல், வறுமைக் குறைப்பு, சிசு இறப்பைக் குறைத்தல், பெண் கருக்கொலை மற்றும் சிசுக்கொலையை ஒழித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட கிராம சுகாதாரம் ஆகியவற்றை எய்துவதில், இப்புரட்சிகரமான திட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளிடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்கியுள்ளது.

32. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு இவ்வரசு உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது. 18,951 ஊரகக் குடியிருப்புகளிலும், 150 நகரங்களிலும் வசிக்கும் 1.5 கோடி மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூபாய் 2,423 கோடி செலவில் 2001–2006 ஆண்டுகளில், மொத்தம் 318 கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 223 கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டங்கள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன என்பதையும், இவற்றின் மூலமாக 10,043 ஊரகக் குடியிருப்புகளுக்கும் 91 நகர்ப்பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். மொத்தம் 22,069 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூபாய் 993 கோடி செலவில் தனி விசையேற்றங்கள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 239 கோடி செலவில் 39,796 கைப்பம்புகள் சிறிய விசையேற்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இவ்வரசின் அயராத திட்டமிட்ட தொடர் நடவடிக்கைகளால் தமிழ்நாட்டில் குடிநீர் வழங்கல் மிகவும் மேம்பட்டுள்ளது என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை ஆகும்.

33. வீடுகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழிவறைகள் கட்டியதன் மூலம், 2001 ஆம் ஆண்டில் 15 சதவீதமாக இருந்த ஊரக சுகாதார நிலை, 2005 ஆம் ஆண்டில் 57 சதவீதமாக அதிகரித்து, தமிழ்நாடு கிராமப்புற சுகாதாரத்தில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. மாநிலம் முழுவதிலுமுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ரூபாய் 278 கோடி செலவில் மகளிருக்காக ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டப்பட்டுள்ளது மனநிறைவு அளிக்கிறது. இவை மேலும் திறனுடன் செயல்படும் வகையில், இவற்றிற்கு தற்போது கரிம வாயுக் கலன்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

34. ரூபாய் 1,957 கோடி செலவில் தொடங்கப் பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்–III இவ்வரசின் மேலும் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். இத்திட்டத்தின் கீழ், 24 மாவட்டத் தலைமையிடங்களிலும் 13 மற்ற நகரங்களிலும் முழு அளவில் பாதாள சாக்கடை வசதிகள் ஏற்படுத்தப்படும். இது தவிர சென்னைப் பெருநகர்ப் பகுதியில் இரயில்வே மேம்பாலங்கள், இரயில்வே சுரங்கப் பாதைகள், மேம்பாலங்கள் (grade separators) ஆகியவை அமைக்கப்பட்டு சாலைக் கட்டமைப்பு

மேம்படுத்தப்படும். சென்னைப் பெருநகரப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் திறம்பட கையாளப்படுவதை இத்திட்டம் உறுதி செய்யும்.

35. ஏழைகளின் நலனுக்காகவே செயல்படும் இவ்வரசு, நகர்ப்புற ஏழை எளியவர் சந்தித்துவரும் பிரச்சனைகளுக்கு மிக உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. அவர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய வீட்டுவசதிகளை அளிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதுவரை, ரூபாய் 250 கோடி ஒதுக்கீட்டில் ஏறக்குறைய 30,000 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. 2005–2010 ஆண்டுகளில் ரூபாய் 250 கோடி ஒதுக்கீட்டில் நகர்ப்புற குடிசைப் பகுதி வீட்டுவசதி மேம்பாட்டிற்கான செயல் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

36. மாநிலம் முழுவதும் சாலை இணைப்பு வசதிகளை மேம்படுத்த, இவ்வரசு மிகப்பெரும் ஊக்கம் அளித்துள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 257 கோடியாக இருந்த மூலதனச் செலவு, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 2,081 கோடியாக ஏறக்குறைய 8 மடங்கு உயர்ந்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில், ரூபாய் 400 கோடி செலவில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் நிலையுயர்த்தப்பட்டு வருகின்றன. மேலும், சிறப்பு கிராம ஊராட்சிகளில் சாலைகளை புதுப்பிக்கும் சிறப்புத் திட்டம் ரூபாய் 100 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை தவிர 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 401 கோடி மதிப்பீட்டில் நகராட்சிப் பகுதிகளிலுள்ள சாலைகள் மேம்படுத்தப்படும். அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீரமைக்கும் பணிகளை, இவ்வரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. முக்கிய அடிப்படைக் கட்டமைப்பு வசதியான சாலை இணைப்புகளுக்காக, இதுவரை எந்த ஒரு அரசும் இவ்வளவு அதிக அளவில் முதலீடு செய்ததில்லை. இம்முதலீடு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மேலும் உயர வழிவகுக்கும்.

37. மத்திய அரசு டீசல் விலையை பலமுறை பெருமளவில் உயர்த்திய சூழ்நிலையிலும், அரசுப் பேருந்துப் போக்குவரத்து அமைப்புகளை நவீனப்படுத்தி, அரசுப் போக்குவரத்து நிறுவனத் தொழிலாளர்களுக்கு தாராள சம்பள உயர்வையும் வழங்கி, அதே நேரத்தில் பேருந்துக் கட்டண வீதத்தை நாட்டிலேயே மிகக் குறைவான அளவில் தொடர்ந்து வருவதற்கான பெருமை இந்த அரசையே சாரும். மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள், தங்களின் சிறந்த பணிகளுக்காக மூன்று விருதுகளையும் பெற்றுள்ளன.

38. இவ்வரசு 2001 ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது ரூபாய் 5,000 கோடி வருவாய் இழப்புடன் மோசமான நிதி நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டிருந்த தமிழ்நாடு மின்சார வாரியம், மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் சீரான நிதி நிலைமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டில் மத்திய அரசு தமிழ்நாட்டிலுள்ள அனல்மின் நிலையங்களுக்கு வழங்கப்படும் நிலக்கரியின் அளவை 14 சதவீத அளவிற்குக் குறைத்த போதிலும், 2001 ஆம் ஆண்டு முதல் இவ்வாரியம் மின்வெட்டு எதுவும் இன்றி நுகர்வோர் அனைவருக்கும் தரமான மின்சாரம் வழங்கி வருகிறது என்பதிலும், வருமாண்டுகளிலும் மின்வெட்டின்றி இதே நிலை தொடரும் என்பதிலும் நாம் அனைவரும் பெருமிதம் கொள்ளலாம். 2005–2010 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தின் மின் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படுவதை உறுதிசெய்ய, இவ்வரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 4,000 மெகாவாட் மின் உற்பத்தித்திறன் கொண்ட திட்டங்களுக்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள ஜெயங்கொண்டத்தில், 1000 மெகாவாட் திறன்கொண்ட மின்உற்பத்தி நிலையம் ஒன்றை, நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் நிறுவ உள்ளது. இது, மாநிலத்தின் மொத்த புதிய மின் உற்பத்தித்திறன் அதிகரிப்பை, 5000 மெகாவாட்டாக உயர்த்தும். இவ்வரசு தேவையான நடவடிக்கைகள் மூலம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதால், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவின் மொத்த காற்றாலை சக்தித் திறனில், 58 சதவீத அளவான 2,433 மெகாவாட் திறன் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டு இத்துறையில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

39. சென்னை நகரத்தின் உள் கட்டமைப்பு, புறச்சூழல் மற்றும் வசதிகள் மீது இவ்வரசு காட்டிய அக்கறையின் காரணமாக, இன்று சென்னை மாநகரம், “கிழக்கின் அணிகலன்” ஆகத் திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக் கொள்வார்கள். ரூபாய் 18,000 கோடி ஒதுக்கீட்டுடன் தற்போது செயற்படுத்தப்பட்டுவரும் பத்தாண்டு கால சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம், மின்வழங்கல், குடிநீர் மற்றும் வடிகால் வசதி, போக்குவரத்து மேலாண்மை மற்றும் பயண வசதிகள், வீட்டுவசதி போன்ற துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை புதுப்பித்து நிலை உயர்த்துவதில் மிகச்சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது. சென்னை மாநகரில் பூங்காக்களையும் நடை பாதைகளையும் ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த முயற்சி இம்மாநகரின் அழகிற்கு மெருகூட்டியுள்ளது. சென்னை மாநகரில் நெடுநாட்களாக நிலவிவந்த குடிநீர்ப் பற்றாகுறைப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பெருமை மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின் கீழான இவ்வரசையே சேரும். குறுகிய கால அளவில் அமைத்து சாதனை படைக்கப்பட்ட, நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய வீராணம் திட்டமானது, சென்னை நகருக்குக் குடிநீர் வழங்குவதில் சீரான நிலையைக் கொண்டு வந்துள்ளது. அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்து நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர்

திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். சென்னை மாநகர மக்களுக்குப் பயனளிக்கும் இத்திட்டம் உடன் நிறைவேற்றப்பட, சுற்றுப்புறச்சூழல் அனுமதியை உடனடியாக வழங்குமாறு இப்பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது. சென்னை மாநகருக்கு நிச்சயமான குடிநீர் வழங்கலை உறுதி செய்ய இவ்வரசு எடுத்த முனைப்பான நடவடிக்கைகளை சென்னை மாநகர மக்கள் என்றென்றும் நினைவில் கொள்வர்.

40. சென்னையின் போக்குவரத்து மேலாண்மைக்கு முற்றிலும் புதுமையான தீர்வுகள் தேவை என்பதை உணர்ந்த இவ்வரசு, சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் மிக அதிகப் போக்குவரத்துச் செறிவு மிகுந்த, 300 கிலோ மீட்டர் நீள அளவிலான வழிப்பாதைகளில், மோனோ இரயில் திட்டத்தை, பொதுத் துறை–தனியார் துறை பங்கேற்பு அடிப்படையில் செயல்படுத்த முடிவு செய்துள்ளது. இந்தத் திருப்புமுனையான முன் முயற்சி, சென்னைப் பெருநகரில் பயணம் செய்வதை ஓர் மகிழ்ச்சிகரமான அனுபவமாக மாற்றும் என நான் நம்புகிறேன்.

41. மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்கு கொண்ட, 'புதிய தொழில் கொள்கை – 2003', தமிழ்நாடு தொழில் துறையில் தனக்குள்ள அடிப்படை திறன்களை மேலும் வலுப்படுத்தி, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய மிகவும் விரும்பித் தேர்ந்தெடுக்கும் இடமாக உருவெடுப்பதற்கு பெரிதும் உதவியுள்ளது. தமிழ்நாடு, 2005–2006 ஆம் ஆண்டில் "வருங்கால ஆசியாவின் சாதனையாளர்" எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும், பைனான்சியல் டைம்ஸ் நாளிதழின் ஓர் அங்கமான "எஃப்டிஐ" பத்திரிகையால் (fDi magazine) "வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் திறன்கொண்ட மிகச் சிறந்த இடமாக" தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இந்திய மாநிலங்களிடையே, பொருளாதார சுதந்திரக் குறியீடு 2005 இன் அடிப்படையில், மிக எளிதில் தொழில் புரிவதற்கு ஏற்ற மிகச் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டு முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே முதலீடு செய்வதற்கு ஏற்ற இடங்களில், தமிழ்நாட்டை முதன்மை நிலைக்குக் கொண்டுவர மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த தளர்வில்லாத முயற்சிகளே காரணம் என்பதற்கு, நோக்கியா, ஃபிளெக்ஸ்டிரானிக்ஸ், பி.எம்.டபிள்யூ போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு முடிவு செய்திருப்பதே தக்க சான்றாகும்.

42. சேவைத் துறையில், குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளில், தமிழ்நாடு பெரும் சக்தியாக உருவெடுக்க வேண்டும் என்பதற்காக, இந்த அரசு எடுத்துள்ள முனைப்பான நடவடிக்கைகள் நற்பலனை அளித்துள்ளன. மின்–ஆளுமைக்கான ஆயத்த நிலையில், தமிழகம் முன்னிலை வகிப்பதாக நடுநிலை ஆய்வாளர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். 2004–2005 ஆம் ஆண்டில் மட்டும், தமிழ்நாட்டில் புதிதாக மொத்தம் 400 தகவல்–தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதாவது, தமிழ்நாட்டில் நாள்தோறும் குறைந்தது ஒரு தகவல் தொழில்நுட்ப நிறுவனம் அமைக்கப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி மும்மடங்காக அதிகரித்து ரூபாய் 10,730 கோடி அளவை எட்டியுள்ளது. இது, சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் மெச்சத்தக்கதான 40 சதவீதத்திற்கும் மேலான வளர்ச்சி எட்டப்பட்டுள்ளதைக் குறிக்கிறது. நிருவாகத்திறனை மேம்படுத்துவதற்கும், தரமான சேவையை வழங்குவதற்கும் தேவையான மின்–ஆளுமைக்கான தகவல் தொழில்நுட்பத்திற்கு, இந்த அரசு முனைப்பான ஊக்கம் அளித்து வருகிறது. தமிழ்நாடு மாநில அளவிலான பரப்பு வலை அமைப்பின் (TNSWAN) மூலம், வட்டம் மற்றும் வட்டார அளவில் தகவல் பரிமாற்றத்திற்கு வகை செய்யும் பரந்த அலை இணைய வசதிகளை வழங்கும் பெரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம ஊராட்சிகள் அனைத்தையும் கணினி மயமாக்கும் அரசின் இந்த முயற்சி, ஊரகப் பகுதிகளில் அறிவாற்றலையும் வளவாய்ப்புகளையும் விரிவுபடுத்துவதற்கு ஏற்றதொரு தூண்டு விசையாக அமையும்.

43. சேவைத் துறையை மேம்படுத்துவதிலும், உள்ளூர் வேலைவாய்ப்பை பெருக்குவதிலும், அதிக வாய்ப்புகள் உள்ள சுற்றுலாத் துறையை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டுள்ள ஒருங்கிணைந்த முயற்சிகள், இந்தியாவில் விடுமுறையைக் கழிப்பதற்கு ஏற்ற ஒரு சிறந்த இடமாக தமிழ்நாடு உருவாகத் துணை புரிந்துள்ளன. 2001–2006 ஆண்டுகளில் எப்போதுமிராத அளவில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு குறிப்பிட்ட சுற்றுலா சுற்றுப்பாதைகள் வகுக்கவும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே விடுமுறையைக் கழிக்க மிகச் சிறந்த இடமாக உருவாக்குவதற்கும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. செட்டிநாடு பாரம்பரிய சுற்றுலாவை மேம்படுத்தியமைக்காக, பசிபிக் பகுதி சுற்றுப் பயண எழுத்தாளர்கள் சங்கத்திடமிருந்து, தமிழ்நாடு மதிப்புமிக்க சர்வதேச விருதைப் பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவதில் மகிழ்ச்சி அடைவார்கள்.

44. ஏழை மக்களுக்கு சுகாதார வசதிகளை தரமானதாகவும் இயலும் வகையிலும் அளித்து, தமிழ்நாட்டை இந்தியாவின் மருத்துவத் தலைநகராக மாற்றியதில் இந்த அரசின் செயல்பாடுகள் குறிப்பிடத்தக்கவையாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில், 106 ஆரம்ப சுகாதார நிலையங்கள்

(PHCs) அனைத்து வசதியுடன் கூடிய 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலையுயர்த்தப் பட்டுள்ளன. இந்த அரசு, தொலைதூரப் பகுதிகளிலும் நோய்க்குறி அறியும் பணிகளை மேம்படுத்துவதற்காக, ரூபாய் 21 கோடி செலவில், ஏழு வட்டார நோய்க்குறி அறியும் மையங்களை ஏற்படுத்தியுள்ளது. தேனி, கன்னியாகுமரி, வேலூர் ஆகிய இடங்களில் 300 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ரூபாய் 3 கோடி செலவில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிலில் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டு வருகிறது. துணை மருத்துவப் பணியாளர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும், அவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், புதிதாக 11 செவிலியர் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. குழந்தைகளிடையே காணப்படும் "உதட்டுப் பிளவு" மற்றும் "மேலண்ணப் பிளவு" ஆகிய உடலுறுப்புப் பிரச்சினைகளைச் சரிசெய்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்த தனிச்சிறப்புத் திட்டம், இந்த அரசின் அக்கறை கொண்ட நிருவாகத்திற்கு மற்றோர் ஒளிரும் எடுத்துக்காட்டாகும். இவ்வுதவி தேவைப்படும் அனைத்து குழந்தைகளும் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 597 கோடி செலவில், செயல்படுத்தப்பட்டுவரும் முன்னோடித் திட்டமான தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் மேம்பாட்டுத்திட்டம், மாநிலம் முழுவதிலும் உள்ள இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் வழங்கப்படும் சேவையின் தரத்தை மேம்படுத்துவதில் ஒரு மைல் கல்லாகத் திகழ்கிறது. இத்திட்டத்தின் கீழ், 62 அரசு மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் அவசரகால மகப்பேறு மருத்துவச் சிகிச்சை மற்றும் பிறந்த குழந்தைகளைப் பேணும் பணிகளை வழங்கத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

45. இந்த அரசு, தான் செயல்படுத்திய முழுமையான சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் குடும்ப நலத் துறையில் பெரும் சாதனைகள் படைக்கப்பட்டிருப்பது குறித்து பெருமிதம் கொள்கிறது. கடந்த ஐந்தாண்டுகளில், முக்கிய சுகாதாரக் குறியீடுகளில் குறிப்பிடத்தக்க மேம்பாடு ஏற்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டில் 87.9 சதவீதமாக இருந்த மருத்துவமனை மகப்பேறுகள், 2005 ஆம் ஆண்டில் 94.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2001 ஆம் ஆண்டில், உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் சிசு மரணம் 49 ஆக இருந்தது. இது 2003 ஆம் ஆண்டில் 43 ஆகக் குறைந்துள்ளது. தமிழ்நாட்டில், மகப்பேற்றின்போது இறந்த தாய்மார்களின் எண்ணிக்கை, 2001–2004 ஆம் ஆண்டுகளில், 25 சதவீதம் குறைந்துள்ளது.

46. மக்கள் தரமான கல்வியைப் பெறுவதும் திறமைகளை பெருக்கிக் கொள்வதும் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அதிகரிப்பதோடு, அவர்கள் வாழவிரும்பும் வாழ்க்கைக்குத் தேவையான தகுதிகளைப் பெறச் செய்யும் வல்லமையும் படைத்தவை என்று மாண்புமிகு முதலமைச்சர் எப்போதுமே கருதிவந்துள்ளார். 2001 ஆம் ஆண்டு முதல் புதிய கல்வி நிறுவனங்களை தொடங்குவதிலும், தற்போதுள்ள கல்வி நிறுவனங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை நிலையுயர்த்துவதிலும், அரசு ஈடு இணையற்ற கவனம் செலுத்தி வருகிறது. புதிதாக 1,274 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள 2,790 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 394 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. 406 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. காலியாக இருந்த 58,282 ஆசிரியர் பணியிடங்களை அரசு நிரப்பியுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்க அரசு எடுத்துள்ள முடிவு பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக மிதிவண்டி வழங்கும் திட்டத்தை நீட்டித்த மாண்புமிகு முதலமைச்சரின் முடிவு, தமிழ்நாட்டில் தரமான கல்வியை அனைவரும் பெற வழிவகுக்கும் ஒரு திருப்புமுனை நடவடிக்கையாகும். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர், துரதிருஷ்டவசமாக, விபத்துகள் காரணமாக உயிரிழக்க அல்லது நிரந்தர செயலிழப்புக்குள்ளாக நேரிடின், அத்தகைய மாணவர்களுக்கு ரூபாய் 50,000 உதவித் தொகை வழங்கும் இவ்வரசின் திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

47. தொழிற்கல்வி இளநிலைப் பட்டப்படிப்புச் சேர்க்கைக்கான பொது நுழைவுத்தேர்வு, மாணவர்களுக்கு, குறிப்பாக ஊரக மாணவர்களுக்குப் பெரும் சுமையாகவும், மன உளைச்சலை ஏற்படுத்துவதாகவும் உள்ளது என்று கருதி, இத்தேர்வு முறையை இவ்வரசு 2005 ஜுன் திங்களில் ரத்து செய்தது. பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்யும் அரசின் இம்முடிவு பரவலாக வரவேற்கப்பட்ட போதிலும், இந்திய மருத்துவக் கழகம் மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் சில விதிமுறைகள் காரணமாக இதனைச் செயல்படுத்த இயலவில்லை. ஆகவே, இவ்விதிமுறைகளைத் திருத்தியமைக்குமாறு இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. தற்போது நிலவும் நிச்சயமற்ற நிலையைப் போக்கி, மாநிலப் பாடத்திட்ட மேல்நிலைதேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில், மாணவர் சேர்க்கை குறித்த தெளிவானதொரு திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்று பெற்றோர்களும் மாணவர்களும்

தொடர்ச்சி 65ஆம் பக்கம் பார்க்க



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# பொங்கல் திருநாள்

## வாழ்த்துச் செய்தி

**உ**லகத் தமிழர் எல்லாம் மகிழ்வோடு கொண்டாடும் பொங்கல் திருநாளில், எனது உளமார்ந்த பொங்கல் வாழ்த்துகளை அனைவருக்கும் உரிதாக்கி கொள்கிறேன்.

உழவைப் போற்றி உயர்வு பெற்ற தமிழர், உழவர்க்குச் சிறப்பளிக்கும் திருநாள்; உழவர் மகிழும் பெருநாள் – அதுதான் பொங்கல் திருநாள்! அந்த உழவர் பெருமக்கள் காலம் எல்லாம் களிப்போடு வாழ, உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்தோம்; உழவர் முகங்களில் மகிழ்ச்சி மலரக் கண்டோம்!

பொய்த்திருந்த வானம் பொங்கிப் பொழிந்ததால் காய்ந்திருந்த தமிழ் நிலத்தில் பாய்ந்து வந்தது வெள்ளம். வளம் கொடுக்கும் மழையே மக்கள் நலன் கெடுக்கும் சூழ்நிலையையும் தமிழகத்தில் ஏற்படுத்தியது. உடனே போர்க்கால அடிப்படையில் செயல்பட்டோம்; இதுவரை இல்லாத வகையில் பேருதவிகள் வழங்கி மக்கள் பெருந்துயர் போக்கினோம். பொங்கல் திருநாளில் புது உறுதியினை நாம் ஏற்போம். இயற்கை இடர்களின் வடுக்களை அகற்றி புதியதோர் தமிழகம் படைப்போம்!

பொங்கட்டும் பொங்கல்! பூக்கட்டும் புது வாழ்வு! எங்குமுள்ள தமிழர்கள் இன்பமுடன் வாழட்டும்!

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில் எனது அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும் என்னுடைய பொங்கல் திருநாள் வாழ்த்துகளை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



# ஆட்சிப் பொறுப்பேற்ற ஐந்தாண்டு காலத்திற்குள் அனைத்து தரப்பினரது நிலைமை உயர நித்தமும் திட்டமிட்டு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது இந்த அரசு

தேனி மாவட்டம், ஜெயமங்கலத்தில் நடைபெற்ற மாவட்ட அரசு விழாவில்,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை **(9–1–2006)**




**பா**ர்க்கும் திசை எல்லாம் நீக்கமற நிறைந்து, பாசம் பொங்கும் உள்ளத்தோடும், ஆர்வம் ததும்பும் விழிகளோடும் என்னை வரவேற்று மகிழ்ந்திருக்கும் என் அன்புக்குரிய ஆண்டிபட்டித் தொகுதிப் பெருமக்களே!

என் அருமைத் தொகுதி மக்களாகிய உங்களைச் சந்திப்பதிலும், உங்களோடு உரையாற்றுவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இது, ஆண்டிபட்டித் தொகுதியில் நடைபெறும் ஆறாவது மாவட்ட அரசு விழா! ஆறாவது தடவையாக நான் உங்களைக் காண்பதற்காக வந்திருக்கின்றேன். ஆறு முறையும் நீங்கள் பெருந்திரளாகக் கூடி என் மீது அன்பைப் பொழிந்திருக்கிறீர்கள்.

உங்கள் அன்பும், உங்கள் பாசமும் ஒரு கோடித் தடைகளை உடைத்தெறிகின்ற வல்லமையை எனக்குத் தருகின்றன.

சக்தி என்பது மக்கள் சக்தி தானே? மின் சக்தி என்றாலும், காந்த சக்தி என்றாலும், அணு சக்தி என்றாலும் அவை எல்லாம் மக்கள் சக்திக்கு அப்புறம் தான் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

ஆகவே தான் என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றன.

ஏழைகள், ஏழைகளாகவே இருந்துவிடக் கூடாது. அவர்களது நிலை உயர வேண்டும்!

அதற்காகவே அல்லும் பகலும் நான் உழைத்து வருகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்ற ஐந்தாண்டு காலத்திற்குள் ஏழை எளியோர், உழவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், மகளிர், மாணவர்கள், மீனவர்கள் என்று சமூகத்தின் அனைத்து தரப்பினரது நிலைமை உயர நித்தமும் திட்டமிட்டு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு.

இத்தனை பணிகளுக்கு இடையேயும் என் இதயம் ஆண்டிபட்டித் தொகுதியில் தான் இருக்கிறது.

அதனால் தான் இந்த மங்கலத் திருநாளில் ஜெயமங்கலம் வந்து என் அன்புக்குரிய உங்கள் அனைவரையும் காணுகின்றேன்; களிப்படைகின்றேன்.

எனது அன்புக்குரிய தேனி மாவட்ட மக்கள் பயனடையும் வகையில் 46 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள், அங்கன்வாடிக் கட்டடங்கள், சிமெண்ட் சாலைகள், கதிர் அடிக்கும் களங்கள், சமுதாயக் கூடங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சாலைகள், புதிய கட்டடங்கள், சிறு பாலங்கள், கண்மாய் சீரமைப்புப் பணிகள் என மொத்தம் 2,150 முடிவுற்ற பணிகளை இன்று இந்த இனிய விழாவில் திறந்து வைத்ததில் நான்

மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இதில், என்னுடைய ஆண்டிபட்டித் தொகுதியில் மட்டும் 12 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட 727 பணிகளை திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

முந்தைய ஆட்சியாளரால் ஏற்படுத்தப்பட்ட கடும் நிதி நெருக்கடியை திறம்பட வெற்றி கொண்டு; இயற்கை இன்னல்களையும், இடர்பாடுகளையும் சாதுர்யமாக சமாளித்து; மிகவும் துணிவோடும், சற்றும் துவண்டு விடாமலும் எனது அரசு மேற்கொண்ட முனைப்பான நடவடிக்கைகளால் வளம் மிக்க மாநிலமாக; தமிழக மக்களுக்கு நலம் சேர்க்கும் மாநிலமாக தமிழகம் இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம், தமிழகம் ஓர் அமைதிப் பூங்காவாக விளங்குவது தான். எந்த வளர்ச்சிக்கும் முதல் தேவையாக இருப்பது அமைதியும், பாதுகாப்பான சூழ்நிலையும் தான். அத்தகைய அமைதிச் சூழ்நிலையை உருவாக்குவதிலும் அதனைக் கட்டிக் காப்பதிலும் தமிழகக் காவல் துறை வேறு எந்த மாநில அல்லது மத்திய காவல் துறையை விட முன் நிற்கிறது என்பதை நான் மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகக் காவல் துறையை நவீனப்படுத்தவும், காவல் பணியை மேம்படுத்தவும், காவலர்களின் நலனைப் பேணவும் நான் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள்; நான் வழங்கி வரும் உதவிகள் ஆகியவற்றின் காரணமாகவே இது சாத்தியமாயிற்று. இந்த வகையில், தேனி மாவட்ட காவல் பணிகளை மேலும் மேம்படுத்தும் வகையில் 2 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்டக் காவல் அலுவலக புதிய கட்டடத்தையும்; 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தேனி ஆயுதப் படை வளாகத்தையும் இந்த இனிய விழாவில் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1 கோடியே 12 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள செவிலியர் குடியிருப்பு; 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நீராவி சலவையகம்; 93.76 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவ மாணவியர் விடுதி ஆகியவற்றை இன்று திறந்து வைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி வழங்கப் படுவதை நோக்கமாகக் கொண்டு, எனது அரசு கடந்த 5 ஆண்டுகளில் எண்ணற்ற குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்தி உள்ளது.

தேனி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், 2001–ஆம் ஆண்டில் நான் ஆட்சிப் பொறுப்பேற்ற போது மாவட்டத்தின் 698 ஊரகக் குடியிருப்புகளில் 271 குடியிருப்புகள் மட்டுமே முழுமையான குடிநீர் வசதி கொண்ட குடியிருப்புகளாக – அதாவது, நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டருக்கு மேல் குடிநீர் வழங்கப்படும் குடியிருப்புகளாக இருந்தன. 130 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எனது அரசு தொடர்ந்து மேற்கொண்ட பல்வேறு குடிநீர்த் திட்டங்களின் பயனாக தற்போது 690 குடியிருப்புகள் முழுமையான குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளாக மாறி உள்ளன என்பதையும்; பகுதி குடிநீர் வழங்கப்பட்டு வரும் மீதமுள்ள 8 குடியிருப்புகளுக்கும் அடுத்த மாத இறுதிக்குள் முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு விடும் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நகர்ப் பகுதிகளை பொறுத்தமட்டில், 2001–ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், தேனி மாவட்டத்தில் உள்ள 6 நகராட்சி மற்றும் 22 சிறப்பு ஊராட்சிகளில் ஒரு நகராட்சி மற்றும் 4 சிறப்பு ஊராட்சிகள் மட்டுமே முழுமையான அளவு – அதாவது, நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு நகராட்சிகளில் 90 லிட்டர்; சிறப்பு ஊராட்சிகளில் 70 லிட்டர் என்ற அளவில் குடிநீர் வசதி பெற்றிருந்தது. எனது அரசு 16 கோடியே 67 லட்சம் ரூபாய் செலவில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களை நகர்ப் பகுதிகளில் செயல்படுத்தியதன் விளைவாக தற்போது மேலும் 4 நகராட்சிகளும், 11 சிறப்பு ஊராட்சிகளும் முழுமையான குடிநீர் வசதி பெற்றவையாக விளங்குகின்றன. மீதமுள்ள 2 நகராட்சிகள் மற்றும் 7 சிறப்பு ஊராட்சிகளுக்கு முழுமையான அளவு குடிநீர் வழங்கும் வகையில் 8 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பிலான குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். இத்திட்டப் பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவுற்று தேனி மாவட்டம் முழுமையும் முழுமையான அளவு குடிநீர் பெறும் மாவட்டமாக விளங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில் தேனி மாவட்ட மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் 105 கோடியே 83 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள 2,114 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இதில், ஆண்டிபட்டித் தொகுதியில் மட்டும் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் 1,124 பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

தேனி மாவட்ட மக்கள் குறையற்ற மின் வசதியையும், தடையற்ற மின் விநியோகத்தையும் பெற்றிட ஏதுவாக 43 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கும்; காற்றாலை மின் திட்டத்திற்கான மின் மாற்றிகள் அமைத்திடவும்; இவ்விழாவில் நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகம் பல்வேறு துறைகளிலும் முதல் நிலை பெற்று, இந்தியாவில் முதன்மை மாநிலம் என்னும் பெருமையை நோக்கி பீடு நடை போட்டுக் கொண்டிருக்கிறது. அதே போன்று, தமிழகத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் முதன்மைத் தொகுதியாக

ஆண்டிபட்டித் தொகுதி உருவாகி உள்ளது. ஏனைய தொகுதிகள் எல்லாம் பொறாமை கொள்கின்ற அளவுக்கு கடந்த 5 ஆண்டுகளில் ஆண்டிபட்டி தொகுதி அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

ஆண்டிபட்டி தொகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் என்னென்ன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள் என்றாலும் இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் குறிப்பிட்ட சில சாதனைகளை இங்கே எடுத்துக் கூற விரும்புகின்றேன். ஆண்டிபட்டி சட்டமன்ற இடைத் தேர்தலின் போது நான் அளித்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல் பற்பல புதிய திட்டங்களையும் நான் நிறைவேற்றி உள்ளேன்.

74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட ஆண்டிபட்டி – சேடபட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம்; ஆண்டிபட்டியில் தொடங்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரி; 300 படுக்கைகள் கொண்டு தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை; முந்திரி பதப்படுத்தும் தொழில் கூட்டுறவு சங்கம்; இலவம் பஞ்சு தொழில் கூட்டுறவு சங்கம்; கடமலைக்குண்டு – வெள்ளிமலை பாலம்; தேனி மாவட்டத்திற்கான கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம்; 118 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள்; 126 கதிர் அடிக்கும் களங்கள்; ஆண்டிபட்டி, ரங்கசமுத்திரம் ஆதிதிராவிட மாணவர் விடுதிகள்; பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கென 6 விடுதிகள்; 7 புதிய துணை சுகாதார நிலையங்கள்; 30 படுக்கைகள் மற்றும் ஸ்கேன் வசதியோடு மேம்படுத்தப்பட்ட கடமலைக்குண்டு ஆரம்ப சுகாதார நிலையம்; 23 புதிய தொடக்கப் பள்ளிகள்; 29 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும்; 15 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும்; 7 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்வு; 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்; 200 தனி மின் விசை குடிநீர்த் திட்டங்கள்; 442 சிறு மின் விசை குடிநீர்த் திட்டங்கள்; 413 கிலோ மீட்டர் நீள சாலை மேம்பாட்டுப் பணிகள்; 34 பாலம் மற்றும் சிறு பாலப் பணிகள் – இவை எல்லாம், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக நான் எடுத்துக் கூறியுள்ள ஒரு சில முன்னேற்றப் பணிகள் ஆகும். எல்லாவற்றையும் கூற வேண்டுமானால் இந்த ஒரு நாள் போதாது.

ஆண்டிபட்டி மக்களுக்கு நான் அளித்த வாக்குறுதிகளில் இன்னமும் நிறைவேறாத திட்டம் ஒன்றே ஒன்று தான்! அது, ஆண்டிபட்டியில் அமைக்கப்படும் என நான் அறிவித்த தேனி மருத்துவக் கல்லூரியே ஆகும்.

ஆண்டிபட்டியில் தேனி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைப்பதற்காக எனது அரசால் 74 கோடியே 32 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு மருத்துவக் கல்லூரிக்குத் தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு, உபகரணங்களும் பொருத்தப்பட்டுள்ளன. தேவையான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகிய அனைவரும் நியமிக்கப்பட்டு இந்த மருத்துவமனையில் பணியாற்றி வருகின்றனர். எனினும், மாணவ மாணவியர் தங்கிப் பயில தற்காலிக மாற்று விடுதிக் கட்டடங்கள் இருந்தபோதிலும், புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படவில்லை போன்ற சிறிய குறைபாடுகளுக்காக மருத்துவக் கல்லூரியை துவங்குவதற்கான ஒப்புதலை இந்திய மருத்துவக் குழுமம் – Medical Council of India வழங்க மறுத்து விட்டது. அனுமதி பெற்றுத் தரக்கூடிய நிலையில் மத்திய அரசில் உள்ளவர்கள் அதனை செய்யாது விட்டுவிட்டார்கள் என்பதை நினைக்கும் போது எனக்கு ஒரு வேடிக்கை சம்பவம் நினைவுக்கு வருகிறது.

ஓர் அலுவலகத்தின் உயரிய பதவிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டார். எந்தத் தகுதியும் இல்லாத அவர், எப்படியோ எவருடைய சிபாரிசின் பேரிலோ அந்தப் பதவியில் உட்கார வைக்கப்பட்டார்.

தகுதியில்லாத அவர், அவரது பலவீனம் மற்றவர்களுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதில் மட்டும் வெகு கவனமாக இருந்தார்.

அவர் பதவியேற்ற அன்று ஒருவர் அவருடைய கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தார்.

யாரோ வருகிறார்கள் என்று தெரிந்ததும் உடனே தொலைபேசியை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு பேசத் தொடங்கினார் அந்த அதிகாரி. உள்ளே வந்த மனிதர் காத்திருந்தார். அந்த அலட்டல் அதிகாரியோ யாரோ ஒரு பெரிய VIP- உடன் பேசுவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தார். 10 நிமிட நேரம் இந்தப் பாசாங்கு செய்துவிட்டு அறைக்குள் வந்து நின்று கொண்டிருந்த ஆளிடம், 'Yes? சொல், உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டார்.

'ஐயா, எனக்கு ஒன்றும் வேண்டாம். உங்கள் தொலைபேசி இணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கிறது. உங்கள் டெலிபோனுக்கு Connection கொடுக்காமல் இருக்கிறது. அந்த Connection-ஐ கொடுப்பதற்காகத் தான் நான் வந்திருக்கிறேன்' என்று வந்த ஆசாமி சொன்னானாம்!

Connection இல்லாத தொலைபேசியில் கதை அளந்த ஜம்பக்கார மனிதரின் முகத்தில் இப்போது எத்தனை லிட்டர் அசடு வழிந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

தகுதியில்லாத அந்த அதிகாரியின் ஜபர்தஸ்துகளைப் போலத் தான் டில்லிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மனிதர்களின் நடவடிக்கைகளும் இருக்கின்றன. தமிழகம் வரும் போதெல்லாம் பல கோடி ரூபாய் திட்டங்களை மத்திய அரசிடமிருந்து பெற்று தருவோம் என்று வாய் சவடால் பேசும் இவர்கள் செய்வதெல்லாம், மாநில அரசு கொண்டு வரும் மக்கள் நலத் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவது தான்!

தேர்ந்தெடுத்த மக்களுக்குத் தினையளவு நலமேனும் வழங்க முடியாத இவர்களால் தமிழகம் இதுவரை பெற்றதென்ன? ஏதுமில்லை!

இதைத் தமிழக மக்கள் மிக நன்றாக உணர்ந்து விட்டார்கள்.

வேளாண் பெருங்குடி மக்கள் தங்களது தொழிலை இசைவுடன் செய்வதற்கு ஏதுவாக, அவர்களுக்குத் தேவ்வயான அனைத்து அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும், உதவிகளையும் வழங்கிட முனைப்பான நடவடிக்கைகளை நான் மேற்கொண்டு வருகிறேன். இதன் அடிப்படையில், பாசன நீர் ஆதாரங்களை பெருக்குவதற்கு பல்வேறு சிறப்பான திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. தேனி மாவட்டம், பெரியகுளம் பகுதியில் ஓடுகின்ற வராக நதியின் கிளை நதியான பாம்பாறு பழனி மலையின் தெற்குப் பகுதியில் உற்பத்தியாகிறது. இந்த நதியின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதன் மூலம் இப்பகுதியில் உள்ள நிலங்களுக்கு பாசன வசதி வழங்கிட முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, 53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 75.53 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட ஒரு நீர்த்தேக்கம் அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் மூலம், கீழ்வடகரை, வடகரை, தாமரைக்குளம், மேல்மங்கலம், சில்வார்பட்டி, ஜெயமங்கலம், குள்ளபுரம் ஆகிய 7 கிராமங்கள் பயன் பெறும். இதன் மொத்த ஆயக்கட்டாக 4,424.45 ஏக்கர் நிலம் அமையும். இதில், எனது ஆண்டிபட்டி தொகுதியில் மட்டும் 2,738.99 ஏக்கர் நிலம் புதிதாக பாசன வசதி பெறும் என்பதைத் தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பெரியார் அணையிலிருந்து பாசனத்திற்காக விடுவிக்கப்படும் தண்ணீர், சுருளி ஆற்றிலிருந்து பாளையம்பரவு கால்வாய் மற்றும் P.T. ராஜன் கால்வாய் ஆகியவற்றின் மூலம் கொண்டு செல்லப்பட்டு, சின்னமனூர் மற்றும் தேனி பகுதிகளில் உள்ள நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்படுகிறது. P.T. ராஜன் கால்வாய், பாளையம்பரவு கால்வாயின் கடைமடை பகுதியிலிருந்து ஆரம்பித்து சுமார் 5,445 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கிறது. பாளையம்பரவு கால்வாயின் தற்போதைய நீர் வழங்கு திறன் விநாடிக்கு 90 கன அடியாக உள்ளதால் கடைமடை பகுதிகளுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கப் பெறவில்லை என்றும், எனவே, தங்கள் பகுதிகளுக்கு போதிய தண்ணீர் கிடைக்கப் பெற்றிட ஆவன செய்ய வேண்டும் என்றும் இப்பகுதி மக்கள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலனை செய்து இந்தக் கடைமடை பகுதிகளுக்கும் தேவையான அளவு தண்ணீர் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யும் வகையில் ஒரு புதிய திட்டத்தை 5 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இக்கால்வாய்களின் நீர் வழங்கு திறனை மேம்படுத்தும் வகையில் பாளையம்பரவு கால்வாயின் இரு கரைகளையும் சுமார் 50 செ.மீ. அளவுக்கு உயர்த்துவது மற்றும் அதன் தொடர்பான பல்வேறு பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். இதன் மூலம், இக்கால்வாயின் நீர் வழங்கு திறன் 90 கன அடியிலிருந்து 150 கன அடியாக உயரும். இதன் பயனாக P.T. ராஜன் கால்வாய், தந்தை பெரியார் கால்வாய் மற்றும் அதனை சார்ந்த 17 கண்மாய்கள் மூலம் சுமார் 5,445 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதிபடுத்தப்படும்.

வளர்ந்து வரும் விஞ்ஞான முன்னேற்றத்திற்கு ஈடு கொடுத்து தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களும் மேம்பாடு காண வேண்டும் என்னும் அடிப்படையில் தமிழகத்தில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகளுக்கும் 69 கோடியே 81 லட்சம் ரூபாய் செலவில் கணினிகள் வழங்க நான் முடிவு செய்தேன். இதன் அடிப்படையில், இதுவரை சுமார் 4,300 கிராம ஊராட்சிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தேனி மாவட்டத்தைப் பொறுத்தவரை 130 கிராம ஊராட்சிகளில் இதுவரை 24 கிராம ஊராட்சிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய 106 கிராம ஊராட்சிகளுக்கும் இன்று இந்த இனிய விழாவில் கணினிகளை நான் வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் இவ்வாண்டு மார்ச் மாதத்திற்குள்ளாக கணினிகள் வழங்கப்பட்டு ஊராட்சி அலுவல்கள் கணினிமயம் ஆக்கப்பட்டு விடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடைபெறும் இந்த இனிய விழாவில் 6 கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 16,605 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை அனைவருக்கும் என் கையாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், நேரம் குறைவாகவே இருப்பதால், இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை நான் வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அதிகாரிகளும், இப்போதே இங்கேயே உதவிகளை வழங்குவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜேஷ் லக்கானி அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! எனக் கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம். ❖

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசு அறிவித்துள்ள நிவாரணத் தொகுப்பு உதவி உறுதியாக வழங்கப்படும்

## - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு -



6.11.2005 அன்று சென்னை வியாசர்பாடியில் நடந்ததைப் போன்று, சென்னை எம்.ஜி.ஆர். நகரில் 18.12.2005 அன்று கூட்ட நெரிசலில், உயிர் இழப்புகள் ஏற்பட்ட சோகச் சம்பவம், எனக்கு மிகுந்த துயரத்தையும், வேதனையையும் அளித்துள்ளது. நெஞ்சைப் பிளக்கும் இந்தச் சோகச் சம்பவத்தால் நான் தாங்கொணா வேதனைக்கும், கடும் துயரத்திற்கும் ஆளாகி உள்ளேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினருக்கும், அவர்களது வாழ்க்கையை மறுசீரமைத்துக் கொள்ள வகை செய்யும் தொகுப்பு உதவி அளிக்கப்படும் என்று நான் திரும்பத் திரும்ப உறுதிபடக் கூறியிருந்தும், இத்தகையதொரு சோகச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. பாதிக்கப்பட்ட எந்த ஒரு குடும்பமும் விடுபட்டுப் போகாது என மக்களுக்கு நான் திரும்பத் திரும்ப உறுதி அளித்துள்ளேன். ஒருவர் கூட விடுபட்டுப் போகாமல், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிவாரண உதவி கிடைப்பதை உறுதிப்படுத்துவதே என்னுடைய குறிக்கோள் என்று நான் ஊடகங்களுக்கு அளித்த பேட்டிகளின் வாயிலாகவும், பத்திரிகைச் செய்திகள் வாயிலாகவும் திரும்பத் திரும்ப தெளிவுபடத் தெரிவித்துள்ளேன். தங்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரண உதவி கிடைக்காமல் போய்விடுமோ என்ற கவலையோ, அச்சமோ எவரும் கொள்ளத் தேவையில்லை என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஏனென்றால், இந்த உறுதிமொழி, உங்களுடைய முதலமைச்சரும், நிலையான உறுதி படைத்த உங்கள் பாதுகாவலரும் ஆகிய என்னால் வழங்கப்பட்டதாகும். என்னுடைய அரசுக்கு எதிரான, தீய நோக்கம் கொண்ட சுயநல சக்திகள் உருவாக்கக் கூடிய எந்த ஒரு முட்டுக் கட்டையையும் முறியடித்து இந்த உறுதிமொழியை நான் உளப்பூர்வமாகவும், உறுதியோடும், தீர்மானத்தோடும் நிறைவேற்றியே தீருவேன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும், உதவி தேவைப்படும் இந்த நேரத்தில் தொகுப்பு உதவிகள் கிடைப்பதை நான் நேரடியாக உறுதி செய்துள்ளேன். வேறு எந்த ஒரு அரசும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் இவ்வளவு தாராள மனப்பான்மையோடு கணிசமான தொகுப்பு உதவி அளித்தது இல்லை என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்கிறார்கள். சென்னையில் ஒரு தெரு பாதிக்கப்பட்டிருந்தால், வீடு வீடாகக் கணக்கு எடுக்கும் வழக்கமான, சிக்கல் மிகுந்த நடைமுறையைப் பின்பற்றாமல்; வெள்ள நீர் சூழ்ந்ததால்

வீட்டை விட்டு வெளியேற முடியாமல் பாதிக்கப்பட்ட, தரைத் தளத்துக்கு மேல் வசிப்பவர்கள் உள்ளிட்ட, அத்தெருவில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் (குடும்பங்களுக்கும்) நிவாரணத் தொகுப்பு உதவி அளிக்கப்பட வேண்டுமென நான் ஆணையிட்டுள்ளேன். வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இத்தகைய தாராளமான, விரைவான அணுகுமுறை பின்பற்றப்படவில்லை. மேலும், ஒரு குடியிருப்பு அல்லது ஒரு வார்டில் ஒரே ஒரு நாள் வெள்ள நீர் சூழப் பட்டிருந்தாலும், அப்பகுதியில் வசிக்கும் அனைத்துக் குடும்பங்களுக்கும் நிவாரண உதவி அளிக்கப்படும் என்பதை நான் மிகத் தெளிவுபடக் கூறியுள்ளேன். இந்த தாராளக் கொள்கையினாலேயே, நான் வழங்கும் இந்த நிவாரணத் தொகுப்பு உதவியை, இதுவரை இல்லாத அளவுக்கு, தமிழகம் முழுவதும் 18 லட்சம் குடும்பங்கள் பெற்றுள்ளன. சென்னையில் மட்டும், இதுகாறும் இல்லாத அளவாக, 5.11 லட்சம் குடும்பங்கள் இதுவரை வெள்ள நிவாரணத் தொகுப்பு உதவி பெற்றுள்ளன.



மக்களின் முழு ஒத்துழைப்போடு நிவாரண உதவி அளிக்கின்ற இந்த அசாதாரணமானதும், மிகப் பெரிய அளவிலானதும் ஆன பணி, மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்ற இந்த வேளையில், வெள்ள நிவாரணப் பணிகளில் அபார சாதனை படைத்து வரும் என்னுடைய அரசுக்கு அவப் பெயரையும், களங்கத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், என்னுடைய அரசின் மீது கடும் பகைமை கொண்டுள்ள தி.மு.க. தலைமையிலான எனது அரசியல் எதிரிகளின் ஆதரவோடு, சில தீய, சமூக விரோத, விஷமிகள் திட்டமிட்டு, கொடிய முறையில் செயல்பட்டுள்ளது கண்டிக்கத் தக்கதும், அருவருக்கத் தக்கதும் ஆகும். வெள்ள நிவாரணத் தொகுப்பு உதவிகள் வழங்குவதில் என்னுடைய அரசுக்கு கிடைத்து வருகின்ற நற்பெயரைக் கண்டு, பொறுக்கமாட்டாமல், பொறாமைத் தீயில் புழுங்கித் தவித்து, ஈவு இரக்கமற்ற முறையில், தீய நோக்கத்துடன், திட்டமிட்டு வீண் வதந்திகளைப் பரப்பும் கெடுமதியாளர்கள், மனித உயிர்களை பலி கொள்கிற அளவுக்கு தரம் தாழ்ந்து செயல்பட்டிருப்பது எனக்கு மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது.

எனது அரசுக்கு எதிராகச் செயல்படுகின்ற – எத்தகைய குறுக்கு வழியைக் கையாண்டேனும் அதிகாரத்தைக் கைப்பற்றத் துடிக்கின்ற தி.மு.க.வின் ஆதரவைப் பெற்ற, இத்தகைய வஞ்சக, பழி வாங்கும் நோக்கம் கொண்ட, நச்சு சக்திகள், பீதியைப் பரப்பி, நெரிசலை ஏற்படுத்திய கோரச் செயலின் மூலம், என்னுடைய அரசு மேற்கொண்டு வருகின்ற சீரிய பணிக்கு களங்கம் ஏற்படுத்த முனைந்துள்ளார்கள். சீராக நடைபெற்று வருகின்ற நிவாரணத் தொகுப்பு உதவி விநியோகப் பணிகளைச் சீர்குலைத்து, அதன் மூலம், என்னுடைய அரசின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தோடு, இத்தகைய பொய் வதந்திகள், தி.மு.க. மற்றும் ஏனைய சுயநல சக்திகளால் திட்டமிட்டுப் பரப்பப்பட்டு வருகின்றன. இப்படியாக, ஒரு சிலருக்கு மட்டுமே நிவாரண உதவி அளிக்கப்படும் என்றும், இதற்கான அரசு நிதி குறைவாகவே இருக்கிறது என்றும், விரைவில் அது தீர்ந்து விடும் என்றும், என்னுடைய அரசியல் எதிரிகளால் வதந்திகள் பரப்பப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று நான் திரும்பத் திரும்ப மக்களுக்குத் தெளிவுபடுத்திய நிலையில், இவை முற்றிலும் ஆதாரமற்ற வீண் வதந்திகளே ஆகும். முதலில் வரும் ஒரு சிலருக்கு மட்டுமே அதாவது, சுமார் 200 பேர் என்ற அளவுக்கு மட்டுமே, நிவாரண உதவி கிடைக்கும் என்றும்,

நிவாரண உதவி வழங்கும் பணி அன்றோடு முடிந்து விடும் என்றும், அதற்கு மேல் தொடராது என்றும், தி.மு.க.-வின் முழு ஆதரவைப் பெற்ற இவர்கள் ஒரு புரளியைப் பரப்பி இருக்கிறார்கள். உண்மையில், இவை அறவே ஆதாரமற்றவை ஆகும். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிவாரணத் தொகுப்பு உதவி கிடைக்கின்ற வரை, திட்டவட்ட இறுதி நாள் எதுவும் நிர்ணயிக்கப்படாமல், இவ்வரசு தொடர்ந்து நிவாரணத் தொகுப்பு உதவியை வழங்கும்.



மக்கள் நலன் காக்கும் என்னுடைய நல்லாட்சிக்கு எதிரான சில சுயநல, தீய சக்திகள், வேண்டுமென்றே பரப்பி வருகின்ற இத்தகைய பொய்யான, தீய வதந்திகளை நம்ப வேண்டாம் என நான் ஒவ்வொருவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிவாரண உதவி கிடைப்பதை நான் நிச்சயமாக உறுதி செய்வேன். நான் ஏற்கெனவே இந்த உறுதிமொழியை அளித்திருக்கிறேன். அதை நிறைவேற்றியே தீருவேன். இந்த உறுதிமொழியை அளித்திருப்பது நானே என்பதால், எவரும் தங்களுக்கு நிவாரண உதவிகள் கிடைக்காமல் போய் விடுமோ என்று அஞ்சத் தேவையில்லை. இந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதே என்னுடைய குறிக்கோள். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிவாரணத் தொகுப்பு உதவியை வழங்குவதற்குத் தேவையான நிதியை என்னுடைய அரசு ஒதுக்கியுள்ளது. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் உதவி அளிப்பதான இந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்ற வரையில் நான் ஓயமாட்டேன். எனவே, நிவாரணத் தொகுப்பு உதவி கிடைக்காமல் போய்விடுமோ என்று எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. தி.மு.க. தலைமையிலான அரசியல் சந்தர்ப்பவாதிகளின் தூண்டுதலின் பேரில், சில சுயநல சக்திகளும், விஷமிகளும், திட்டமிட்டு செய்து வருகின்ற பொய்ப் பிரச்சாரங்களையும், வதந்திகளையும் நம்ப வேண்டாம் என நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அரசு நிருவாகம் கூறுவதை மட்டுமே பின்பற்ற வேண்டும் என நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள இச்சவால்களை தீரத்தோடும், உறுதியோடும் எதிர்கொண்டு, தமிழகம், சுயநல சக்திகளின் தீய நோக்கங்களைத் தோற்கடிக்க வேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக மக்கள், தங்களது வாழ்க்கையை விரைந்து புனரமைத்து, வளமையை நோக்கிய பாதையில் முன்னேறுவதை உறுதி செய்வதே என்னுடைய லட்சியம் ஆகும். உள்ளபடியே ஏழை எளிய மக்களின் நலனுக்கு எதிராகத் தான் தாங்கள் செயல்படுகிறோம் என்பதைப் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல், எனக்கு அவப் பெயரை ஏற்படுத்துவதற்காக எந்த அளவுக்கும் செல்லக் கூடிய தி.மு.க. தலைமையிலான என்னுடைய அரசியல் எதிரிகள், காழ்ப்புணர்ச்சியோடு செய்து வரும் பொய்ப் பிரச்சாரங்களுக்கு செவி சாய்க்க வேண்டாம் என பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினரையும் நான் மீண்டும் ஒரு முறை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஏழை எளியோரின் நலனுக்கு எதிராக செயல்பட்டு, வெள்ள நிவாரண விநியோகப் பணி திறமையாக நடைபெறுவதைக் கெடுக்கின்ற காழ்ப்புணர்ச்சி கொண்ட, கெடுமதியாளர்களின் தீய நோக்கங்களையும், திட்டங்களையும், நான் முறியடிப்பேன். இம்மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும், எனது அரசு அறிவித்துள்ள நிவாரணத் தொகுப்பு உதவி கிடைப்பதை உறுதிப்படுத்தும் என்னுடைய குறிக்கோள் நிறைவேறும் வரை நான் ஓயமாட்டேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 21.12.2005



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் கூடுதலாக 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க ஆணை

தமிழகத்தில் வரலாறு காணாத வகையில் கடந்த 2 மாதங்களில் பெய்த கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்க்கையை மறு சீரமைப்பு செய்யும் வகையில் வெள்ள நிவாரண தொகுப்புதவியை வழங்கிட நான் ஆணையிட்டேன். வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படாத, மிக தாராளமான, விரைவான அணுகுமுறையைப் பின்பற்றி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எந்தவொரு குடும்பமும் விடுபட்டுப் போகாத வகையில் பாதிப்புக்குள்ளான அனைத்து குடும்பங்களுக்கும் கணிசமாக வெள்ள நிவாரண தொகுப்புதவியை எனது அரசு வழங்கி வருகிறது.

இந்த உதவித் தொகுப்பில் ரொக்க உதவி, அரிசி, வேட்டி, சேலை ஆகியவற்றுடன் பாதிக்கப்பட்ட ஏழை, எளிய குடும்பத்தினர் பயன்படுத்துகின்ற எரிபொருள் தேவையைக் கருத்தில் கொண்டு, ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும் இலவசமாக வழங்கிட நான் ஆணையிட்டேன்.

கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்காலும், தொடர் மழையாலும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள ஏழை, எளிய மக்கள் தங்களது இல்லங்களில் விளக்கு ஏற்றுவதற்கும், சமையல் செய்வதற்கும் பயன்படுத்துகின்ற எரிபொருளைத் தடையின்றி வழங்கும் வகையில், சிறப்பு ஒதுக்கீடாக 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் கூடுதலாக மத்திய அரசு வழங்கிட வேண்டுமென்று, மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் தமிழகத்தின் சார்பாக வெள்ள நிவாரண உதவி கேட்டு விடுத்த கோரிக்கையில் நான் கேட்டுக் கொண்டேன். மேலும், 16.12.2005 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புதுடெல்லியில் நான் நேரில் சந்தித்து வெள்ள நிவாரண உதவி கேட்டு கோரிக்கை விடுத்த நேரத்திலும் இதனை வலியுறுத்தினேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், எனது இந்தக் கோரிக்கையினை ஏற்று, ஏற்கெனவே வழங்க உத்தரவிட்டிருந்த 10,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயுடன், கூடுதலாக மேலும் 10,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை சிறப்பு ஒதுக்கீடாக தமிழகத்திற்கு வழங்க 16.12.2005 அன்றே உத்தரவிட்டார். இதன்படி, வெள்ள நிவாரணத்திற்காக 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கிட வேண்டுமென்று நான் விடுத்த கோரிக்கையில், இதுவரை 20,000 கிலோ லிட்டர் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும், அவர்களது சமையல் மற்றும் விளக்கு எரிபொருள் தேவையை ஈடுசெய்யும் வகையில், பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு மாதமும், தற்போது அவர்கள் வாங்குகின்ற மண்ணெண்ணெயுடன் கூடுதலாக மாதம் ஒன்றுக்கு 3 லிட்டர் மண்ணெண்ணெய் வீதம், 2 மாதங்களுக்கு வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எல்லா குடும்பங்களும், தங்களது குடும்ப அட்டையின் அடிப்படையில் வழக்கமாக பெற்று வரும் மண்ணெண்ணெயுடன், டிசம்பர் 2005 மற்றும் ஜனவரி 2006 ஆகிய இரண்டு மாதங்களுக்கு, ஒவ்வொரு மாதமும் 3 லிட்டர் வீதம் இந்த கூடுதல் மண்ணெண்ணெயை வாங்கிக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 22.12.2005

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள பல்வேறு நிவாரண உதவிகள் மற்றும் மறுவாழ்வு திட்டங்கள் பற்றிய புத்தகம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்



தமிழகத்தின் வரலாறு காணாத வகையில், கடந்த ஆண்டு அதாவது 26.12.2004 அன்று சுனாமி ஆழிப் பேரலைகள் தமிழக கடலோர மாவட்டங்களை கடும் சீற்றத்துடன் தாக்கியதில் வீடுகளையும், உடைமைகளையும் இழந்த இலட்சக்கணக்கான குடும்பங்கள் நிரந்தர மறுவாழ்வு பெற்றிட தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள பல்வேறு நிவாரண உதவிகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் மறுவாழ்வு திட்டங்களை உள்ளடக்கி, வருவாய்த் துறையின் சார்பில் வடிவமைத்து உருவாக்கப்பட்டுள்ள "TIDING OVER TSUNAMI" என்னும் புத்தகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 26.12.2005 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்கள்.

2004-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26ஆம் நாள், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களைத் தாக்கிய சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளித்திட மிகுந்த முனைப்போடும், உத்வேகத்தோடும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகின்ற நிரந்தர மறுவாழ்வுப் பணிகள், சுனாமி பாதித்த பகுதிகளை பார்வையிட்ட மேதகு குடியரசுத் தலைவர், ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதி, மத்திய அரசின் உயர் மட்ட அலுவலர் குழு, உலக வங்கி – ஆசிய வளர்ச்சி வங்கி – ஐரோப்பிய யூனியன், ஆகியவற்றின் பிரதிநிதிகள் தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், ஊடகங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் ஆகிய பல்வேறு தரப்பினரின் பாராட்டைப் பெற்றுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டோர் நிரந்தர மறுவாழ்வு பெற்றிட, தமிழக அரசால் 1,136 கோடி ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஏறத்தாழ 880 கோடி ரூபாய் செலவில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**நிரந்தர குடியிருப்புகள்**

சுனாமியின் பாதிப்பால் தங்களது வீடுகளை இழந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தரும் வரையில், உடனடித் தேவையாக 32,378 தற்காலிக வீடுகள்

32 கோடி ரூபாய் செலவில் அமைத்துத் தரப்பட்டன. சுனாமியால் முழுமையாக வீடு இழந்து பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்ட சிறப்பு நடவடிக்கைகள் மூலம் 26 கோடி ரூபாய் செலவில் 1,210 ஏக்கர் நிலம் தமிழக அரசால் கையகப்படுத்தப்பட்டு, நிரந்தர வீடுகள் கட்டும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழக அரசும், தமிழக அரசின் ஊக்குவிப்புடன் தொண்டு நிறுவனங்களும் சேர்ந்து மொத்தம் 45,892 நிரந்தர வீடுகளை கட்டி வருகின்றன. இதுவரை 5,135 நிரந்தர வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மேலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட 3,957 வீடுகள் பழுது நீக்கி செப்பனிடப்பட்டுள்ளதுடன், 3,713 வீடுகளில் செப்பனிடும் பணி நடைபெற்று வருகிறது.

**மீனவர்களுக்கான மறுவாழ்வு திட்டங்கள்**

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில், சேதமடைந்த வல்லங்கள், கட்டுமரங்கள், மீன்பிடி வலைகள், மோட்டார் படகுகள் மற்றும் பழுது நீக்கம் / மறுகட்டுமானம் செய்திடும் பொருட்டு, அரசின் சார்பில் 143 கோடி ரூபாய் நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

**விவசாய நிலங்களைச் சீரமைத்தல்**

பாதிக்கப்பட்ட 8 ஆயிரத்து 460 எக்டேர் விளை நிலங்களை சீரமைத்திடும் பொருட்டு, 4 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில், சுனாமி விவசாயிகள் சுய உதவி குழுக்கள் மூலமாக விவசாய நிலங்களைச் சீரமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட 670 ஹெக்டேர் தோட்டக்கலை பயிர் நிலங்களையும் 67 லட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

பாதிக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளான சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், பாலங்கள் ஆகியவற்றினை சீரமைத்திட 88 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் சம்பந்தப் பட்ட துறைகளின் மூலமாக பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டையில் 10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் மேம்பாலம் முடிவுறும் தருவாயில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் மேலமணக்குடி மற்றும் கீழமணக்குடி ஆகிய கிராமங்களை இணைக்கும் தற்காலிக பாலம் ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு 26.12.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**மாணவர்களுக்கு இலவச பாடநூல்கள் மற்றும் நோட்டு புத்தகங்கள்**

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் இப்பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் இயங்கும் வகுப்புகளில் முதல் வகுப்பு தொடங்கி 12ஆம் வகுப்பு முடிய பயிலும், ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 264 மாணவ, மாணவியருக்கு இலவசமாக பாடநூல்கள் மற்றும் நோட்டு புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளன.

**மாணவர்களுக்கு இலவச சீருடைகள்**

2 கோடியே 91 லட்சம் ரூபாய் செலவில், ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 999 மாணவ – மாணவிகளுக்கு தலா இரண்டு இணை சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்**

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பொருளாதார சீர்குலைவினை கருத்தில் கொண்டு, அக்குடும்பங்களை சார்ந்த மாணவ, மாணவியர் கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் ஆகியவற்றை செலுத்துவதில் இருந்து விலக்களித்து 1.1.2005 முதல் 2005–2006 கல்வியாண்டு வரையிலான கட்டணங்களை அரசே செலுத்தவும், 1.3.2005 முதல் 2005–2006 கல்வியாண்டு வரையிலான தேர்வுக் கட்டணங்களிலிருந்து அவர்களுக்கு விலக்களித்திடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது ஆணைப்படி, பள்ளி மாணவ, மாணவியர் நலனைப் பேணிடும் வகையில் மேற்கண்ட பல்வேறு திட்டங்களுக்காக 14 கோடியே 40 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. நூற்றுக்கும் அதிகமான பள்ளிகள் பராமரிப்பு செய்யப்பட்டு, புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

இதுவன்றி, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 121 பள்ளிகளில் பயின்று பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவர்களுக்கு தனியே பொதுத்தேர்வு நடத்தப்படும் என அரசு அறிவித்ததன் அடிப்படையில், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தனியே பொதுத் தேர்வு நடத்தப்பட்டது. அதன் பயனாக, இத்தேர்வு எழுதியவர்களின் தேர்ச்சி விகிதங்கள் ஏனைய மாணவர்களின் தேர்வு விகிதங்களைக் காட்டிலும் கூடுதலாக உள்ளன.

**பெற்றோரை இழந்த குழந்தைகள், பாதிக்கப்பட்ட ஆதரவற்ற வளர்இளம் பெண்கள் ஆகியோருக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள்**

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், பெற்றோரை இழந்த குழந்தைகளுக்காக கடலூர், நாகப்பட்டினம்






மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 3 மறுவாழ்வு இல்லங்கள் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு இல்லத்திலும் 100 குழந்தைகள் வரை தங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஆதரவற்ற வளம் இளம் பெண்கள் அனைவரும் தமிழக அரசின் சார்பில் நடத்தப்படும் சேவை இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். கன்னியாகுமரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 2 புதிய சேவை இல்லங்கள் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

சுனாமி பாதிப்பால் பெற்றோர்களை இழந்த ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற வளர் இளம் பெண்கள் ஆகியோரின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு, அத்தகைய ஒவ்வொருவரின் பெயரிலும் தலா 5 லட்சம் ரூபாய் வைப்புநிதியாக செலுத்திடவும், இத்தொகையினை கல்வி மற்றும் சுய வேலை வாய்ப்புக்காக, அவர்களது 18ஆம் வயதில் வட்டித் தொகையுடன் வழங்கிடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில், 112 குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற வளர் இளம் பெண்கள் ஒவ்வொருவர் பெயரிலும் தலா 5 லட்சம் ரூபாய் வீதம் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது.

அதே போல், திருமணமாகாத 18 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற வளர் இளம் பெண்கள் சேவை மையங்களில் அனுமதிக்கப்பட்டு, வேலை வாய்ப்பு தொடர்பாக பயிற்சிகளை வழங்கவும், அவர்களது பெயரில் தலா 3 லட்சம் ரூபாய் வைப்புநிதியாக செலுத்தி, அவர்களது எதிர்கால நலனை உறுதிப்படுத்திடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டவாறு சுனாமி பாதிப்புக்குள்ளாகி ஆதரவை இழந்த வளர்இளம் பெண்கள் 38 பேர்கள் பெயரிலும் தலா 3 லட்சம் ரூபாய் வைப்புநிதியாக செலுத்தப் பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மறுவாழ்வு பெறுவதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது நேரடிப் பார்வையின் கீழும், தொடர்ந்த கண்காணிப்பின் கீழும் உறுதி செய்து வருகிறார்கள். இவ்வாறு, சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், நிரந்தர மறுவாழ்வு பெற்றிட தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள பல்வேறு நிவாரண உதவிகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் மறுவாழ்வு திட்டங்களை உள்ளடக்கி, "TIDING OVER TSUNAMI" என்னும் தலைப்பில் ஒரு புத்தகத்தை வருவாய்த் துறை வடிவமைத்து உருவாக்கியுள்ளது. உலகளாவிய பாராட்டைப் பெற்ற தமிழக அரசின் சுனாமி நிவாரண நடவடிக்கைகள் மற்றும் மறுவாழ்வுத் திட்டங்கள் குறித்த அனைத்து விவரங்களின் தொகுப்பாக தயாரிக்கப் பட்டுள்ள இந்தப் புத்தகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 26.12.2005 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்கள். இதன் முதற் பிரதியை மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் திரு. ஆர். சந்தானம், இ.ஆ.ப., வருவாய்த் துறை செயலர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு சிறப்புப் பணி அலுவலர் திரு.சி.வி. சங்கர், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

* * *

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு கோடியே 40 லட்சம் செலவில் திறக்கப்பட்ட இணைப்புப் பாலம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 26.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில் ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் கன்னியாகுமரி மாவட்டம் பழையாறு ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள, மேலமணக்குடி – கீழமணக்குடி இரும்பு இணைப்புப் பாலத்தை திறந்து வைத்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம், மேற்கு கடற்கரை சாலையில் மேலமணக்குடி மற்றும் கீழமணக்குடி கிராமங்களை இணைக்கின்ற பாலம் 26.12.2004 அன்று திடீரென பெரும் சீற்றத்துடன் தாக்கிய சுனாமி ஆழிப் பேரலையில் சிக்குண்டு கடும் பாதிப்புக்குள்ளானது. சுனாமி பேரலை சுழன்று அடித்த வேகத்தின் காரணமாக இப்பாலத்தின் deck slabs என்னும் மேல் தளங்கள் அதனுடைய நிலையிலிருந்து பிரிந்து போனது. இதன் காரணமாக மேற்கு கடற்கரைசாலை போக்குவரத்து தடைபட்டது. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு பகுதியிலுள்ள கிராம மக்கள், மேலமணக்குடி வழியாக கன்னியா குமரிக்கு செல்ல வேண்டுமென்றாலும், கன்னியாகுமரியிலிருந்து கீழமணக்குடி செல்ல வேண்டுமென்றாலும் 26 கிலோ மீட்டர் சுற்றி செல்ல வேண்டிய சிரமத்திற்கு ஆளாயினர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட மக்கள் படுகின்ற இந்த சிரமத்தை நீக்கிடும் வகையில் உடனடியாக ஒரு தற்காலிக இரும்பு பாலம் அமைத்திட 2005ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆணையிட்டார்கள். இதன்படி, மேலமணக்குடியையும், கீழமணக் குடியையும் இணைக்கும் வகையில், ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் 168 மீட்டர் நீளமும், 3.68 மீட்டர் அகலமும், 10 மெட்ரிக் டன் தாங்கும் சக்தியும் கொண்ட



216 டன் எடையுள்ள இரும்பு வாராவதி பாலம் (Steel Girder Bridge) கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பழைய பாலத்தின் தூண் (Pile), தூண் மூடிகள், (Pile Cap) ஆகியவற்றை பயன்படுத்தியும், மேலும் 56 புதிய இரும்புத் தூண்களை ஏற்படுத்தியும் இந்தத் தற்காலிக பாலம் நிறுவப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாறு ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இந்த மேலமணக்குடி – கீழமணக்குடி இரும்பு இணைப்புப் பாலத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 26.12.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்தப் புதிய பாலம் திறக்கப்பட்டதன் வாயிலாக மேலமணக்குடி, கீழமணக்குடி கிராம மக்கள் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல், மாவட்டத்தின் மேற்கு பகுதியிலுள்ள மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், அவர்கள் மேலமணக்குடி வழியாக கன்னியாகுமரி சென்று வரும் தூரம் ஒரு வழி நடைக்கு 26 கிலோ மீட்டர் குறைந்துள்ளது. மேலும் தடைபட்டிருந்த மேற்கு கடற்கரைச் சாலை சீரமைக்கப்பட்டு, மீண்டும் போக்குவரத்துப் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்களின் உடனடி தேவையை எண்ணி, இடைக்கால ஏற்பாடாக இந்தத் தற்காலிக இரும்பு பாலத்தை திறந்து வைத்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்ட காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, 10 கோடி ரூபாயில் நிரந்தர கான்கீரிட் பாலம் அமைக்க 20.10.2005 அன்று ஆணையிட்டுள்ளார்கள். இந்த நிரந்தர பாலப் பணி நெடுஞ்சாலைத் துறை மூலமாக துரிதமாக மேற்கொள்ளப்பட்டு 30.9.2007க்குள் முடிக்கப்படும். ★



# நெரிசலில் சிக்கி உயிரிழந்த 42 பேர் குடும்பங்களுக்கு தலா ரூபாய் ஒரு லட்சம் நிதிஉதவி

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

தமிழ்நாட்டில் கடந்த 2 மாதங்களாக பெய்து வரும் தொடர் மழையினால் 22 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்க எனது அரசு போர்க்கால நடவடிக்கை எடுத்து வருகிறது. வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரணத் தொகுப்பு உதவி வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரைப் பொறுத்தவரை, இதுவரை மொத்தம் 4.02 லட்சம் குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணத் தொகுப்பு உதவி வழங்கப்பட்டுள்ளது. மாம்பலம் – கிண்டி தாலுகாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 1 லட்சத்து 39 ஆயிரம் குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணத் தொகுப்பு உதவியை, 17.12.2005 மற்றும் 18.12.2005 ஆகிய 2 நாட்களில் வழங்க சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்திருந்தார். இந்த தாலுகாவில் உள்ள 107 நியாய விலைக் கடைகளில் அந்தந்த நியாய விலைக் கடைகளிலேயே டோக்கன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், சுமார் 40 நியாய விலைக் கடைகள் குறுகிய சாலைகளில் அமைந்துள்ள காரணத்தால், டோக்கன்கள் வழங்குவதில் எந்தவித நெரிசலுக்கோ, இடர்பாடுகளுக்கோ மக்கள் ஆளாகிவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் இந்த நியாய விலைக் கடைகளுக்குரிய டோக்கன்களை போதிய இடவசதியுடன் கூடிய வேறு 15 மையங்களில் வைத்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

17.12.2005 அன்று, எவ்வித பிரச்சனையும் இன்றி, முறையாக, 68 ஆயிரம் குடும்பங்களுக்கு டோக்கன்கள் வழங்கப்பட்டு, அதில் சுமார் 62 ஆயிரம் பேர் நிவாரணத் தொகுப்பு உதவிகளைப் பெற்றனர். 71 ஆயிரம் குடும்பங்களுக்கு டோக்கன்கள் மற்றும் நிவாரண உதவி 18.12.2005 அன்று வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. டோக்கன்கள் காலை 9 மணி முதல் வழங்கப்படும் என்ற அறிவிப்பு முறையாக சென்னை மாவட்ட ஆட்சியரால் அறிவிக்கப் பட்டிருந்தது.

இதில், எம்.ஜி.ஆர் நகரைச் சேர்ந்த 3 நியாய விலைக் கடைகள் குறுகிய சாலைகளில் அமைந்திருந்த காரணத்தால், அதற்குரிய டோக்கன்களை, போதிய இடவசதி உள்ள அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வளாகத்தில், ஒரு கவுன்டருக்கு 500 பேர் வீதம் 9 கவுன்டர்களில் வைத்து வழங்க வகை செய்யப்பட்டிருந்தது. இந்த நியாய விலைக் கடைகளுக்குரிய 8,566 குடும்பங்களுக்கு 17.12.2005 மற்றும் 18.12.2005 ஆகிய 2 நாட்களில் டோக்கன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு, 17.12.2005 அன்று 3,452 பேர் முறையாக டோக்கன்களைப் பெற்றனர். சுமார் 4,500 குடும்பங்களுக்கு 18.12.2005 காலை 9 மணி முதல் டோக்கன்கள் வழங்கப்பட இருந்தது. இது குறித்த தகவல் முறையாக ஒலி பெருக்கி வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் சம்பந்தப்பட்ட தெருக்களில் முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், 18.12.2005 அன்று அதிகாலை சுமார் 3.45 மணி அளவில் ஏறத்தாழ 4 ஆயிரம் பேர் டோக்கன்கள் வழங்கப்படும் அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியின் நுழைவாயில் முன் திரண்டனர். அப்போது, திடீரென பெருமழை பெய்ததன் காரணமாக, இவர்கள் அனைவரும் காவல் துறை கட்டுப்பாட்டையும் மீறி, நுழைவாயில் கதவுகளைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்ற போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 42 பேர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து, நான் மிகவும் துயருற்றேன். இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த சம்பவத்தில் 37 பேர் காயமடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவருக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் 1 லட்சம் ரூபாய் வீதம் அவர்களது குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை – 18.12.2005

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

## செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

# கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தி



இயேசு பெருமானின்
பிறந்த நாளை கொண்டாடும்
கிறிஸ்துவப் பெருமக்கள்
அனைவருக்கும் எனது
இதயம் கனிந்த கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகளை
தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகம் முழுவதும் கிறிஸ்துவப் பெருமக்கள்
மகிழ்ச்சியோடு கொண்டாடும் உன்னதத் திருநாள்
கிறிஸ்துமஸ் திருநாள்!
மானுடத்தின் துயர் துடைக்க இயேசு பெருமான்
அவதரித்த திருநாள்
கிறிஸ்துமஸ் திருநாள்!

அருள் அவதாரமான இயேசு கிறிஸ்து பிறந்த
இத்திருநாளில் அகிலம் முழுவதும் அமைதியும்,
மகிழ்ச்சியும் திகழ வாழ்த்துவதோடு,
என் அன்புக்குரிய கிறிஸ்துவப் பெருமக்கள்
அனைவருக்கும் எனது இனிய
கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துகளை
மீண்டும் உரித்தாக்கிக் கொள்வதில்
நான் மட்டற்ற மகிழ்ச்சி
அடைகிறேன்.

# 7 கிறிஸ்துவ தேவாலயங்களில் அன்னதானத் திட்டம்

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்



சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவினர் வாழ்வு வளம் பெறவும், அவர் தம் வாழ்க்கையில் முன்னேற்றம் காணவும் என்னுடைய அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, இலவச பாடநூல்கள் வழங்கும் திட்டம், இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம், இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம், சத்துணவுத் திட்டம், இலவச மின்சாரத் திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் என பல முன்னோடித் திட்டங்களை எனது அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

"தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்" என்பது நமது பெரியோர்கள் நமக்கு விட்டுச் சென்ற அருள்மொழி ஆகும். இதற்கு ஏற்ப, தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களுக்கு வருகை தருகின்ற பக்தர்களுக்கு, தினந்தோறும் மதிய நேரத்தில் உணவு வழங்கும் அன்னதானத் திட்டத்தினை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த உயரிய திட்டத்தை நான் 23.3.2002 அன்று, சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் தொடங்கி வைத்தேன். இத்திட்டம், தொடர்ந்து படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, தற்போது 180 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அன்னதானத் திட்டத்தின் மூலம், திருக்கோயில்களுக்கு வருகை தருகின்ற பக்தர்கள், குறிப்பாக ஏழை, எளிய மக்கள் பசியாறுகின்றனர்.

இதே போன்று, தமிழகத்தில் உள்ள தர்காக்களுக்கு வருகை தருகின்ற இறையன்பர்களுக்கு வியாழக்கிழமை தோறும் உணவு வழங்கும் அன்னதானத் திட்டத்தை 3.3.2003 அன்று, சென்னையில் நான் தொடங்கி வைத்தேன். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகளில் இருந்து 12 தர்காக்களில் தற்போது இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு தினந்தோறும் இலவச மதிய உணவு வழங்கும் வகையில், இந்த அன்னதானத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி செயல்படுத்த நான் தற்போது முடிவெடுத்துள்ளேன். இத்திட்டம் மாநில சிறுபான்மை ஆணையத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென்று மாநில சிறுபான்மை ஆணையத்தின் கீழ், பதிவு பெற்ற அறக்கட்டளை ஒன்று அமைக்கப்படும். இதனை நிறைவேற்றுவதற்காக அறக்கட்டளைக்கு 1 கோடி ரூபாய் மூல நிதியாக (Corpus Fund) முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும். மாநில சிறுபான்மை ஆணையத்தின் தலைவர், இந்த அறக்கட்டளையின் தலைவராக இருப்பார். சிறுபான்மை ஆணையத்தின் ஏனைய உறுப்பினர்கள் இந்த அறக்கட்டளையின் மற்ற நிருவாகிகளாக இருப்பார்கள். சிறுபான்மை இன மக்களுக்கு தினந்தோறும் இலவச மதிய உணவு வழங்கும் பணியை இந்த அறக்கட்டளை மேற்கொள்ளும். இலவச மதிய உணவு வழங்கும் மையங்கள் அமையும் இடங்களை இந்த அறக்கட்டளை தேர்வு செய்யும். இத்திட்டத்தைச் செயல்படுத்த தேவையான நிதி, அன்புள்ளமும், ஈகை குணமும் கொண்ட சமுதாய ஆர்வலர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் ஆகிய பெருமக்களிடம் இருந்து பெறப்படும்.

இந்த அன்னதானத் திட்டம் முதற்கட்டமாக சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், தேனி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள 7 கிறிஸ்துவ தேவாலயங்களில் செயல்படுத்தப்படும்.

இதன்படி, கிறிஸ்துமஸ் திருநாளான 25.12.2005 அன்று சென்னை, அண்ணா நகரில் உள்ள மேல் நடுவக்கரை சிஸ்வா பிரார்த்தனை தேவாலயத்தில் (SISWA Prayer Church) சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த, மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு தினந்தோறும் மதிய உணவு அளிக்கும் அன்னதானத் திட்டத்தை நான் தொடங்கி வைக்கிறேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் இத்திட்டம் துவங்கப்படும் அதே நேரத்தில், கோயம்புத்தூர், போத்தனூர், கக்கன் நகரில் உள்ள Ps. கிறிஸ்டோபர் தென் இந்திய தேவாலயம் (Ps. Christopher Church of South India), கோயம்புத்தூர் மாவட்டம், குனியமுத்தூர் சிறுவாணி நகரில் உள்ள சிஸ்வா எலிம் தேவாலயம் (SISWA Elim Church), நாமக்கல் ரோமன் கத்தோலிக்க தேவாலயம் (Roman Catholic Church), மதுரை, ஆரப்பாளையம் புது வாழ்வு தேவாலயம் (New Life Church) தேனி மாவட்டம், வருசநாடு, சிங்கராஜபுரம் சிஸ்வா பிரார்த்தனை இல்லம் (SISWA Prayer House), ஈரோடு மாணிக்கம்பாளையம், அம்பேத்கர் நகர், புது வாழ்வு தேவாலயம் (New Life Church) ஆகிய 6 தேவாலயங்களிலும் ஆக, மொத்தம் 7 கிறிஸ்துவ தேவாலயங்களில் அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்படும். படிப்படியாக இத்திட்டம் மேலும் பல சிறுபான்மையின வழிபாட்டுத் தலங்களில் செயல்படும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 24-12-2005

# சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கான அன்னதானத் திட்டம்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.12.2005 அன்று சென்னை, அண்ணா நகரில் உள்ள மேல் நடுவக்கரை சிஸ்வா பிரார்த்தனை தேவாலயத்தில் (SISWA Prayer Church), சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த, மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு தினந்தோறும் மதிய உணவு அளிக்கும் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.



இனங்களைச் சேர்ந்த மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு தினந்தோறும் இலவச மதிய உணவு வழங்கும் வகையில், சிறப்புடன் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இந்த அன்னதானத் திட்டத்தை மாநில சிறுபான்மை ஆணையத்தின் மூலம் சிறப்புடன் செயல்படுத்த ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இதனை செயல்படுத்துவதற்கென்று மாநில சிறுபான்மை ஆணையத்தின் கீழ், பதிவு பெற்ற அறக்கட்டளை ஒன்று அமைத்து அதன் மூலம் இப்பணியை நிறைவேற்றுவதற்காக 1 கோடி ரூபாய் மூல நிதியாக (Corpus Fund) முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அறக்கட்டளைக்கு வழங்கி உத்தரவிட்டார்கள். சிறுபான்மை இன மக்களுக்கு தினந்தோறும் இலவச மதிய உணவு வழங்கும் பணியை மேற்கொள்ளும் இந்த அறக்கட்டளை, இலவச மதிய உணவு வழங்கும் மையங்கள் அமையும் இடங்களைத் தேர்வு செய்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும். இதற்குத் தேவையான நிதி, அன்புள்ளமும், ஈகை குணமும் கொண்ட சமுதாய ஆர்வலர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் ஆகிய பெருமக்களிடம் இருந்து பெறப்படும். இந்த அன்னதானத் திட்டம் முதற்கட்டமாக சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், தேனி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள 7 கிறிஸ்துவ தேவாலயங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், தொடர்ந்து, படிப்படியாக, மேலும் பல சிறுபான்மையின வழிபாட்டுத் தலங்களில் செயல்படும் வகையில் விரிவுபடுத்தப்படவுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழக அரசு, "தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்" என்னும் அருள்மொழிக்கு இணங்க, தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களுக்கு வருகை தருகின்ற பக்தர்களுக்கு தினந்தோறும் மதிய நேரத்தில் உணவு வழங்கும் அன்னதானத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இந்த உயரிய திட்டத்தை 23.3.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டம், தொடர்ந்து படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, தற்போது 180 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதே போன்று, தமிழகத்தில் உள்ள தர்காக்களுக்கு வருகை தருகின்ற இறையன்பர்களுக்கு வியாழக்கிழமை தோறும் உணவு வழங்கும் அன்னதானத் திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 3.3.2003 அன்று, சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டு, தற்போது 12 தர்காக்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த அன்னதானத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, சிறுபான்மை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.12.2005 அன்று சென்னை, அண்ணா நகரில் உள்ள மேல் நடுவக்கரை சிஸ்வா பிரார்த்தனை தேவாலய (SISWA Prayer Church), வளாகத்தில், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு உணவு பரிமாறி, இந்த அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திரு. ஏ. நாகராஜன், இ.ஆ.ப., மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பேராயர் டாக்டர் எம். பிரகாஷ், பல்வேறு கிறிஸ்தவ தேவாலயங்களின் பாதிரியார்கள் மற்றும் ஏராளமான கிறிஸ்தவ பெருமக்கள் பங்கேற்றனர்.

❑ ❑ ❑

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
# செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
# புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



மலர்கின்ற புத்தாண்டை உற்சாகத்துடன் கொண்டாடும் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் வளர்ச்சிப் பாதையில் புதிய வரலாறு படைக்கச் செய்த 2005–ஆம் ஆண்டு விடை பெற்றுச் செல்கின்ற வேளையில், வாராது வந்த மாமழை என்று நாம் வரவேற்று மகிழ்ந்த வான்மழை, ஓயாது பெய்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

மழை வெள்ளம் பாதித்த தமிழகத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பெருகச் செய்ய வேண்டியது நமது மகத்தான கடமை! நமது வாழ்க்கை என்ற வானத்தைச் சூழ்ந்திருந்த கருமேகங்கள் அகன்று விட்டன. நிவாரணப் பணிகளில் வெற்றி பெற்ற நாம், புதிய நிர்மாணப் பணிகளிலும் வெற்றி பெற்றே தீருவோம்.

இடை மறிப்பது இயற்கையானாலும், செயற்கையானாலும், அந்தத் தடையை உடைப்பது நமக்கு வாடிக்கை தானே! இயற்கைத் தடைகளை எதிர்கொள்வோம்! செயற்கைத் தடைகளை தகர்ப்போம்!

புதிய பொறுப்புகள் நம்மை அழைக்கின்றன. புதிய வளர்ச்சியையும், மலர்ச்சியையும் தமிழக மக்களுக்கு வழங்குவோம்! கூடுதல் நம்பிக்கையும், முயற்சியும், உழைப்பும், உறுதியும், நாம் நாடிய வெற்றியை நமக்கு நல்கியே தீரும்!

2006–ஆம் ஆண்டு புதிய வாழ்வையும், வளத்தையும், வெற்றிகளையும் வழங்கும் புத்தாண்டாக மலரட்டும் என்று வாழ்த்தி, என் அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துகளை மீண்டும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.





# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் நகர்ப்புற நெசவாளர்களுக்கு 135 கோடி ரூபாய் வட்டித் தள்ளுபடி

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை

தமிழகத்தில் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவிய கடும் வறட்சியாலும், அதனை அடுத்து நடப்பு ஆண்டில் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்காலும், விவசாயிகள் மற்றும் ஏழை எளிய மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ள நிலையில், அவர்களைக் காக்கின்ற காவல் அரணாக எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. பாதிப்புக்குள்ளான விவசாயப் பெருமக்கள் நலம் பெறவும், துன்பம் நீங்கி அவர்தம் வாழ்க்கை வளம் பெறவும், இரண்டாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், வேறு எந்த மாநிலத்திலும் – வேறு எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில், தொடர்ந்து பல்வேறு கடன் நிவாரணத் திட்டங்களை நான் செயல்படுத்தி வருகிறேன்.

2001–ஆம் ஆண்டு மே திங்களில், என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதுமே, உடனடியாக 30.6.2000 அன்றைய நிலவரப்படி நிலுவையாக இருந்த அனைத்துப் பயிர்க் கடன்கள் மீதான வட்டியையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டதோடு, அதற்காக **310.51 கோடி ரூபாய்** நான் அனுமதித்தேன். இதனைத் தொடர்ந்து, 2002–2003ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் வாங்கியிருந்த அனைத்துக் கூட்டுறவுப் பயிர்க் கடன்கள் மீதான **61.05 கோடி ரூபாய்** வட்டித் தொகையை தள்ளுபடி செய்து நான் ஆணையிட்டேன். மேலும், கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் 2003–2004–ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற குறுகிய காலக் கடன்கள் மீதான வட்டித் தொகை **62 கோடி ரூபாயை** என்னுடைய அரசு தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. இது மட்டுமின்றி, 31.3.2004 அன்று **2,598 கோடி ரூபாய்** அளவில் நிலுவையில் இருந்த குறுகிய கால விவசாயக் கடன்களை ஐந்தாண்டு கால கடனாக எனது அரசு மாற்றி அமைத்தது.

வறட்சியினால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்பட்டு வரும் தொடர்ச்சியான இன்னல்களைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு உண்மையிலேயே பயனளிக்கும் கடன் நிவாரணத் தொகுப்பு உதவி ஒன்றை மைய அரசு வழங்கிட வேண்டுமென 27.6.2005 அன்று புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் வலியுறுத்திப் பேசினேன். ஆனால், அதற்கு எந்த ஒரு பயனும் இல்லாது போகவே, தமிழக விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கத்தில், குறுகிய கால கூட்டுறவு வேளாண்மைக் கடன்கள் வகையில் 31.3.2004 அன்றைய நிலவரப்படி நிலுவையாக இருந்த வட்டியையும், அந்நாள் முதற்கொண்டு, விவசாயிகள் தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய முதல் தவணை நாளான 30.6.2006 அன்று வரை சேர்ந்து வரும் வட்டியையும் தள்ளுபடி செய்யும் **645 கோடி ரூபாய்** அளவிலான மாபெரும் கடன் நிவாரணத் தொகுப்பு உதவித் திட்டம் ஒன்றை நான் அறிவித்தேன்.

விவசாயிகள் தங்களது நீண்ட கால கடன் பாக்கியைத் திருப்பிச் செலுத்துவதற்கு உதவிடும் வகையில், அவர்கள் வைத்துள்ள கடன் பாக்கியை மாற்றி அமைத்து ஒரு புதிய திட்டத்தை 13.4.2005 அன்று நான் அறிவித்தேன். இதன்படி, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் பெற்று தவணை பாக்கி வைத்துள்ள விவசாயிகளுக்கும், ஏனைய கடன்தாரர்களுக்கும் நிவாரணம் அளிக்கும் வகையில், "ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம்" (One Time Settlement Scheme) என்னும் புதிய திட்டத்தை எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்படி, சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பொறுத்த வரையில்

31.3.2001 அன்று செயல் இழந்த சொத்துகளாக (Non Performing Assets) நிலுவையிலுள்ள அசல் மற்றும் வட்டியினைச் செலுத்துவோருக்கு 31.3.2001 அன்றுள்ள அபராத வட்டி, 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரைக்கான வட்டி (Interest), கூடுதல் வட்டி (Interest on overdues) மற்றும் அபராத வட்டி (Penal Interest) ஆகியவற்றை முழுமையாகத் தள்ளுபடி செய்திட ஆணையிட்டேன்.

மேலும், நீண்ட காலப் பண்ணைக் கடன் (Long Term Farm Sector Loan) பெற்ற பெரிய விவசாயிகளைப் பொறுத்த வரையில் 31.3.2001 அன்று செயல் இழந்த சொத்துகளாக நிலுவையிலுள்ள அசல், வட்டி, மற்றும் 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரை உள்ள வட்டியில் 50 சதவீதம் செலுத்துவோருக்கு 31.3.2001 அன்று நிலுவையில் இருந்த அபராத வட்டியும், 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரைக்கான வட்டியில் 50 சதவீதமும் கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றையும் முழுமையாகத் தள்ளுபடி செய்திட உத்தரவிட்டேன்.

இதுவன்றி, பண்ணை சாரா (Non Farm Sector) கடன்தாரர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் 31.3.2003 அன்று செயல் இழந்த சொத்துகளாக நிலுவையில் உள்ள அசலையும், செலுத்தும் தேதி வரையிலான மொத்த வட்டியினையும் செலுத்தினால், 31.3.2003 அன்று நிலுவையில் உள்ள அபராத வட்டி, அதன் பின்னர் விதிக்கப்படும் கூடுதல் வட்டி; மற்றும் அபராத வட்டி ஆகியவற்றை முழுமையாகத் தள்ளுபடி செய்திட ஆணையிட்டேன்.

ஆக, இந்த ஒரு முறை கடன் தீர்வுத் திட்டத்தின் மூலம், 1,78,550 சிறு மற்றும் குறு விவசாயிகளும், 57,430 பெரிய விவசாயிகளும், 17,990 பண்ணை சாரா கடன்தாரர்களும், ஆக மொத்தம் 2,53,970 பேர் 280.30 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகை பெற்றிட வழி வகை செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், கடன்தாரர்கள் தாம் செலுத்த வேண்டிய தொகையை சிரமம் இன்றி செலுத்திட வழி செய்து தரும் நோக்கத்துடன் அவர்கள் ஒரே தவணையில் செலுத்தவோ; அல்லது அதில் குறைந்தபட்சம் 25 சதவீதத் தொகையை 3 மாதத்திற்குள் செலுத்தி, மீதமுள்ள தொகையினை அடுத்த 6 மாதத்திற்குள் உரிய வட்டியுடன் செலுத்தவோ வாய்ப்பு அளிக்கப்பட்டது.

அதே போல், நகர கூட்டுறவு வங்கிகளில் (Urban Co-operative Banks) கடன் பெற்றுள்ள நகர்ப்புற நெசவாளர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் கைவினைஞர்கள் ஆகியோரது கடன் சுமையைக் குறைத்திடும் வகையில், வட்டிக் குறைப்புத் திட்டத்தை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி, நகரக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றுள்ள நெசவாளர்கள் மற்றும் இதர பயனாளிகள் பயன் பெறும் வகையில், அவர்கள் ஏற்கெனவே பெற்ற கடன்களுக்கு 1.2.2003 அன்று முதல் குறைக்கப்பட்ட தற்போதைய குறைந்த வட்டி விகிதத்திலேயே, அதாவது நடப்பு வட்டி விகிதத்திலேயே 1.4.2001 முதல் வட்டி வீதத்தை மாற்றி அமைக்க நான் உத்தரவிட்டேன்.

ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம் மற்றும் வட்டிக் குறைப்புத் திட்டம் ஆகிய இத்திட்டங்கள், 6 மாத காலத்திற்கு, அதாவது 12.10.2005 வரை நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் பயனாக, **ஒரு முறை கடன் தீர்வுத் திட்டத்தின் கீழ், இதுவரை 51,137 விவசாயிகள் மற்றும் இதர கடன்தாரர்கள் 40.72 கோடி ரூபாய் அளவுக்கு வட்டிச் சலுகை பெற்று பயன் அடைந்துள்ளனர். அதே போல், வட்டிக் குறைப்புத் திட்டத்தின் கீழ், 42,769 கடன்தாரர்கள் 20.68 கோடி ரூபாய் அளவுக்கு வட்டிச் சலுகையைப் பெற்றுள்ளனர்.**

கடந்த 2 மாதங்களாக தமிழகத்தில் பெய்த கன மழை மற்றும் வெள்ள பாதிப்புகளின் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் இத்திட்டத்தின் பயனை தங்களால் பெற முடியவில்லை என்றும், எனவே, ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம் மற்றும் வட்டிக் குறைப்புத் திட்டத்திற்கான கால அவகாசத்தை நீட்டித்துத் தர வேண்டும் என்றும் என்னிடம் கோரிக்கைகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

**இந்தக் கோரிக்கையை ஏற்று, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், நகர்ப்புற நெசவாளர்கள் மற்றும் இதர பயனாளிகள் ஆகியோரது நலன் கருதி, ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம் மற்றும் வட்டிக் குறைப்புத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கான காலக் கெடுவை 30.6.2006 வரை நீட்டித்து நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.**

**இதன்படி, ஒரு முறை கடன் தீர்வுத் திட்டத்தின் கீழும், வட்டிக் குறைப்புத் திட்டத்தின் கீழும், தங்களது கடன் பாக்கியை 30.6.2006–க்குள் திரும்பச் செலுத்தி இதற்கென அறிவிக்கப்பட்ட வட்டிச் சலுகைகளைப் பெற்று பயன் அடையலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இதன் அடிப்படையில், நீண்ட கால கடன் பெற்றுள்ள விவசாயிகளும், நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் பெற்றுள்ளோரும் தங்களது கடன்களை 30.6.2006 அன்றைக்கு முன்னதாக ஒரே தடவையில் செலுத்தலாம்; அல்லது, தங்களது பாக்கித் தொகையில் 25 சதவீதத் தொகையை முதலில் செலுத்திவிட்டு எஞ்சிய தொகையை 30.6.2006–க்குப் பிறகு 6 மாதங்களில் தவணை முறையில் செலுத்தலாம்.**

**தற்போது நான் அறிவித்துள்ள இந்தச் சலுகைகளின் பயனாக சுமார் 1,09,000 விவசாயிகள் 135 கோடி ரூபாய் வட்டித் தள்ளுபடி சலுகையைப் பெறுவார்கள் என்பதிலும், நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் பெற்றுள்ள சுமார் 1 லட்சம் பேர் இதன் மூலம் பயன் அடைவர் என்பதிலும் நான் மன நிறைவு அடைகிறேன்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 3.1.2006

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவுப்படி, 650 மாணவ - மாணவியர் தங்கிப் பயில தற்காலிகமாக 250 அடுக்குமாடி வீடுகள் ஒதுக்கீடு

கடந்த இரண்டு மாதங்களாக தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழையினால் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கன மழை காரணமாகவும், ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாகவும், பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட போதிலும், ஒரு சில இடங்களில் வெள்ளப் பெருக்குக்கும், அதனால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கும், ஆக்கிரமிப்பே காரணமாக அமைந்தது. திருவள்ளூர் மாவட்டத்தில், 26.10.2005 முதல் பெய்த பெரு மழையின் காரணமாக பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. மதுரவாயல் மற்றும் முகப்பேர் கிராமங்களில், கூவம் ஆறு, ஓடை, குளம், ஏரி, ஏரி உள்வாய் ஆகிய நீர்நிலைப் பகுதிகளில் எம்.ஜி.ஆர். பொறியியல் கல்லூரி, தாய் மூகாம்பிகை தொழில் பயிற்சிப் பள்ளி, தாய் மூகாம்பிகை பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆகியவற்றை நடத்தி வரும் கண்ணம்மாள் கல்வி அறக்கட்டளை, 6.46 ஏக்கர் அளவுக்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளது. இந்த அறக்கட்டளை ஆறு, ஓடை ஆகிய நீர்வழித் தடங்களில் ஆக்கிரமிப்பு செய்து, நான்கு மாடிகள் கொண்ட மாணவ, மாணவியர் விடுதிகள், நான்கு மாடி வகுப்பறைக் கட்டடம், வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றைக் கட்டி உள்ளது. இதன் காரணமாக, கூவம் ஆறு மற்றும் ஓடை ஆகியவற்றின் மூலமாக மழை நீர் வெளியேற முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனால், 3.12.2005 அன்று எம்.ஜி.ஆர். பொறியியல் கல்லூரி மற்றும் தாய் மூகாம்பிகை பல் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் மாணவ, மாணவியர் விடுதிகளை வெள்ள நீர் சூழ்ந்தது. மாணவ, மாணவியரைப் பாதுகாக்க கல்லூரி நிருவாகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. திருவள்ளூர் மாவட்ட நிருவாகம் 850 மாணவ, மாணவியரை படகுகள் மூலம் மீட்டு பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்றது. கல்லூரி விடுதிகளில் தற்போதும் தண்ணீர் சூழ்ந்துள்ளதால், மாணவ, மாணவியர் அங்கு தங்க இயலாத சூழ்நிலை தொடர்ந்து நிலவி வருகிறது. கண்ணம்மாள் கல்வி அறக்கட்டளை செய்த ஆக்கிரமிப்புகளின் காரணமாக வெள்ள நீர் கூவம் ஆற்றின் வழியே வடிய முடியாததால், முகப்பேர், நெற்குன்றம், மதுரவாயல், நொளம்பூர் ஆகிய பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, மக்கள் மிகுந்த அவதிக்கு உள்ளாயினர். சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி மாவட்ட நிருவாகம் இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுத்தது. அதனை எதிர்த்து, டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு ஒன்றைத் தாக்கல் செய்து கட்டடங்களை இடிப்பதற்கு எதிராக தடை ஆணையைப் பெற்றது. எனவே, ஆக்கிரமிப்பை அகற்றும் பணி



நிறுத்தப்பட்டு, உயர் நீதிமன்றத்தில் மாவட்ட நிருவாகத்தின் தரப்பில் எதிர் மனு தாக்கல் செய்யப்பட்டு, தடை ஆணையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் பேரில், உயர் நீதிமன்றம் இந்தத் தடை ஆணையை விலக்கியும், நீதிப் பேராணை மனுவைத் தள்ளுபடி செய்தும் 13.12.2005 அன்று உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. மேலும், ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்ட இடங்களில் இருந்து கல்லூரி நிருவாகமும், மாணவ, மாணவியரும் தங்களது உடைமைகளை 24 மணி நேரத்திற்குள் அகற்றி விட வேண்டும் என்றும், அதன் பிறகு, மாவட்ட நிருவாகம் ஆக்கிரமிப்புகளை அகற்ற எந்தவித தடையும் இல்லை என்றும் உயர் நீதிமன்றம் நீதிமன்ற அரங்கத்திலேயே அறிவித்தது.

உயர் நீதிமன்ற ஆணையின்படி, இடிக்கப்பட வேண்டிய கட்டடங்களில், சுமார் 300 மாணவர்கள் மற்றும் 350 மாணவியர் தங்கியுள்ள இரண்டு விடுதிக் கட்டடங்களும் அடங்கும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், எப்போதுமே கல்விக்கு உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். ஆகவே, கல்லூரி நிருவாகம் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள விடுதிக் கட்டடங்களை இடிக்க எடுக்கப்பட இருக்கும் நடவடிக்கையால், மாணவ, மாணவியரின் கல்வி எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உறுதியாக உள்ளார்கள். எனவே, ஆக்கிரமிப்பு செய்த கல்லூரி நிருவாகத்தின் தவறினால் மாணவ, மாணவியருக்கு தங்கும் இடவசதி இல்லாத நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்ற மனிதாபிமான அடிப்படையில், தக்க மாற்று ஏற்பாடுகள் செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி, சென்னை முகப்பேர் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான 250 அடுக்குமாடி வீடுகள் இந்த மாணவ, மாணவியருக்காக தற்காலிகமாக ஒதுக்கப்படும். இங்கு தங்கும் மாணவ, மாணவியருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் தமிழக அரசு செய்து கொடுக்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த மனிதாபிமான நடவடிக்கையினால் எம்.ஜி.ஆர். பொறியியல் கல்லூரி மற்றும் தாய் மூகாம்பிகை பல் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவியரின் கல்வி நலன் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

★ ★ ★

## சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்திற்கு தரச் சான்றிதழ்



ஆசியாவிலேயே மிகப் பெரிய பேருந்து நிலையமான சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்திற்கு, திறன்மிகு பராமரித்தல் மற்றும் திறமையுடன் நிருவகித்தல் ஆகியவற்றுக்காக ஜெனிவாவைத் தலைமையிடமாகக் கொண்ட அகில உலக தர நிர்ணய நிறுவனமான ஐ.எஸ்.ஓ. நிறுவனம் (ISO) 9001:2000 தரச் சான்றிதழை வழங்கியுள்ளது. இந்த உலகளாவிய தரச் சான்றிதழை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள், 27–12–2005 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் வழங்கினார். அப்போது, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் திருமதி.ஜெயந்தி, இ.ஆ.ப., உறுப்பினர்–செயலர் திரு.மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

❖ ❖ ❖

# கன்னியாகுமரி மாவட்டத்தில்

# ரூ.11 கோடியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர்கள் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை




மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 14.12.2005

தமிழ்நாட்டில் 1,076 கி.மீ. நீளமுள்ள கடற்கரைப் பகுதிகள் புயல், சூறாவளி போன்ற இயற்கைச் சீற்றங்களினால் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகி, அப்பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் பெரும் சிரமத்திற்கும், துன்பங்களுக்கும் ஆளாகின்றனர். குறிப்பாக, கடந்த ஆண்டு அதாவது, 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் தேதி சற்றும் எதிர்பாராத வகையில் கடும் சீற்றத்துடன் சுனாமி பேரலைகள் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களை தாக்கியதில் மிகப் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. தமிழகத்தின் வரலாற்றில் முதன்முறையாக ஏற்பட்ட இந்தக் கடுமையான இயற்கைச் சீற்றத்தின்போது, என்னுடைய அரசு உடனடியாக செயல்பட்டு, நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, உலகளாவிய பாராட்டைப் பெற்றது. கடலோர மக்கள் தங்களது வாழ்வாதாரங்களை திரும்பப் பெறத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி, நீண்டகால மறுவாழ்வு நடவடிக்கைகளை மிகுந்த முனைப்புடன் எனது அரசு தற்போது மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் வசித்து வரும் மக்களையும் மற்றும் அவர்தம் உடைமைகளையும், இம்மாதிரியான இயற்கைச் சீற்றங்களிலிருந்து நிரந்தரமாகப் பாதுகாக்க, தடுப்புச் சுவர்கள் கட்டுதல் (Rubble Mound Sea Walls), தூண்டில் வளைவு அமைத்தல் (Groynes) போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் வகையில், தொலைநோக்குப் பார்வையுடன் ஒரு நிரந்தர திட்டம் தயாரிக்க நான் ஆணையிட்டிருந்தேன். இதன்படி, தமிழ்நாட்டிலுள்ள கடற்கரைப் பகுதிகளை ஆய்வு செய்து, கடலரிப்பிலிருந்து இப்பகுதிகளைப் பாதுகாப்பதற்கு ஏதுவாக தடுப்புச் சுவர்கள் கட்டுதல், தூண்டில் வளைவுகள் அமைத்தல் ஆகியவற்றை அமைத்திட எனது அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

**இதன்படி, கடலரிப்புத் தடுப்புத் திட்டங்களை உடனே துவக்கும் வகையில், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் ரட்சகர் தெரு என்னுமிடத்தில் வங்காள விரிகுடா கடற்கரையை யொட்டி 500 மீட்டர் நீளத்திற்கு 4.80 கோடி ரூபாய் மதிப்பில் தூண்டில் வளைவு (Groynes) ஒன்றை அமைப்பதற்கு நான் ஆணைப் பிறப்பித்துள்ளேன்.**

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் அரபிக் கடலையொட்டி உள்ள கடற்கரைப் பகுதியில் சில மாதங்களாக தொடரும் கடல் அலைச் சீற்றங்களிலிருந்து அப்பகுதி மக்களைப் பாதுகாக்கும் வகையில், 6.20 கோடி ரூபாய் மதிப்பில், நீரோடித் துறை, மார்த்தாண்டம் துறை, வள்ளவிளை, சின்னத்துறை, இரவிப்புத்தன் துறை, தூத்தூர், பூத்துறை, இரையுமன் துறை, தேங்காய்பட்டணம் மற்றும் முள்ளூர் துறை, கோடி முனை, பெரியவிளை துறை, பெரிய காடு மற்றும் கோவளம் ஆகிய 13 இடங்களில் கடலரிப்பு தடுப்புச் சுவர்கள் (Rubble Mound Sea Walls) கட்ட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 11 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட உள்ள இந்த கடல் அரிப்புத் தடுப்புத் திட்டங்கள் மூலம் இப்பகுதிகளில் கடற்கரையையொட்டி வாழும் மக்கள், குறிப்பாக, மீனவச் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் கடலலைகளின் சீற்றம் மற்றும் கடலரிப்பிலிருந்து நிரந்தரமாகப் பாதுகாப்பு பெறுவார்கள்.

இப்பணிகள் அனைத்தையும் விரைந்து முடித்திட அதிகாரிகளுக்கு நான் ஆணைப் பிறப்பித்துள்ளேன்.

❖ ❖ ❖

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை அதே பகுதியில் தகுந்த இடத்தில் நிறுவ ஆணை



மத்திய நெடுஞ்சாலைத் துறையால், காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், ஆலந்தூரில் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து அகற்றப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை சீர்படுத்தி, புதுப்பொலிவுடன், அதே பகுதியில் தகுந்த இடத்தில் நிறுவ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், ஆலந்தூர் தேசிய நெடுஞ்சாலையில் மத்திய நெடுஞ்சாலைத் துறை, சுரங்க நடைபாதை அமைக்கும் பணியை மேற்கொண்ட போது, அந்தப் பகுதியில் சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனை எதிரில் இருந்த சுமார் ஆறடி உயரம் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை அகற்றப்பட்டது. திரும்பவும் நிறுவப்படும்



என்ற உறுதிமொழியுடன் மத்திய நெடுஞ்சாலைத் துறையால் அகற்றப்பட்ட அந்தச் சிலை, சுரங்கப் பாதைப் பணிகள் முடிந்து இரண்டு மாதங்கள் முடிந்த பின்னரும், எவ்வித பாதுகாப்பும் இன்றி, சுரங்கப்பாதைக்கு அருகே உள்ள புதரில் கேட்பாரற்ற நிலையில் கிடத்தப்பட்டுள்ளது என்ற தகவலை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உடனடியாக அந்தச் சிலையை தக்க பாதுகாப்புடன் பத்திரமாக வைக்குமாறு ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையை ஏற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை, ஆலந்தூர் நகராட்சி ஆணையர் மற்றும் தாம்பரம் வட்டாட்சியர் ஆகியோரால் பத்திரமாக கொண்டு வரப்பட்டு, தற்போது தாம்பரம் வட்டாட்சியர் அலுவலக பதிவறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகத்தினரால் தக்க பாதுகாப்புடன் பத்திரமாக வைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்த திருவுருவச் சிலையை சீர்படுத்தி, அதே பகுதியில், அதே இடத்திலோ அல்லது தகுந்த வேறு இடத்திலோ மீண்டும் நிறுவ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, தக்க இடம் தேர்வு செய்யப்பட்டு அங்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை புதிய பொலிவுடன் மீண்டும் நிறுவப்படும்.

□ □ □

# மழை வெள்ளத்தை திறமையாக சமாளித்து நிவாரணப் பணிகளை மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் பாராட்டு



புதுதில்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16-12-2005 அன்று சந்தித்துப் பேசினார்கள்.

தமிழ்நாட்டில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மழை வெள்ளம் ஏற்பட்டது. அதாவது கடந்த 2 மாதத்தில் தொடர்ந்து 5 முறை மழை வெள்ளம் ஏற்பட்டு பெரும் சேதமும் பாதிப்பும் ஏற்பட்டது. எனவே, நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக தமிழக அரசு கேட்டுள்ள உதவிகளை, உடனே பிரதமர் தலையிட்டு வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

வெள்ள நிவாரண உதவியாக, மத்திய அரசு, 13,685 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்க வேண்டும்; 2 இலட்சத்து 58 ஆயிரம் டன் அரிசி வழங்க வேண்டும்; 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் டிசம்பர் மாதத்துக்கு கூடுதலாக வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் வலியுறுத்தினார்கள்.

தான் விடுத்த வேண்டுகோளை ஏற்று வெள்ளச் சேதத்தைப் பார்வையிட 2 முறை மத்தியக் குழுவை அனுப்பி வைத்ததற்காக பிரதமருக்கு மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

வடகிழக்குப் பருவ மழை தீவிரம் அடைந்து மீண்டும் மீண்டும் மழை கொட்டியது. வழக்கமாக, ஆண்டுக்கு 979 மில்லி மீட்டர் மழைதான் பெய்யும். அதில், 48 சதவிகிதம், அதாவது 470 மில்லி மீட்டர் மழை வடகிழக்குப் பருவ மழை காலத்தில் பெய்யும் மழையாகும்.

ஆனால், இந்த ஆண்டு வழக்கத்துக்கு மாறாக மாநிலத்தில் 1.10.2005 முதல் 14.12.2005 வரை, 813.09 மி.மீ. அதிக மழை பெய்துள்ளது. சென்னை மாநகரில் மட்டும் 1869.7 மி.மீ. மழை பெய்துள்ளது. ஆனால், இந்தப் பருவ காலத்தில் 701.6 மி.மீ. மழை தான் பெய்திருக்க வேண்டும். ஒரு நூற்றாண்டில் வழக்கமாக பெய்யும் மழையை விட 3 மடங்கு அதிக மழை பெய்துள்ளது.

பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களில் 1.10.2005 முதல் 14.12.2005 வரை 2 மடங்குக்கு மேல் மழை பெய்துள்ளது. அதாவது வழக்கமாகப் பெய்யும் மழை 443.4 மி.மீ ஆகும். ஆனால், இப்போது 898.9 மி.மீ மழை பெய்துள்ளது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். தொடர்ந்து கனமழை பெய்து கொண்டே இருந்ததால் மாநிலத்தில் பெருத்த சேதம் ஏற்பட்டது. பெரும் பாதிப்பு ஏற்பட்டது. உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் சேதம் அடைந்தன.

27-10-2005 அன்று 24 மணி நேரத்துக்குள்ளாக சென்னை நகரிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் சுமார் 400 மி.மீ மழை பெய்தது. இதன் காரணமாக, அதிக மக்கள் தொகை கொண்ட சென்னை மாநகரம் மழை வெள்ளத்தில் தத்தளித்தது. வடசென்னை மற்றும் தென்சென்னையில் சில பகுதிகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டன.

2002 மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் கடும் வறட்சி நிலவியது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மழை வருவதை மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தான் வேண்டும். ஆனால், முன் எப்போதும் கண்டிராத அளவுக்கு பெய்துள்ளது. இந்த கனமழை, வெள்ளம் தமிழகத்திற்குப் பெருத்த சேதத்தை ஏற்படுத்தி விட்டது. மக்களை மிகுந்த பாதிப்புக்குள்ளாக்கிவிட்டது. 23-10-2005 முதல் 4-12-2005 வரை 4 முறை தொடர்ந்து கனமழை பெய்தது.

மேலும், இந்த மாதம் 5ஆம் தேதி முதல் 10ஆம் தேதி வரை 5வது முறையாக 'பனூஸ்' புயல் தமிழகத்தை மிரட்டியது. புயல் வலுவிழந்தபோதிலும் அது தீவிர காற்றழுத்த மண்டலமாகி தென் மாவட்டங்களில் கனத்த மழை பெய்தது.

கடந்த 44 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 24-10-2005 அன்று மேட்டூர் அணை நிரம்பிய நிலையில் 2.24 இலட்சம் கன அடி தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்தது. எனவே, மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. தொடர்ந்து மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வரத்து அதிகமாக இருந்ததால், மேட்டூர் அணையில் இருந்து 3.35 இலட்சம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இது 66 ஆண்டுகளில் அதிகமான அளவாகும். இதன் காரணமாக, கொள்ளிடம் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. எனவே இங்கு மூன்று முறை பெருத்த சீரழிவு ஏற்பட்டது.

காவேரியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் கரை உடைந்து வெள்ளம், ஸ்ரீரங்கத்தைத் தாக்கும் அபாயம் இருந்தது. எனது அரசு எடுத்த நடவடிக்கைகளால் பேரழிவு தவிர்க்கப்பட்டது என்று மாண்புமிகு பிரதமரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

காவேரி டெல்டா மாவட்டங்களில் நாகை மற்றும் கடலூர் மாவட்டங்கள் கடந்த 26-12-2004 அன்று சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்டன. இந்த நிலையில் தற்போது ஏற்பட்ட வெள்ளத்தில் இந்த மாவட்டங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. மூன்றாவது முறை பெய்த மழை வெள்ளத்தில் கடலூர் மாவட்டம் பெரும் வெள்ளத்தில் தத்தளித்தது.

ஒவ்வொரு முறை வெள்ளம் ஏற்பட்டபோதும் தனது தலைமையிலான மாநில அரசு போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளையும், சீரமைப்பு பணிகளையும் மேற்கொண்டது என்றும் வெள்ள நிலைமை குறித்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் தினமும் ஆய்வு நடத்தியதையும் மாண்புமிகு பிரதமரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

சென்னை மாநகரில் வெள்ளம் பாதித்த பகுதிகளை 27-10-2005 அன்றும் மற்ற மாவட்டங்களில் 26-11-2005, 27-11-2005, 28-11-2005, 4-12-2005 மற்றும் 6-12-2005 ஆகிய நாட்களிலும் நேரில் பார்வையிட்டு நிவாரணப் பணிகளை தான் ஆய்வு செய்ததாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கியதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

13,685 கோடி ரூபாய் நிதி உதவி கோரி மாநில அரசு, 2 மகஜர்களையும், மற்றொரு துணை மகஜரையும் மத்திய அரசுக்கு அனுப்பியது என்றும், இது தவிர 2 லட்சத்து 58 ஆயிரம் டன் அரிசி மற்றும் 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கவேண்டும் என்று கேட்டிருந்தோம் என்றும் மாண்புமிகு பிரதமரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

ஆனால், மத்திய அரசு, இதுவரை, 500 கோடி ரூபாய் மட்டும் முன்பணமாக வழங்கியுள்ளது. அது தவிர, 1,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கியுள்ளது. மழை வெள்ளத்தால் பெருமளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும், ஆகவே, இந்த உதவி போதவே போதாது என்றும் மாண்புமிகு பிரதமரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

மத்திய அரசு தந்த முன்பணத்திற்கு மேலாக ஏற்கெனவே மாநில அரசு நிவாரணப் பணிகளுக்காகச் செலவு செய்துள்ளது. பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் நிலைமை மிகவும் பரிதாபகரமானதாகும். அதுவும் காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகளின் நிலைமை மிகவும் பரிதாபத்திற் குரியதாகும். தொடர்ந்து ஏற்பட்ட வறட்சி, வெள்ளம், சுனாமி, சமீபத்தில் பெய்த மழை வெள்ளம் என அவர்களை மிகவும் நொடிந்து போக செய்துவிட்டது. எனவேதான் விதிமுறைகளை எல்லாம் தளர்த்தி நிதியுதவி வழங்க வேண்டும்; விவசாயிகளுக்கு உதவிகளை வழங்க வேண்டும் என்று கேட்கிறோம் என்று மாண்புமிகு பிரதமரிடம், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.



நெற்பயிர் பயிரிட்ட விவசாயிகளுக்கு எக்டேருக்கு 2,500 ரூபாயிலிருந்து உயர்த்தி 20,000 ரூபாயாக உதவி வழங்க வேண்டும். மற்ற பயிர்களுக்கு இதேபோன்று கூடுதல் உதவியை உயர்த்தி வழங்க வேண்டும். மணல் மூடியுள்ள பகுதிகளில் அதனை அகற்ற ஒரு எக்டேருக்கு 18 ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டும். வெள்ளத்தில் பழுதடைந்த பம்ப் செட்டுகளைப் பழுது பார்க்கவும், அடித்துச் செல்லப்பட்ட பம்ப் செட்டுகளுக்குப் பதிலாக புதியதாக வாங்கவும் நிதி உதவி வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு பிரதமரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

தொடர்ந்து மழை வெள்ளச் சேதம் ஏற்பட்டு விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளானதால் விவசாயிகளின் கூட்டுறவுக் கடனையும் வட்டியையும் தள்ளுபடி செய்ய நிதி வழங்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

பாதிக்கப்பட்ட சாலைகள், பாசன கால்வாய்கள், நீர் நிலைகள், குடிநீர்த் திட்டங்கள், சமுதாயச் சொத்துக்கள் போன்றவற்றை சீர்செய்ய நிதி வழங்க வேண்டும். அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மீண்டும் சீர்செய்ய மாநில அரசுக்கு அதிக அளவு நிதி தேவைப்படுகிறது என்றும் மாண்புமிகு பிரதமரிடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

தமிழ்நாட்டிற்கு மாதத்திற்கு 1 லட்சத்து 2 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால், மத்திய அரசு அளிப்பதோ, 59,800 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்தான். தேவைப்படும் அளவில், 50 சதவிகித மண்ணெண்ணெய் தான் தருகிறது. இது பற்றி பிரதமருக்குப் பலமுறை கடிதம் எழுதியிருப்பதாகவும், எனவே பொது விநியோக முறையில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய, தேவையான மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் எனவும் மாண்புமிகு பிரதமரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

5 முறை தொடர்ந்து பெய்த மழை வெள்ளம், அதன் மூலம் ஏற்பட்ட சேதம், செய்யப்பட்ட நிவாரணப் பணிகள், தேவைப்படும் நிதிஉதவி பற்றி மாண்புமிகு பிரதமரிடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் தமிழகத்துக்கு, கோரிய நிதிஉதவியை கட்டாயம் வழங்கவேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

தமிழ்நாட்டில் எப்போதும் இல்லாத அளவுக்கு மாறி மாறி வந்த மழை வெள்ளத்தை மிக திறமையாகச் சமாளித்து சிறப்பான முறையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு பிரதமர் அவர்கள் தனது மனந்திறந்த பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக தமிழகம் திகழ்கிறது என்றும் மாண்புமிகு பிரதமர் பாராட்டினார்.

இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் தமிழகத்திற்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் மத்திய அரசு அளிக்கும் என்றும், தமிழகத்திற்குச் செய்யப்படும் உதவிகளை நானே நேரில் மேற்பார்வையிடுவேன் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பிரதமர் உறுதி அளித்தார். இந்தச் சந்திப்பு 30 நிமிட நேரம் நடந்தது. இந்தச் சந்திப்பின்போது தலைமை செயலாளர் திரு.என்.நாராயணன்,இ.ஆ.ப., சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் திரு. ஆர்.சந்தானம், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர். ★

# தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுசீரமைப்புப் பணிகளுக்கு மேலும் கூடுதலாக நிதி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தல்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 16.12.2005 அன்று இரவு 10 மணிக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினார்.

முன்னதாக, 16.12.2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை, புதுதில்லியில் சந்தித்துப் பேசினார்கள். அப்போது, கடந்த 2 மாதங்களில் தொடர்ந்து 5 முறை பெய்த கனமழையால் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டில் நிவாரணம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதில் தலையிடும்படி மாண்புமிகு இந்தியப் பிரதமரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அப்பணிகளுக்காக 13 ஆயிரத்து 685 கோடி ரூபாய் நிதி, 2 லட்சத்து 58 ஆயிரம் டன் அரிசி ஆகியவற்றையும், டிசம்பர் மாதத்திற்கு கூடுதலாக 43 ஆயிரத்து 200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயும் ஒதுக்கீடு செய்யும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.



மத்திய அரசு இதுவரை முன்பணமாக 500 கோடி ரூபாயும், 10 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெயும் மட்டுமே வழங்கி இருப்பதாகவும், வெள்ள சேதத்தின் அளவைக் கணக்கிடும்போது, இது போதுமானதல்ல என்றும் மாண்புமிகு பிரதமரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கான இழப்பீட்டு உதவியை, எக்டேருக்கு 2,500 ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தவேண்டும், மற்ற பயிர்களுக்கான இழப்பீட்டையும் உயர்த்த வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

சேதமடைந்த மற்றும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பம்ப்செட்டுகளை புதிதாக அமைக்கவும், சீரமைக்கவும் நிதி வழங்க வேண்டும்; கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடனுக்கான வட்டியையும், அசலையும் முழுமையாகத் தள்ளுபடி செய்ய நிதியுதவி வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு பிரதமரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். வீடுகள் முழுமையாக சேதமடைந்தோருக்கு, புதிய வீடு கட்டித்தரும் திட்டத்திற்கு சிறப்பு நிதியுதவி அளிக்கும்படியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

வெள்ளத்தில் சேதமடைந்த சாலைகள், நீர்ப்பாசன ஆதாரங்கள், குடிநீர் திட்டங்கள், சமூக சொத்துக்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி கோரினார்கள். மேலும், தமிழ்நாட்டிற்கு மாதம் ஒரு லட்சத்து 2 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படும்போது, அதில் பாதி அளவாக 59 ஆயிரத்து 800 கிலோ லிட்டர் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும், இது தொடர்பாக பிரதமருக்குப் பலமுறை தாம் கடிதம் எழுதியதாகவும் குறிப்பிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொது விநியோகத் திட்டத்தின்கீழ், வழங்குவதற்காக தமிழகத்திற்குத் தேவைப்படும் மண்ணெண்ணெயை முழுமையாக ஒதுக்கீடு செய்யும்படியும் கேட்டுக் கொண்டார்கள்.



அதைக் கேட்ட பிரதமர், நெருக்கடியான இந்த தருணத்தில் தமிழகத்திற்குத் தேவையான அதிகபட்ச உதவியை மத்திய அரசு வழங்கும் என உறுதியளித்தார்.

அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை 16.12.2005 அன்று இரவு, 10 மணிக்குத் தொடர்பு கொண்ட பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள், தமிழ்நாட்டில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மேலும் 500 கோடி ரூபாயை உடனடி உதவியாக வழங்க மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்தார். தவிரவும், ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 ஆயிரம் கிலோ லிட்டர் தவிர, மேலும் 10 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

சாலைகள், நீர்ப்பாசன ஆதாரங்கள் போன்ற சேதமடைந்த உள்கட்டமைப்பு வசதிகளை சீரமைக்க நிதியுதவி வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்ற மாண்புமிகு பிரதமர், இது தொடர்பாக நபார்டு வங்கியிடம் தாம் பேசி இருப்பதாகவும், அதற்காக, கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து நபார்டு வங்கி கூடுதல் நிதியுதவி வழங்கும் என்றும் தெரிவித்தார். தமிழகத்தின் சாலை மற்றும் நீர்பாசன அமைப்புகளை சீர்படுத்த கிராமப்புற கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து கூடுதலாக நபார்டு வங்கி நிதியளிக்கும் என்றும் மாண்புமிகு பிரதமர் குறிப்பிட்டார். 16–12–2005 அன்றைய சந்திப்பின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வைத்த அனைத்து கோரிக்கைகளும் உயர்மட்டக் குழுவால் விரிவாக பரிசீலிக்கப்படும் என்றும் மாண்புமிகு பிரதமர் உறுதியளித்தார்.

தொடர்ந்து 5 முறை பெய்த மழையால், 22 மாவட்டங்களில் பெருமளவில் சேதம் ஏற்பட்டு, பேரழிவை தமிழகம் சந்தித்திருப்பதாகவும், பிரதமரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். விவசாயிகளுக்கும், உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் இதுவரை இல்லாத அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

இதைக் கணக்கில் கொண்டு, வறட்சி, வெள்ளம், சுனாமி, தற்போது 5 முறை பெய்த மழை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக உதவி வழங்க இடர்பாட்டு நிவாரண நிதி மற்றும் தேசிய இடர்பாட்டு நிவாரண நிதிக்கான விதிகளை தளர்த்தி, சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடன் மற்றும் வட்டியை முழுமையாக ரத்து செய்ய நிதி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். சுனாமி சோகத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில், தற்போது வீடுகளை இழந்தவர்களுக்கும், புதிய வீடு கட்டித்தரும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவேண்டும் என்பதையும் மாண்புமிகு பிரதமரின் கவனத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு சென்றார்கள்.

மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பு மிகவும் மோசமானது என்பதால், சாலைகள், நீர்ப்பாசன பணிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைக்க தனித் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்குத் தனி நிதியுதவி அளிக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பெருமளவு சேதத்தின் அடிப்படையில், தேவைப்படும் உதவிகள் பற்றி தமிழக அரசு விரிவான திட்டம் தயாரித்து, அதன் அடிப்படையில் 13 ஆயிரத்து 685 கோடி ரூபாய் நிதியுதவி கோரியுள்ள நிலையில், இதுவரை வழங்கப்பட்டுள்ள ஆயிரம் கோடி ரூபாய் போதுமானதல்ல என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். தமிழ்நாட்டின் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள, மேலும் நிதியுதவி உடனடியாக வழங்கப்படவேண்டியது மிகவும் அவசியம் என்றும், மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ★

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் சார்பில் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் கணினித் தொழில்நுட்பம் அறிதல் திட்டம்



மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அழைப்பை ஏற்று, தமிழகம் வந்துள்ள திரு. பில்கேட்ஸ், அவர்கள் 9.12.2005 அன்று, சென்னை, கோட்டையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

கல்வித் தரத்தினை உயர்த்தவும், ஆசிரியர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரவும் மைக்ரோ சாப்ஃட் நிறுவனத்தின் 'கற்பித்தல் திட்டத்தில் பங்குதாரர்கள்' என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக சிக்ஷா கல்வித் திட்டத்தை அமல்படுத்த, கடந்த 22.8.2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழக அரசுக்கும், மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்திற்கும் (இந்தியா) இடையே ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின்படி, சென்னையில் தகவல் தொழில்நுட்ப அகாடமி ஒன்றை மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் அமைத்து நடத்தும். 5 ஆண்டுகளில் இது செயல்படுத்தப்படும் என்பது அந்த ஒப்பந்தம் ஆகும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான இடவசதிகளைத் தமிழக அரசு வழங்கியுள்ளது. இங்கு உலகத்தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்பக் கருவிகள், கணினிகள் அமைக்கப்படும். இந்தப் பணிகள் எல்லாம் அடுத்த ஆண்டு (2006) பிப்ரவரி மாதத்திற்குள் முடிக்கப்படும்.

ஆசிரியர்களுக்கு கணினிக் கல்வியும் கணினி உதவியுடன் பயிற்சியும் அளிக்கப்படும். ஒவ்வொரு குழுவுக்கும் 12 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும்.

இந்தப் புதிய அற்புதமான பயிற்சித் திட்டத்தை 9.12.2005 அன்று, மாண்புமிகு முதலமைச்சர்





அவர்கள், பில்கேட்ஸ் அவர்களின் முன்னிலையில் வீடியோ கான்பரன்சிங் மூலம் துவக்கி வைத்தார்கள்.

தற்போது சென்னையில் செயல்படும் தகவல் தொழில்நுட்ப அகாடமி தவிர, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், வேலூர் ஆகிய 5 மையங்களில் செயல்படுகிறது. இந்த மையங்களில் உள்ள ஆசிரியர்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பில்கேட்ஸ் அவர்களும், வீடியோ கான்பரன்சிங் மூலம் கலந்துரையாடினார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம், 5 ஆண்டுகளில் 80 ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். தமிழ்நாட்டில் உள்ள 35 இலட்சம் மாணவர்களும் இதன் மூலம் பயன் பெறுவார்கள். ஆசிரியர்களுக்கான "கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்'' என்ற கையேட்டினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அதனை பில்கேட்ஸ் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

தனது அழைப்பை ஏற்று சென்னை வந்ததற்காக பில்கேட்ஸ் அவர்களிடம், தனது மகிழ்ச்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார். தனது தலைமையிலான தமிழக அரசு, தகவல் தொழில்நுட்பத் துறையில் மிக வேகமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் தமிழ்நாட்டில் 'கற்பித்தல் திட்டத்தில் பங்குதாரர்கள்' என்ற திட்டத்தை செயல்படுத்தவும் மற்றும் பல்வேறு வகையில் அந்த நிறுவனம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

மைக்ரோ சாஃப்ட் நிறுவனம், 6 மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் கணினி அமைக்கும் புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. அதில் தமிழ்நாட்டையும் சேர்க்க வேண்டும் என்று பில்கேட்ஸ் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

தமிழக அரசுடன் மிக நெருக்கமாக இருந்து மைக்ரோ சாஃப்ட் நிறுவனம், பல்வேறு உதவிகள் செய்துள்ளதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள். தமிழக அரசில் உள்ள மூத்த செயலாளர்களுக்கு கணினி பயிற்சி மற்றும் மாநில டேட்டா மையம் அமைக்க தொழில்நுட்ப ஆலோசனை ஆகியவற்றுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

தேவையான அனைத்து மென்பொருள்களுடன் கூடிய மலிவு விலையிலான கணினிகள் தகவல் தொழில்நுட்ப புரட்சியை மேம்படுத்துவதில் பெரிதும் உதவும். மேலும், தமிழக அரசு ஊழியர்கள் கணினி வாங்குவதை தாம் சாத்தியமாக்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். அவ்வாறு மலிவு விலையில் கணினி வந்தால் பலரும் கணினி வாங்க முடியும்.

தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் தகவல் தொழில்நுட்பம் போய்சேர வேண்டும். ஒவ்வொருவரது முகத்திலும் மகிழ்ச்சி ஏற்பட வேண்டும் என்பதே எனது குறிக்கோள். அதன் அடிப்படையில்தான் நான் கிராம பஞ்சாயத்துக்கள் வரை கணினி கொண்டு சென்றிருக்கிறேன். இதன் மூலம் கிராமத்திற்கும், நகரத்திற்கும் இடையே உள்ள தொழில்நுட்ப இடைவெளி குறையும். கீழ்மட்ட அளவில் தகவல் புரட்சி ஏற்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதற்கு மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் ஆதரவும், ஊக்கமும் தரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இதற்கு முழு ஆதரவு தருவதாக பில்கேட்ஸ் அவர்கள் உறுதி கூறினார்.

சென்னையில் மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் "High Performance Computing Centre and Engineering Product Design and Delivery Centre" அமைக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். உலக பிரசித்தி பெற்ற பல்வேறு நிறுவனங்கள் இங்கு உள்ளன. மனித ஆற்றல் இங்கு ஏராளமாக உள்ளது. அனைத்து வசதிகளும் இங்கு உள்ளன. எனவே, சென்னையில் இதனை அமைக்கலாம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

இதற்காக தமிழக அரசு நிலம் வழங்கவும் மற்றும் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யவும் தயாராக இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

சென்னையில் உள்கட்டமைப்பு வசதிகள் நன்றாக உள்ளன. மனித ஆற்றலும் உள்ளது. எனக்கு இது மிகவும் பிடித்திருக்கிறது. மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் இந்தியாவில் தனது விரிவாக்கத்தைத் துவங்கும்போது சென்னைக்குத்தான் முதலிடம் அளிப்போம் என்று பில்கேட்ஸ் உறுதி கூறினார்.

பில்கேட்ஸ், அவரது மனைவி மெலிண்டா ஆகியோரின் பிரமிக்க வைக்கும் மனிதாபிமான செயலை பாராட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மற்றவர்களுக்கு முன்மாதிரியாக திகழ்கிறார்கள் என்று கூறினார். 2003ஆம் ஆண்டு தனது வேண்டுகோளை ஏற்று, "பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை" எய்ட்ஸ் நோயை தடுப்பதில் ஆவாகன் இந்திய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பு மூலம் எடுத்த தொடர் நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

எய்ட்ஸ் கிருமிகள் பரவுதல் 2001ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 1.25 சதவிகிதமாக இருந்தது. 2004ஆம் ஆண்டில் இது 0.65 சதவிகிதமாக குறைந்துள்ளது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். எனது அரசு எடுத்த பல்வேறு தொடர் முயற்சிகளால் படிப்படியாக இது குறைந்தது என்றும் கடந்த மூன்றாண்டுகளில் கிருமிகள் பரவுவது படிப்படியாகக் குறைந்து வருகிறது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

இந்த விஷயத்தில் பில்கேட்ஸ் இதுவரை செய்த பணிகளுக்கு பாராட்டுத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், CD4 Cell Count, Viral Load Determination and Genotype Resistance Assay and Second Line Anti Retro Viral Drugs ஆகியவற்றை வாங்க மெலிண்டா பில்கேட்ஸ் அறக்கட்டளை சார்பில் தொடர்ந்து உதவவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

2 ஆயிரமாவது ஆண்டு வளர்ச்சிக்கான இலக்குகளை (மில்லியன் டெவலப்மெண்ட் கோல்) வெற்றிகரமாக அடைவதில் முழுமனதோடு, கடுமையாக உழைத்து வருவதையும், அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு சிறந்த வாழ்க்கையை உருவாக்கித் தர முயல்வதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பில்கேட்ஸிடம் எடுத்துக் கூறினார்கள். இந்தத் துறைகளிலும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்ஸ் பவுண்டேஷனுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள்.

சென்னை வரும்படி தன்னை அழைத்ததற்கும், முதலமைச்சர் அவர்களுடன் இங்கு இருப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கும் பில்கேட்ஸ் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். சென்னை நகரில் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்கட்டமைப்பு வசதிகளையும் இங்குள்ள மனித ஆற்றலையும் பில்கேட்ஸ் வெகுவாகப் பாராட்டினார்.

எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த தமிழக அரசு எடுத்து வரும் முயற்சிகளையும், சாதனைகளையும் பாராட்டிய பில்கேட்ஸ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு அரசு இதில் முன்மாதிரியாகத் திகழ்கிறது என்றும் கூறினார்.

தமிழ்நாட்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வெற்றிகரமாகச் செயல்படுவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பில்கேட்ஸ் பாராட்டுத் தெரிவித்தார். மகளிர் சுயஉதவிக் குழுவினர் கணினி பயன்படுத்துவது தன்னைப் பெரிதும் கவர்ந்தது, மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் பில்கேட்ஸ் பாராட்டினார்.

இந்தச் சந்திப்பின்போது மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு.சி.பொன்னையன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் திரு.என் நாராயணன், இ.ஆ.ப., மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் சார்பில், மைக்ரோ சாஃப்ட் இந்தியா நிறுவனத்தின் தலைவர் திரு.ரவி வெங்கடேசன் மற்றும் திரு. ரோகித்குமார், திரு. ஜோசெரல், திரு. அசோக் அலெக்சாண்டர், திருமதி. பத்மா சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். ★



# விபத்தில் பெற்றோரை இழந்த குழந்தைகள் கல்வி பயில மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8-12-2005 அன்று தலைமைச் செயலகத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மாடம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த செல்வி திவ்யா மற்றும் செல்வன் மணிகேஸ்வரன் ஆகியோரது தந்தை மற்றும் தாய் விபத்தில் இறந்து விட்டதன் காரணமாக, அவர்களது கல்வி பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையில், அவர்கள் ஒவ்வொருவருக்கும் கல்விச் செலவிற்காக 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கினார்கள்.

ஒரு குடும்பத்தில் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய், விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாய் இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியை தொடர்ந்து கற்க இயலாத நிலை ஏற்படுகிறது என்பதால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவ்வாறான சூழ்நிலைகளில் அத்தகைய குழந்தைகள் தங்களது கல்வியை

இடையில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து கல்வி கற்கும் வகையில், அவர்களது கல்விப் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில், புதிய திட்டம் ஒன்றை இந்த ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்தப் புதிய திட்டத்தின்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ, மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படவும், இந்த நிதியை அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாகச் செலுத்தி, அதில் இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவற்றை அந்த மாணவ, மாணவியரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் அவர்களது பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படவும் வகை செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மாடம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு.காளிமுத்து என்பவரும் அவரது மனைவி திருமதி. லட்சுமி என்பவரும் அவர்களது வீட்டில் ஸ்டவ் வெடித்து ஏற்பட்ட விபத்தில் காலமானார்கள். கூலி வேலை செய்துவந்த திரு.காளிமுத்து மற்றும் அவரது மனைவி திருமதி.லட்சுமி ஆகியோர் இறந்துவிட்ட நிலையில் அவர்களது குழந்தைகளான செல்வி திவ்யா மற்றும் செல்வன் மணிகேஸ்வரன் ஆகியோர் ஆதரவற்ற நிலையில் இருப்பதாகவும், அவர்கள் தொடர்ந்து கல்வி கற்க வசதியற்ற நிலையில் இருப்பதாகவும் தெரிவித்து தாங்கள் வாழ்க்கை நடத்த உதவிடுமாறு கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு அளித்திருந்தார்கள்.

இந்தக் கோரிக்கை மனுவை பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், எதிர்பாராமல் ஒரு குடும்பத்தில் ஏற்படும் இழப்பால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற மனித நேயத்தோடு தான் தொடங்கிய புதிய திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கிட ஆணையிட்டார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8–12–2005 அன்று தலைமைச் செயலகத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மாடம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த செல்வி திவ்யா மற்றும் செல்வன் மணிகேஸ்வரன் ஆகியோருக்கு, அவர்களது தந்தை மற்றும் தாய் விபத்தில் இறந்து விட்டதன் காரணமாக, அவர்களது கல்வி பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையில், அவர்கள் ஒவ்வொருவருக்கும் கல்விச் செலவிற்காக 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கினார்கள்.

இந்த நிதி உதவி, பாதிக்கப்பட்ட குழந்தைகளான செல்வி திவ்யா மற்றும் செல்வன் மணிகேஸ்வரன், அவர்களது பாதுகாவலர் திரு.அய்யப்பன் மற்றும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் ஆகியோரது பெயரில் கூட்டுக் கணக்கு ஏற்படுத்தி தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த முதலீட்டிற்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகையான தலா 3,500 ரூபாய் வீதம் மொத்தம் 7,000 ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் மே மாத இறுதியில் வங்கி வரைவோலையாக அனுப்பப்படும். இக்குழந்தைகள் மேல்நிலைக் கல்வியினை முடித்த பிறகு கலை, அறிவியல் கல்லூரி அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து படிக்கும்போது, இந்த நிரந்தர வைப்புத் தொகையினை படிப்பின் காலத்திற்கு ஏற்ப மூன்று அல்லது நான்கு சம தவணைகளில் ஒவ்வொரு கல்வி ஆண்டின் ஆரம்பத்திலும், முதலீட்டுத் தொகையில் இருந்து தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தால் சமமாகப் பிரித்து அனுப்பி வைக்கப்படும். இத்தொகையினை அந்தக் குழந்தைகள் தங்களது கல்லூரிப் படிப்பினை தொடர்ந்து படிக்க பயன்படும். மீதமுள்ள பணம் மற்றும் அதற்கான வட்டி அதன் பின்னர் வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து நிதி உதவி பெற்றுக்கொண்ட செல்வி திவ்யா மற்றும் செல்வன் மணிகேஸ்வரன் மற்றும் அவர்களது பாதுகாவலர் திரு.அய்யப்பன் ஆகியோர் தங்களது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர்.

❖ ❖ ❖

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 3 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க ஆணை



இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று, சுதந்திரம் அடைவதற்காகப் போராடி, தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட்டும், சிறையில் அடைக்கப்பட்டும் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு கொடுத்திருந்த மதுரை, நீலகிரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 3 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மதுரை மாவட்டம், தும்மலப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பி. ராமசாமி அவர்கள், இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது, வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்று, அலிபுரம் சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்ததாகவும், நீலகிரி மாவட்டம், தும்மனட்டி கிராமம், கெந்தொரையைச் சேர்ந்த திரு. என். லிங்கன் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், லெட்சுமிபுரம், மூன்றாம் தெருவைச் சேர்ந்த திரு. எஸ். சங்கரன் ஆகியோர், தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட்டு சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி துன்பம் அனுபவித்ததாகவும், அதனடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவர்களது தியாகத்தைப் போற்றி மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை உடனடியாக வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஓய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளித்து கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிட ஆணையிட்டுள்ள ஓய்வூதியத்திற்கான அரசு ஆணைகளை, இந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் சார்ந்துள்ள மாவட்டங்களைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் நேரில் வழங்குவார்கள். ★

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ராமகிருஷ்ணா மிஷன் ஆதரவற்ற மாணவர் இல்லத்திற்கு, புதிய கட்டடம் கட்ட, ரூ.1.84 கோடி நிதி உதவி



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 14.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ராமகிருஷ்ணா மிஷன் ஆதரவற்ற மாணவர் இல்லத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள நிதியுதவியாக மாணவர் இல்லத்தின் செயலாளர் சுவாமி தேசிகாத்மானந்தா அவர்களிடம் 1 கோடியே 84 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

ஆதரவற்ற மற்றும் பெற்றோர்களால் கைவிடப்பட்ட மாணவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து, அவர்கள் தங்கி பள்ளி இறுதித் தேர்வு நிலை வரை பயிலவும், தொழிற் கல்வியான பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து பயிலவும், கல்வி வசதி அளிக்கும் வகையில், சென்னை மயிலாப்பூரில் ராமகிருஷ்ணா மிஷன் சார்பாக மாணவர் இல்லம் நடத்தப்படுகின்றது. 1905ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த மாணவர் இல்லத்திற்கு, புதிய கட்டடம் கட்டுவதற்கு நிதியுதவி வழங்கி உதவிட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மாணவர் இல்லத்தின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இக்கோரிக்கையினை பரிவுடன் பரிசீலித்து, தன்னலமற்ற சேவை செய்யும் இந்த மாணவர் இல்லத்தின் நலனைக் கருத்தில் கொண்டு, புதிய கட்டடம் கட்டுவதற்கு 1 கோடியே 84 லட்சம் ரூபாய் நிதியுதவியினை வழங்கிட உத்தரவிட்டார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த நிதி உதவி 1.84 கோடி ரூபாய்க்கான காசோலையினை ராமகிருஷ்ணா மிஷன் மாணவர் இல்லத்தின் செயலாளர் சுவாமி தேசிகாத்மானந்தா அவர்களிடம் 14.12.2005 அன்று, நேரில் வழங்கினார்கள். ராமகிருஷ்ணா மிஷன் மாணவர் இல்ல மேலாண்மை குழுத் தலைவர் திரு.கௌதமானந்தா, மாணவர் இல்ல உயர்நிலைப் பள்ளித் தாளாளர் திரு.சக்ரதரானந்தா ஆகியோர் உடனிருந்தனர். ★

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சென்னை மாநகராட்சியில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் பூங்கா ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகராட்சி மண்டலம்–1ன் கீழ் உள்ள, 3, 5, 6, 7, 10, 11 மற்றும் 13 ஆகிய வார்டுகளில், மொத்தம் 2 கோடியே 47 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 24 கட்டடங்கள் மற்றும் பூங்கா ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.வா. மைத்ரேயன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.17.13 லட்சம் செலவில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடம், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.76.41 லட்சம் செலவில், கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள் மற்றும் சமுதாயக் கூடங்கள், சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் திரு. க. சண்முகம் மற்றும் திருமதி. சி. கஸ்தூரி ஆகியோரின் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10.99 லட்சம் செலவில் கட்டப்பட்ட சத்துணவுக் கூடங்கள் மற்றும் மாநகராட்சி நிதியிலிருந்து மொத்தம் ரூ.142.89 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டடங்கள், மருந்தகம், பூங்கா மற்றும் மாநகராட்சி அலுவலகக் கட்டடங்கள் ஆகிய கட்டடங்கள் மற்றும் திருவள்ளுவர் நகர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள பூங்கா ஆகியவை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 27.12.2005 அன்று திறந்து வைக்கப்பட்டன.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட பல்வேறு கட்டடங்களின் விவரம் :**

ஜெ.ஜெ.நகர் 'எப்' மற்றும் 'டி' தெரு சந்திப்பில் உள்ள சென்னை மாநகராட்சி தொடக்க பள்ளிக்கு தரைதளத்தில் ஒரு வகுப்பறையும், முதல் தளத்தில் ஒரு கழிப்பறை மற்றும் தலைமை ஆசிரியர் அறை ஆகியவை கொண்ட கட்டடம், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் வா. மைத்ரேயன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 17.13 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

ஜெ.ஜெ. நகர் 'எப்' மற்றும் 'டி' தெரு சந்திப்பில் 3 வகுப்பறைகள் கொண்ட சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளி கட்டடம், ஜெயராமன் நாடார் தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி உருது நடுநிலைப் பள்ளிக்கு தரை தளத்தில் 2 வகுப்பறைகள் மற்றும் தலைமை ஆசிரியர் அறை கட்டடம், நாவலர் நகர், ஜெ.ஜெ. நகர் சி–பிளாக் ஏ1 தெரு, ரங்கநாதபுரம் குடியிருப்பு, திலகர் நகர், கீரை தோட்டம் பகுதி, நாகூரான் தோட்டப் பகுதி, சீனிவாசபுரம் 2–வது தெரு மற்றும் பார்த்தசாரதி நகர் ஆகிய இடங்களில் சமுதாய சேவை மைய கட்டடங்கள் ஆகிய இந்த கட்டடங்கள், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, மொத்தம் 76 லட்சத்து 41 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன.

10 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் செலவில், இரட்டை குழி தெருவில் உள்ள P.W.D. குடியிருப்பிலும், பார்த்தசாரதி நகரிலும் சத்துணவு கூடங்கள் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் திரு. க. சண்முகம் மற்றும் திருமதி. சி.கஸ்தூரி ஆகியோரின் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளன.

திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் இரண்டாம் தளத்தில் கூடுதலாக மூன்று வகுப்பறைகள், ஆசிரியர்கள் அறை மற்றும் கழிப்பறைகள் கொண்ட கட்டடம், திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள மாநகராட்சி துவக்கப் பள்ளியில் இரண்டாம் தளத்தில் கூடுதலாக இரண்டு வகுப்பறைகள், மாடிப்படி அறை கொண்ட கட்டடம், எழில் நகர் 1–வது தெரு மற்றும் பாரதி (அண்ணா) தெரு சந்திப்பில் மருந்தகக் கட்டடம், புத்தா தெரு மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்காக இரண்டாம் தளத்தில் கூடுதலாக 3 வகுப்பறைகள், மாடிப்படி அறை மற்றும் கழிப்பறைகள் கொண்ட கட்டடம், எம்.ஜி.ஆர். நகர் மாநகராட்சி துவக்கப் பள்ளியில் 6 வகுப்பறைகள் கொண்ட கட்டடம், ஹரிநாராயணபுரம் மாநகராட்சி துவக்கப் பள்ளியின் இரண்டாம் தளத்தில் கூடுதலாக 3 வகுப்பறைகள், கழிப்பறை, ஆசிரியர்கள் அறை கொண்ட கட்டடம், துர்கா தேவி நகரில் மாநகராட்சி வார்டு–3 அலுவலக கட்டடம், அம்மணி அம்மாள் தோட்டம் பகுதியில் உள்ள மாநகராட்சி வார்டு – 5 அலுவலக கட்டடம், பகுதி – 3 அலுவலகத்தில் சுகாதார ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் அலுவலக கட்டடம் ஆகிய கட்டடங்கள் 1 கோடியே 29 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவிலும், திருவள்ளுவர் நகர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் பூங்கா ஒன்று 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலும், ஆக மொத்தம் 1 கோடியே 42 லட்சத்து 89 ஆயிரம் ரூபாய் செலவில், சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சியின் மண்டலம் 1ல் உள்ள 7 வார்டுகளில், மொத்தம் 2 கோடியே 47 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 24 கட்டடங்கள் மற்றும் பூங்கா ஆகியவற்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.12.2005 அன்று தலைமைச்செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்வில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரம், உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், தலைமைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் திரு. எம்.பி. விஜயகுமார், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

❖ ❖ ❖

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தமிழக அரசு நிறுவனங்களின், 2004-2005 ஆம் ஆண்டிற்கான ஈவுத்தொகை மற்றும் நியமனக் கட்டணம் அளிப்பு






மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், 27.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு கனிம நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் சார்பில் அரசின் பங்குக்கு உரிய ஈவுத் தொகை மற்றும் நியமன கட்டணம் என மொத்தம் 28 கோடியே 69 லட்சத்து 60 ஆயிரத்து 825 ரூபாய்க்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு, பல்வேறு நிறுவனங்களை அரசு சார்பில் தொடங்கி நடத்தி வருகிறது. இந்த நிறுவனங்கள் நிகர லாபம் ஈட்டும்போது ஒவ்வொரு ஆண்டும் லாபத்தின் அடிப்படையில் தமிழக அரசின் பங்குத் தொகைக்கு உரிய ஈவுத் தொகையினை வழங்கி வருகிறது.

இதன்படி,

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில் உள்துறை செயலாளர் திரு. பவன் ரெய்னா, இ.ஆ.ப., தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திரு. ஐ.கே. கோவிந்த், இ.கா.ப., ஆகியோர் தமிழ்நாடு அரசுக்கு செலுத்த வேண்டிய 2004–2005ஆம் ஆண்டுக்கான ஈவுத் தொகை ரூபாய் 40 லட்சத்திற்கான காசோலையினையும்,

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், தொழில் துறை செயலாளர் திரு. டி. ராஜேந்திரன், இ.ஆ.ப., ஆகியோர் 2004–2005ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகை ரூ.6,72,23,475 மற்றும் 2005–2006ஆம் ஆண்டிற்கான இடைக்கால ஈவுத் தொகை ரூ.3,66,67,350 ஆக மொத்தம் 10 கோடியே 38 லட்சத்து 90 ஆயிரத்து 825 ரூபாய்க்கான காசோலையினையும், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (Power Finance) சார்பில் மாண்புமிகு மின்சாரம் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் நத்தம் திரு. ஆர். விசுவநாதன், எரிசக்தித் துறை செயலாளர் திரு. சத்பதீ, இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன மேலாண் இயக்குநர் திரு. சி.வி. சங்கர், இ.ஆ.ப., ஆகியோர் 2004–2005ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகை ரூபாய் 4.40 கோடிக்கான காசோலையினையும், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சார்பில், அதன் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திரு. வி. கனகராஜ், இ.ஆ.ப., அவர்கள், 2004–2005ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகை 78.70 லட்சம் ரூபாய் மற்றும் நியமனக் கட்டணம் 12.72 கோடி ரூபாய் ஆகியவற்றுக்கான காசோலைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் நேரில் வழங்கினார்கள். □

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கிருஷ்ணகிரி நீர்த்தேக்க வலது புறக் கால்வாய் நீட்டிப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் வலதுபுறக் கால்வாயினை நீட்டித்து, நீர்த்தேக்கத்தின் உபரி நீரை அப்பகுதிகளில் உள்ள 34 ஏரிகளுக்கு வழங்கும் வகையில் 7 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பில் செயல்படுத்த இருக்கும், கிருஷ்ணகிரி நீர்த்தேக்க வலதுபுறக் கால்வாய் நீட்டிப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் தருமபுரி மாவட்டத்தை சேர்ந்த பாலக்கோடு வட்டம் ஆகிய பகுதிகளை சார்ந்த விவசாயிகள், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து வெளியேறும் உபரி நீரை தங்கள் பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கு திருப்பிவிட்டு பாசனவசதியை மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர். இவர்களது கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 7.06 கோடி ரூபாய் மதிப்பில் கிருஷ்ணகிரி அணையின் வலதுபுற கால்வாயினை நீட்டித்து, பொம்மசமுத்திரம், காரிமங்கலம், திண்டல் உள்ளிட்ட 34 ஏரிகளுக்கு நீர் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த 25.2.2005 அன்று ஆணையிட்டார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள பொம்மசமுத்திரம், காரிமங்கலம், திண்டல் உள்ளிட்ட 34 ஏரிகளுக்கு, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் உபரி நீரை வழங்கும் வகையிலான, கிருஷ்ணகிரி வலதுபுறக் கால்வாய் நீட்டிப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

கிருஷ்ணகிரி வலதுபுறக் கால்வாய் நீட்டிப்புத் திட்டம் செயல்படுத்தப்படுவதன் மூலம், வெள்ளக் காலங்களில், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் பெருகி வரும் அதிக அளவு உபரி நீர், அகலப்படுத்தப்பட்ட கால்வாய் மற்றும் 13 கி.மீ. நீளத்திற்கு புதிதாக நீட்டிக்கப்பட்ட கால்வாய் ஆகியவற்றின் வழியாக விரைவாக எடுத்துச் செல்லப்பட்டு, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 34 ஏரிகளில் நீர் நிரம்ப வழி வகை ஏற்படும். இதனால், மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரியைச் சேர்ந்த 2,118 ஏக்கர் நிலங்கள் நிலையான பாசன வசதி பெறும்.




இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், பொதுப்பணித் துறை செயலாளர் திரு. என்.எஸ். பழநியப்பன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறை செயலாளர் திரு. ராம் மோகன்ராவ், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ❖




# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வணிக வரி ஆணைய அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டினார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரி ஆணைய அலுவலகத்திற்கென சென்னை கிரீம்ஸ் சாலையில், 5 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வணிகவரித்துறை ஆணையர் அலுவலகத்திற்கென, 5 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும் என்று 5.4.2005 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டத் தேவைப்படும் 5.50 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்பளிப்பு அளித்தார்கள்.

இதன்படி, சென்னை கிரீம்ஸ் சாலையில் 5.50 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக உள்ள இந்தப் புதிய கட்டடத்திற்கு 27.12.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த புதிய வணிகவரி ஆணையர் அலுவலகக் கட்டடம் ஐந்து அடுக்கு மாடிகள் கொண்டதாக அமையும். மொத்தம் 48,862 சதுர அடி பரப்பு கொண்ட இந்த கட்டடத்தில் கணினி மையம், கூட்ட அரங்கம் மற்றும் வணிகவரித்துறை பயிற்சி மையம் ஆகியவையும் அமையும். வணிக வரித் துறையில் ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் 400 பணியாளர்கள், அலுவலகத்திற்கு வருகின்ற வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளுடன் இந்தக் கட்டடம் கட்டப்படும். வணிக வரித்துறை தற்பொழுது முழுவதுமாக கணினி மயமாக்கப்பட்டுள்ளதால் கணினி மையம் செயல்படுவதற்கு ஏதுவாக புதிய கட்டிடத்தில் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

இந்த நிகழ்வில் மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம், தலைமைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., வணிக வரித் துறை செயலாளர் திரு. எஸ். இராஜரெத்தினம், இ.ஆ.ப., வணிக வரித் துறை ஆணையர் திரு. டி. பிரபாகர், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர். ❑

# தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்குரைஞர் கழகத்தின் மூல நிதி ஆதாரத்தை வலுப்படுத்தி மேம்படுத்தும் வகையில் ஒரு கோடி ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை



தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்குரைஞர் கழகத்தில் (Bar Council) உறுப்பினர்களாக உள்ள வழக்குரைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மருத்துவ உதவி, கல்வி உதவி, இறந்தவர்களின் குடும்பத்திற்கான நிதி உதவி, வழக்குரைஞர் பணியில் இருந்து விலகிக் கொள்பவருக்கு நிதி உதவி போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான நிதி, பெரும் அளவில் தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி சட்டத்தின்படியான நல நிதி வில்லைகள் மூலம் வசூலிக்கப்படும் தொகையில் இருந்து பெறப்படுகிறது.

4.1.2006 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்குரைஞர் கழகத்தின் புதிய பொறுப்பாளர்கள் அதன் தலைவர் திரு. கே. சந்திரமோகன் அவர்களது தலைமையில் என்னை நேரில் சந்தித்து, வழக்குரைஞர்களின் நலனுக்கான இந்த நலத் திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்த உதவிடும் வகையில் அரசு நிதி உதவி அளிக்க வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை வைத்தனர்.

இந்தக் கோரிக்கையை பரிவுடன் பரிசீலனை செய்து, வழக்குரைஞர்கள் மற்றும் அவர் தம் குடும்பங்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு, அகால மரணம் அடையும் வழக்குரைஞர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி உள்ளிட்ட நலத் திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்த ஏதுவாக தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்குரைஞர் கழகத்தின் மூல நிதி ஆதாரத்தை வலுப்படுத்தி மேம்படுத்தும் வகையில் 1 கோடி ரூபாயை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

நான் வழங்க ஆணையிட்டுள்ள இந்த நிதி உதவி, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்குரைஞர் கழகத்தில் உறுப்பினர்களாக உள்ள அனைத்து வழக்குரைஞர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தினருக்கு ஒரு நம்பிக்கையையும், பாதுகாப்பு உணர்வையும் வழங்குவதோடு, தமது கடமையை அவர்கள் சிறப்புடன் செய்திட ஊக்கம் அளிப்பதாகவும் அமையும் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 8.1.2006

# புதிய ஓய்வு ஊதியத் திட்டம்

## திருக்கோயில்களில் பணியாற்றும் நிரந்தரப் பணியாளர்கள் பயன்பெற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

தமிழ்நாடு பல்வேறு துறைகளிலும் முழு வளர்ச்சி அடைந்து, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ வேண்டும் என்ற எனது குறிக்கோளை எய்த வேண்டி, எனது தலைமையிலான அரசு அனைத்துத் துறைகளிலும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற முதுமொழிக்கேற்ப தமிழகத்தில் உள்ள அனைத்து திருக்கோயில்களும் புதுப் பொலிவு பெற்று, பூஜை முதலியன தினந்தோறும் தங்கு தடையின்றி நடைபெறுவதற்கும், பழுதடைந்த திருக்கோயில்களைப் புதுப்பித்து, திருப்பணி செய்வதற்கும், ஆன்மீகம் தழைத்து செழித்து ஓங்குவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை நான் எடுத்து வருகிறேன். திருக்கோயில்களுக்கு வரும் ஏழை எளிய பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் நோக்கத்துடன் அன்னதானத் திட்டம் 23.3.2002 அன்று என்னால் துவக்கப்பட்டு, தற்போது 180 திருக்கோயில்களில் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. இந்த உன்னதமான திட்டத்தை வரும் 14.1.2006 முதல் மேலும் 180 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தி மொத்தம் 360 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட நான் ஆணையிட்டுள்ளேன். பாடல் பெற்றதும், மங்களாசாசனம் பெற்றதுமான திருக்கோயில்கள் உட்பட பழமையான, பழுதுபட்ட திருக்கோயில்கள் அனைத்தும் பழுது நீக்கப்பட்டு, புதுப்பொலிவுடன் குடமுழுக்கு செய்யப்பட வேண்டும் என்ற எனது திட்டத்தின் அடிப்படையில், கடந்த நாலரை ஆண்டுகளில் 4,430 திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில்களின் வளர்ச்சிக்கு திட்டமிட்டு செயல்பட்டு வரும் அதே நேரத்தில், திருக்கோயில்களில் பணிபுரியும் ஊழியர்களின்



நலனையும், ஓய்வு பெற்ற பின்பு அவர்களுக்கு ஒரு சிறப்பான எதிர்காலம் அமைய வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை நான் செயல்படுத்தி வருகிறேன். நிதி வசதி குறைந்த திருக்கோயில்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கவும், அகவிலைப்படி வழங்கவும் தேவையான நிதி உதவி வழங்க தனியாக ஒரு தொகுப்பு நிதியை (Corpus Fund) நான் உருவாக்கி, அந்தத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓதுவார்கள், அரையர்கள், திவ்வியப் பிரபந்தம் பாடுவோர், அர்ச்சகர்கள்,வேதபாராயணர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள, இந்த சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத சிறு திருக்கோயில் பூசாரிகள் ஆகியோர் பெற்று வரும் ஒய்வூதியத் தொகையை மாதந்தோறும் 500/-

ரூபாயிலிருந்து 750/– ரூபாயாக உயர்த்தி வழங்கிட 16.11.2005 அன்று நான் ஆணையிட்டுள்ளேன்.

திருக்கோயில்களில் பணிபுரியும் கண்காணிப்பாளர்கள், எழுத்தர்கள், தட்டச்சர்கள், பாதுகாவலர்கள், மடப்பள்ளியில் பணிபுரிவோர், அலுவலக உதவியாளர்கள் போன்றோர் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின், ஓய்வூதியம் ஏதுவும் இல்லாமல் வருந்தும் நிலையினை எனது கவனத்திற்கு கொண்டு வந்து, அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும்படி திருக்கோயில் பணியாளர்கள் என்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இவ்வேண்டுகோளினை ஏற்று, நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் கண்காணிப்பாளர்கள், எழுத்தர்கள், தட்டச்சர்கள், பாதுகாவலர்கள், மடப்பள்ளியில் பணிபுரிவோர், அலுவலக உதவியாளர்கள் போன்ற அனைத்து நிரந்தரப் பணியாளர்களும் ஓய்வூதியம் பெற்றிடும் வகையில் அவர்களை 'பணியாளர் சேமநல நிதித் திட்டத்தில்'(Employees Provident Fund Scheme) கொண்டு வர நான் ஆணையிட்டுள்ளேன்.

இத்திட்டத்தின்படி, திருக்கோயில் பணியாளர்களுக்கு கீழ்க்காணும் பயன்கள் கிடைக்கும்.

1. குறைந்தபட்சம் 20 ஆண்டு காலம் பணி நிறைவடைந்து, ஓய்வு பெறும் பணியாளருக்கு ஓய்வூதியமாக மாதந்தோறும் குறைந்த பட்சம் 750 ரூபாய் கிடைக்கும்.

2. பணியாளர் பணியின் போது இறக்க நேரிட்டாலோ அல்லது ஓய்வூதியதாரர் இறந்த பின்போ, குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

3. ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை ஒப்படைத்து (Commutation), அந்தத் தொகையைப் போல 100 மடங்கு தொகையை ஓய்வு பெறும் போது ஒட்டுமொத்தமாக பெற முடியும்.

4. பணியின் போது இறந்தால், 60,000 ரூபாய் காப்பீடு (Insurance) உதவி வழங்கப்படும்.

5. 10 ஆண்டு பணி நிறைவடைந்த பின்பு, விருப்ப ஓய்வில் சென்றாலும் ஓய்வூதியம் உண்டு.

6. பணிக் காலத்தில் திருமணம், வீடு கட்டுதல் போன்றவற்றிற்காக கடன் வசதி பெற வழி உண்டு.

7. பணிக் காலத்தில் நிரந்தர ஊனம் அடைந்து, பணியிலிருந்து விலக நேரிட்டாலும், ஓய்வூதியம் வழங்கப்படும்.

இத்திட்டத்தின்படி, திருக்கோயில் நிர்வாகமும், துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளரும் திட்டத்திற்கு உரிய பங்குத் தொகையை மாதந்தோறும் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் மூலம் 5,011 நிரந்தரப் பணியாளர்கள் பயன் பெறுவார்கள்.

இத்திட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்து 10 ஆண்டுகளுக்குள் ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு பணியாளர் சேமநல நிதி (EPF) திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் கிடைக்காது. ஆனால், இதர பயன்கள் கிடைக்கும். மேலும், நிதி வசதியில்லாத சிறிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் பணியாளர் சேமநல நிதித் (EPF) திட்டத்தின் கீழ் பங்குத் தொகை செலுத்துவது மிகவும் சிரமம் என்பதால் அவர்களுக்கு இந்தத் திட்டத்தை நீட்டிக்க இயலாது. எனவே, இந்த இருவகைப் பிரிவினருக்கும், அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு, ஓய்வூதியம் கிடைக்கும் வகையில், திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ஒரு தொகுப்பு நிதி (Corpus Fund) உருவாக்கி, அதிலிருந்து கிடைக்கும் வட்டி வருவாய் மூலம் அவர்களுக்கு மாதம் 750/– ரூபாய் ஓய்வூதியம் வழங்கும் வகையில் ஒரு புதிய திட்டத்தை வகுத்து, செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் திருக்கோயில்களில் பணியாற்றும் 4,862 பணியாளர்கள் பயன் பெறுவார்கள்.

தமிழகத்தில் திருக்கோயில்களில் பணியாற்றும் நிரந்தரப் பணியாளர்களுக்கு, அவர்கள் ஓய்வு பெற்ற பின்பு, சிறப்பான எதிர்காலம் அமையும் வகையில் நான் தீட்டியுள்ள இந்த புதிய ஓய்வு ஊதியத் திட்டத்தின் மூலம் மொத்தம் 9,873 பணியாளர்கள் பயன் அடைவார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்தும்படி அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 7–1–2006

# மேலும் 180 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை



தமிழ்நாட்டில், தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு, அத்திருக்கோயில்களிலேயே இலவச மதிய உணவு அளிக்கும் வகையில், அன்னதானத் திட்டத்தை கடந்த 23.3.2002 அன்று, சென்னை மயிலாப்பூர் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் நான் தொடங்கி வைத்தேன். முதல் கட்டமாக 63 திருக்கோயில்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, தற்போது, மொத்தம் 180 திருக்கோயில்களில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மட்டுமன்றி, பிற மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வருகை தருகின்ற பக்தர்களின் ஏகோபித்த பாராட்டையும், வரவேற்பையும் பெற்றுள்ள இந்தத் திட்டத்தை மேலும் பல திருக்கோயில்களில் செயல்படுத்த வேண்டும் என்று ஆன்மீக ஆர்வலர்களிடமிருந்தும், இறையன்பர்களிடமிருந்தும் எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. இந்தக் கோரிக்கையினை ஏற்று, மேலும் 180 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை செயல்படுத்த நான் தற்போது ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மேலும் 180 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை 14.1.2006 முதல் செயல்படுத்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

இதன் மூலம், தமிழ்நாட்டில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும் திருக்கோயில்களின் எண்ணிக்கை மொத்தம் 360 ஆக உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 30.12.2005

# பணியாற்றியபோது மரணமடைந்த சுமைதூக்கும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சுமை தூக்கும் தொழிலாளர்களாக பணியாற்றியபோது மரணமடைந்த 117 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தொழிலாளர் சேமிப்பு மற்றும் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு தலா ரூபாய் 65 ஆயிரம் வீதம் மொத்தம் 76 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய்க்கான நிதியினை வழங்கினார்கள். மேலும், 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு பச்சை நிற அட்டையையும், ஓராண்டுக்கு மேல் பணிபுரிந்து இதுவரை அட்டை பெறாத தொழிலாளர்களுக்கு இளஞ்சிவப்பு நிற அட்டையையும் வழங்கினார்கள்.



76 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் நிதியை வழங்கும் அடையாளமாக 6 பேர்களின் குடும்பத்தினருக்கு தலா 65 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை நேரில் வழங்கினார்கள்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் சுமை தூக்கும் தொழிலாளர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால், அந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்கும் வகையில் வருங்கால வைப்பு நிதி சட்டத்தின் கீழ், தொழிலாளரின் குடும்பத்திற்கு ரூபாய் 65 ஆயிரம் நிதியுதவி அளிக்கும் தொழிலாளர் சேமிப்பு மற்றும் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22.10.2005 அன்று உத்தரவிட்டார்கள்.

இந்த தொழிலாளர் சேமிப்பு மற்றும் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் சுமை தூக்கும் தொழிலாளர்களாக பணியாற்றும் போது மரணமடைந்த பச்சை நிற அட்டை பெற்ற மொத்தம் 117 பேர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூபாய்

மேலும், நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி இளஞ்சிவப்பு அட்டை பெற்றுள்ள, 1,451 தொழிலாளர்களுக்கு பச்சை அட்டை வழங்கவும், அட்டையே இதுவரை பெறாமல் ஓராண்டுக்கு மேல் பணியாற்றிய 1,050 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு இளஞ்சிவப்பு அட்டை வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22.10.2005 அன்று உத்தரவிட்டிருந்தார்கள். இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 10 ஆண்டுகள் பணி முடித்த தொழிலாளர்களுக்கு பச்சை அட்டையும், ஓராண்டு பணிமுடித்த தொழிலாளர்களுக்கு இளஞ்சிவப்பு அட்டையும் வழங்கும் வகையில் 3 தொழிலாளர்களுக்கு பச்சை நிற அட்டையையும், 3 தொழிலாளர்களுக்கு இளஞ்சிவப்பு நிற அட்டையையும் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் பொள்ளாச்சி திரு. வி. ஜெயராமன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை செயலாளர் திரு. டி.ஆர். சீனிவாசன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண் இயக்குநர் திரு. கே. சண்முகம் ஆகியோர் உடனிருந்தனர்.

◆ ◆ ◆

# காவிரி ஆற்றின் குறுக்கே ரூ.10 கோடி செலவில் பவானி உயர்மட்டப் பாலம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்கள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத் துறையின் மூலம் ஈரோடு மாவட்டம், குமாரபாளையம் பவானி சாலையில் காவிரி ஆற்றின் குறுக்கே 10 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட பவானி உயர் மட்டப் பாலத்தை திறந்து வைத்தார்கள்.

ஈரோடு மாவட்டத்தில், குமாரபாளையம்–பவானி சாலையில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி 1999–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16–ஆம் தேதி தொடங்கப்பட்டது. எனினும் நில ஆர்ஜிதப் பணிகள் நிறைவடையாத காரணத்தால் அணுகு சாலைப் பணிகள் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டு பாலம் கட்டும் பணியில் சுணக்கம் ஏற்பட்டது. இந்த சுணக்கத்தை நீக்கும் வகையில், தமிழக அரசு மேற்கொண்ட முனைப்பான முயற்சியால், நில உரிமையாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு பாலப் பணிக்குத் தேவையான நிலங்கள் 11.6.2005 அன்று ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இப்பாலத்தின் அணுகு சாலைப் பணிகள் 13.7.2005 அன்று தொடங்கப்பட்டு, 17.10.2005 அன்று நிறைவு செய்யப்பட்டது.

மொத்தம் 10 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த பவானி உயர் மட்டப் பாலத்தை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27.12.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

441 மீட்டர் மொத்த நீளம் கொண்ட இந்தப் பாலம், 7.5 மீட்டர் அகல ஓடு தளமும், இரு புறமும் 1.5 மீட்டர் நடைபாதையும் சேர்த்து – மொத்தம் 12 மீட்டர் அகலம் கொண்டது ஆகும். மொத்தம் 23 கண்களைக் கொண்ட இப்பாலம், பவானி பக்கத்தில் 287 மீட்டரும், குமாரபாளையம் பக்கம் 130 மீட்டரும் கொண்ட அணுகு சாலைகளுடன் அமைந்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தின் குமாரபாளையம் நகரையும், ஈரோடு மாவட்டத்தின் பவானி நகரையும் இணைக்கின்ற இந்தப் பாலத்தின் பயனாக இனி பொதுமக்களின் பயண தூரம் 5 கிலோ மீட்டர் குறையும். ஜம்பை, குறுப்பநாயக்கன்பாளையம், ஊராட்சிக்கோட்டை, அம்மாபேட்டை, கலிங்கராயன்பாளையம், லட்சுமி நகர், கூலிக்காரன்பாளையம், சேர்வராயன்பாளையம், எடப்பாடி மற்றும் தேவூர் முதலான முக்கிய கிராமங்கள் உட்பட 40 கிராமங்களைச் சேர்ந்த 4 லட்சம் மக்கள் இதனால் பயன் அடைவர். □

# காவேரி நதிநீர் பாசன அமைப்பில் பாதிப்புக்குள்ளான பாசனக் கட்டுமானங்களில், உடனடியாக பழுதுநீக்கி, புதுப்பித்து, புனரமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை



**கா**வேரி டெல்டா மற்றும் காவேரி நதி நீர் பாயும் மாவட்டங்களான சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் சாகுபடி பணிகளுக்கென பாசன வசதிகளை அளித்திட காவேரி ஆற்றுப் பாசன அமைப்பில் (Cauvery River Irrigation System) ஏறத்தாழ 14,785 பாசன கட்டுமான அமைப்புகள் (Masonry Structures of Irrigation Systems) உள்ளன. இந்த பாசனக் கட்டுமானங்கள் 19 மற்றும் 20–ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டவை ஆகும். இந்தக் கட்டுமானங்கள் கட்டப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேலாகியும், காவேரி டெல்டா மற்றும் காவேரி நதி நீர் பாயும் மாவட்டங்களில் விவசாய பெருங்குடி மக்களுக்கு வேளாண் தொழில் செய்திட நல்ல பயன் அளித்து வருகின்றன.

இந்த 14,785 கட்டுமானங்களில், பெரும்பாலான கட்டுமானங்கள் சீரான முறையில் இருப்பினும், சில கட்டுமானங்களில் பழுதுகள் ஏற்பட்டு, பாதிப்பு அடைந்துள்ளதன் காரணமாக, சாகுபடிக்கான பாசன வசதி பெறுவதில் இப்பகுதிகளில் உள்ள விவசாய பெருமக்கள் சிரமத்திற்கு உள்ளாவதை அறிந்து, அவர்களது சிரமத்தை போக்கும் வகையில், 34 கோடி ரூபாய் செலவில், மிகவும் பாதிப்புக்கு உள்ளான 775 பாசனக் கட்டுமானங்களை (Masonry Structures) பழுது பார்த்து, புதுப்பித்து, புனரமைக்கவும், அக்கட்டுமானங்களில் உள்ள சுமார் 3,031 ஷட்டர்களை (Shutters) புதிதாக பொருத்தவும், 2003–ஆம் ஆண்டு நான் உத்தரவு பிறப்பித்தேன். இந்த உத்தரவின்படி 2003 மற்றும் 2004 ஆகிய இரண்டு ஆண்டுகளில், இந்தப் பணிகள் அனைத்தும் சிறப்பான முறையில் முடிக்கப்பட்டன. இதன் விளைவாக 2004–ஆம் ஆண்டில் சம்பா மற்றும் தாளடி சாகுபடி சீரிய முறையில் செய்து முடிக்கப்பட்டு விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பயன் அடைந்தனர்.

அண்மையில் பெய்த கன மழையின் காரணமாக இத்தகைய பாசனக் கட்டுமானங்களில் ஏற்பட்ட உடைப்புகள் மற்றும் பழுதுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, உடனடியாக பழுது நீக்கம் தேவைப்படும் பாசன கட்டுமானங்களில் சீரமைப்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ள நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். இதன்படி, காவேரி டெல்டா மற்றும் காவேரி நதி நீர் பாயும் மாவட்டங்களான சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாய பெருமக்கள் பயன் அடையும் வகையில், இம்மாவட்டங்களைச் சார்ந்த காவேரி நதி நீர் பாசன அமைப்பில், பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மேலும் 400 பாசனக் கட்டுமானங்களில் (Masonry Structures) உடனடியாக பழுது நீக்கி, புதுப்பித்து, புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள நான் ஆணையிட்டுள்ளேன். இந்தப் பணிகள் 20 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். 2006ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இப்பணிகள் தொடங்கப்பட்டு, 2006–ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடித்துவிட பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இதனால், தமிழகத்தில் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள், தங்களது சாகுபடி பணிகளுக்கு தொடர்ந்து சீரான பாசன வசதிகளைப் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 2.1.2006

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தேசிய சாதனை புரிந்த தடகள வீராங்கனைக்கு ஒரு லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கினார்கள்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 4.1.2006 அன்று தலைமைச் செயலகத்தில், தேசிய அளவில் 3000 மீட்டர் ஸ்டீபில் சேஸ் (Steeple Chase) போட்டியில் சாதனை புரிந்த தடகள வீராங்கனை செல்வி எஸ். சாந்திக்கு ஊக்கத் தொகையாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையை நேரில் வழங்கி பாராட்டினார்கள்.

தேசிய மாநிலங்களுக்கு இடையேயான தடகளப் போட்டி பெங்களூரில் 3.7.2005 முதல் 6.7.2005 வரை நடைபெற்றது. இந்திய தடகள கழகங்களின் கூட்டமைப்பின் மூலம் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில், தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனையும், சென்னையில் உள்ள தடகள அகாடமியில் பயிற்சி பெற்று வருபவருமான செல்வி எஸ். சாந்தி 3000 மீட்டர் ஸ்டீபில் சேஸ் (Steeple Chase) போட்டியில் பங்கேற்று, 10 நிமிடம் 44.65 விநாடியில் இலக்கை கடந்து, புதிய தேசிய சாதனை புரிந்ததோடு, இந்தப் போட்டியில் 3000 மீட்டர் ஸ்டீபில் சேஸ், 800 மீட்டர் ஓட்டம் மற்றும் 4 X 100 மீட்டர் தொடர் ஓட்டம் ஆகியவற்றில் 3 தங்கப்பதக்கமும், 1500 மீட்டர் ஓட்டத்தில், வெள்ளிப் பதக்கமும் வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். இந்த சாதனை, மகளிருக்கான சாம்பியன் கோப்பையையும், ஒட்டுமொத்த சாம்பியன் கோப்பையையும் தமிழகம் வெல்வதற்கு ஊன்றுகோலாக அமைந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, புதிய தேசிய சாதனை புரிகின்ற விளையாட்டு வீரர்களுக்கு, தமிழக அரசின் சார்பில் ஊக்கத் தொகையாக உயர் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்தார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தேசிய போட்டிகளில் தேசிய சாதனை புரிந்த வீராங்கனை செல்வி எஸ். சாந்திக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையை 4.1.2006 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கி பாராட்டினார்கள். ❑

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கச்சத்தீவை நீண்டகால குத்தகைக்கு எடுக்க வலியுறுத்தி மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் (8.1.2006)



தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கச்சத்தீவு அருகே பாக் ஜலசந்தி பகுதியில் நடத்திவரும் தாக்குதல்கள் குறித்து நான் ஏற்கெனவே பலமுறை கடிதங்கள் மூலம் தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.

இந்நிலையில் 8.1.2006 அன்று இதே போன்று ஒரு சம்பவம் நடந்துள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் ராமேஸ்வரம் கடலோரப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 7.1.2006 அன்று ஒரு இயந்திரப் படகில் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அதிகாலை 3 மணியளவில் (8.1.2006 அன்று) அங்கு திடீரென்று வந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன் அந்த மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் அள்ளிச் சென்று விட்டனர். இலங்கை கடற்படையினர் நடத்திய இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஆண்ட்ரூஸ் என்பவர் குண்டுகள் பாய்ந்து படுகாயமடைய, 3 மீனவர்கள் தப்பித்துள்ளனர். காயமடைந்த மீனவர் ராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழை மீனவர்கள் மீது நடுக்கடலில் இலங்கைக் கடற்படையினர் நடத்திவரும் தாக்குதல்களை நீங்கள் இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் ஈவுஇரக்கமற்ற முறையில் தாக்கப்பட்டதற்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட வேண்டும்.

தமிழக மீனவர்கள் தங்கள் அன்றாட வாழ்வுக்காக கச்சத்தீவைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளைத்தான் நம்பியிருக்கிறார்கள் என்பது தாங்கள் அறிந்ததே. இந்திய மீனவர்கள் பாக் ஜலசந்தியில் கச்சத்தீவுப் பகுதியில் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுவது குறித்து நான் பலமுறை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

இந்திய மீனவர்கள் தங்கள் மீன்பிடித் தொழிலை எந்தவிதப் பிரச்சினையின்றி மேற்கொள்ளவும், அவர்களது பாரம்பரிய உரிமைகளைப் பாதுகாத்திடவும், ஒரு செயல்திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்றும் ஏற்கெனவே நான் வலியுறுத்தியிருக்கிறேன்.

பாக்ஜலசந்திப் பகுதியில் தமிழக மீனவர்கள் மீது அடிக்கடி நடத்தப்படும் தாக்குதல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, அதற்கொரு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் நான் திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருக்கிறேன்.

தங்கள் பிழைப்புக்காக கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லும் ஏழை மீனவர்கள் மீது நடத்தப்படும் கொலை வெறித்தாக்குதல் இயற்கையின் நீதிக்கு எதிரானது மனித உரிமைகளை மீறி நடத்தப்படும் கொடுஞ்செயல்.

எனவே தமிழ்நாட்டு மீனவர்கள் தொன்று தொட்டு அடைந்துவரும் உரிமையைக் கேள்விக் குறியாக்கும் இந்தப் பிரச்சினைக்கு இறுதியான நிரந்தரத் தீர்வு ஒன்றை உடனே காணவேண்டும்.

இதற்கெல்லாம் ஒரே நிரந்தரத் தீர்வு கச்சத்தீவை இந்தியா நீண்டகால குத்தகைக்கு எடுத்துக் கொள்வதுதான். தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இந்தச் சூழ்நிலையில் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு எந்தவிதத் தாமதமுமின்றி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். ❖

# ரூ.34 கோடியில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே புதிய உயர் மட்ட பாலம் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை



தமிழகத்தில் சாலை வசதிகளைப் பயன்படுத்துகின்ற பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, பாதுகாப்பான, வேகமான வாகனப் போக்குவரத்தை உறுதி செய்யும் வகையில், சாலைக் கட்டமைப்பை மேம்படுத்த எனது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. மாநில அரசின் பல்வேறு திட்டங்களின் வாயிலாகவும், நபார்டு வங்கி நிதி உதவி, உலக வங்கி நிதி உதவி ஆகியவற்றின் மூலமாகவும், வாய்ப்புள்ள அனைத்து வகையிலும் சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல், பழுது அடைந்த பாலங்களை புதுப்பித்து புனரமைத்தல், சேதமுற்ற பாலங்களை திரும்பக் கட்டுதல், புதிய பாலங்களை உருவாக்குதல் என மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு, நாட்டின் முதன்மையான சாலை கட்டமைப்பு கொண்ட மாநிலமாக தமிழகத்தை உருவாக்கிட எனது அரசு திறம்பட செயலாற்றி வருகிறது.

திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் கொள்ளிடம் ஆற்றின் இரண்டு கரைகளை ஒட்டி வாழ்ந்து வரும் பொதுமக்கள், கொள்ளிடம் ஆற்றின் இரு கரைகளிலும் உள்ள தங்களது கிராமங்களை இணைக்கும் வகையில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள செங்கரையூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அலமேல்புரம் பூண்டி ஆகியவற்றை இணைக்கும் ஒரு உயர்மட்ட பாலத்தை கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அமைத்து தர வேண்டுமென்று என்னிடம் கோரிக்கை விடுத்தனர்.

கொள்ளிடம் ஆற்றின் இடது கரையில் உள்ள, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கரையூர் மற்றும் அதனை ஒட்டியுள்ள 16 கிராம மக்களும், வலது கரையில் உள்ள தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த அலமேல்புரம் பூண்டி மற்றும் அதனை ஒட்டியுள்ள 15 கிராம மக்களும், கோவில் விழாக்கள், கொள்வினை–கொடுப்பினை முதலான வாழ்வின் அனைத்து இன்பத் துன்பங்களிலும் பின்னிப் பிணைந்துள்ளனர். இவர்கள் கோவில் திருவிழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளுக்கு கொள்ளிடம் ஆற்றைக் கடந்து சென்று வர வேண்டி இருப்பதோடு, விதை, ரசாயன உரங்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவது, மருத்துவ வசதி மற்றும் கல்வித் தேவை போன்ற தங்களது அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்திடவும் நாள்தோறும் இக்கரையில் இருந்து அக்கரைக்கும், அக்கரையில் இருந்து இக்கரைக்கும் சென்று வர வேண்டி உள்ளது. தற்போது இவர்கள் இவ்வாறு கொள்ளிடம் ஆற்றைக் கடப்பதற்கு 1200 மீட்டர் (1.2 கிலோ மீட்டர்) நீளத்திற்கு அடுக்கப்பட்டுள்ள மணல் மூட்டைகள் மீது ஏறி நடந்து சென்று வருகின்றனர். பருவ காலங்களில் மற்றும் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படும் காலங்களில் இந்த கிராமங்களில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதியுறுகின்றனர். மழைக்காலத்தில் கொள்ளிடம் ஆற்றின் தண்ணீர் மட்டம் வெகுவாக உயருவதால் இந்த ஆற்றைக் கடப்பது மக்களுக்கு மிகவும் சிரமமானதாக உள்ளது. அவ்வாறு இன்றி, சாலை வழியே சென்று வர வேண்டுமென்றால் 57 கிலோ மீட்டர் தூரம் வளைவு பாதையில் சுற்றி வர வேண்டி உள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்து உள்ளனர்.

திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் கொள்ளிடம் ஆற்றின் கரையோரம் வாழ்ந்து வருகின்ற 33 கிராம மக்கள் விடுத்துள்ள கோரிக்கையை மிகுந்த

பரிவுடன் பரிசீலித்தேன். இப்பகுதி மக்கள் இவ்வாறு படுகின்ற துன்பங்களை எல்லாம் ஒட்டு மொத்தமாக தீர்க்கின்ற வகையில் கொள்ளிடம் ஆற்றின் இடது கரையில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள செங்கரையூர் கிராமத்தையும், வலது கரையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அலமேல்புரம் பூண்டி கிராமத்தையும் இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு புதிய உயர் மட்ட பாலம் அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த புதிய பாலம் கட்டப்படும்.

இந்த புதிய பாலம் கட்டப்படுவதன் விளைவாக, சுற்றுப்புறத்தில் உள்ள திருக்காட்டுப்பள்ளி, லால்குடி போன்ற ஊர்களுக்கும், செங்கரையூர் மற்றும் அலமேல்புரம் பூண்டி போன்ற 33 கிராமங்களுக்கும் இடையே புதிய இணைப்பு ஏற்படும். செங்கரையூரிலிருந்து அலமேல்புரம் பூண்டி செல்வதற்கு பயண தூரம் 57 கிலோ மீட்டர் குறையும். பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலை மற்றும் சர்க்கரை ஆலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் புதுக்கோட்டை மாவட்டத்தை சென்றடையும் தூரத்தில் 11 கிலோ மீட்டர் குறையும். பூண்டி மாதா கோயில் மற்றும் அன்பில் மாரியம்மன் கோயில் ஆகிய திருத்தலங்களுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை வெகுவாகப் பெருகி, நல்ல வாய்ப்பு வசதிகள் ஏற்படும். பயண தூரம் பெருமளவு குறைவதால் இவ்விரு இடங்களும் வியாபார மையங்களாக முன்னேற்றமடையும் சூழ்நிலை உருவாகி, இப்பகுதியில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட வழிவகுக்கும்.

34 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கிட நான் ஆணையிட்டுள்ள இந்தப் புதிய பாலம் கொள்ளிடம் ஆற்றின் கரைகளில் உள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டம் செங்கரையூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் அலமேல்புரம் பூண்டி உள்ளிட்ட 33 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களின் சிரமங்களை நீக்குவதுடன், மேலும் பல புதிய வசதிகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்தும் என்பதில் நான் மிகுந்த மன நிறைவு அடைகிறேன். இந்தப் பாலம் அமைக்கும் பணியை துரிதமாக மேற்கொண்டு மிகுந்த தரமுடன் செய்து முடித்திட நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 8.1.2006



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னையில் நடைபெற்ற தேசிய கடற்கரை கைப்பந்து போட்டியில் (National Beach Volley Ball Championship) பங்கேற்று அகில இந்திய அளவில் மூன்றாவது இடத்தைப் பெற்ற தமிழ்நாடு சிறப்புக் காவல் ஐந்தாம் அணியைச் சேர்ந்த பெண் காவலர் (நாயக்) எஸ். தேவி, சென்னை மாநகரக் காவல் ஆயுதப் படையைச் சேர்ந்த பெண் காவலர் ஆர். கிருஸ்டி ரோஸ்லின் ஆகியோரது சாதனையைப் பாராட்டி ரொக்க வெகுமதியாக தலா 20,000 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

11ஆம் பக்கம் தொடர்ச்சி...

வேண்டுகோள் விடுத்துள்ளனர். மாணவர்களின் தரநிலையை நிர்ணயிப்பதற்கு மாநிலப் பாடதிட்டத்தின் மேல்நிலை வகுப்புத் தேர்வு மதிப்பெண்களே பொதுவான அடிப்படையாக இருக்க வேண்டுமென்ற அடிப்படைக் கோட்பாட்டைப் பின்பற்ற அரசு முடிவு செய்துள்ளது. மாநிலப் பாடத் திட்டத்தின் மேல்நிலைத்தேர்வில் பெற்ற மதிப்பெண்களே மாணவர் சேர்க்கைக்கு பொதுவான அடிப்படையாகக் கருதப்பட்டு, ஏனைய பாடத் திட்டங்களின் கீழ் பயிலும் மாணவர்களை மாநிலப் பாடத் திட்டத்தின் மேல்நிலைத்தேர்வு மதிப்பெண்களுக்கு நிகரான அடிப்படைக்குக் கொண்டுவரும் வகையில், அவர்களுக்கென ஒரு பொது நுழைவுத் தேர்வு நடத்தப்படும். இதன் வாயிலாக, மாநிலப் பாடத் திட்டத்தின் கீழ் மேல்நிலைத் தேர்வு எழுதும் பெரும்பாலான மாணவர்களின் சுமையையும் மன உளைச்சலையும் குறைப்பது, ஏனைய அனைத்துப் பாடத்திட்டத் தேர்வு மதிப்பெண்களையும் மாநிலப் பாடத்திட்டத்தின் மேல்நிலைத்தேர்வு மதிப்பெண்களுக்கு நிகரான அடிப்படைக்குக் கொண்டுவரும் சரியான முறை ஒன்றை வகுப்பது ஆகிய இரு நோக்கங்களும் நிறைவேறும். இம்மாற்றங்களுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்குத் தேவையான சட்டம் இயற்றப்படும்.

48. உலக அளவில் தரமான தொழில்நுட்ப மனித ஆற்றலை பெருமளவில் வழங்கும் ஒரு மாநிலமாக தமிழ்நாடு உருவாகியுள்ளது. மாநிலம் முழுவதிலுமுள்ள 237 பொறியியல் கல்லூரிகளும், 230 பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளும் தரமான தொழில்நுட்பக் கல்வியைப் பெறுவதற்குரிய புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளன. பொறியியல் மற்றும் பல்தொழில் பயிற்சிக் கல்லூரிகளில் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்று ரூபாய் 96 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

49. போட்டி விளையாட்டுகளுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் இவ்வரசு அளிக்கும் ஊக்கமானது, தமிழ்நாட்டில் குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே ஆரோக்கியமான மனம் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான ஒரு காரணியாக இருந்து வந்துள்ளது. "சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையைக் கண்டறியும் திட்டம்" பள்ளிகளில் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய மற்றும் உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விருதுபெறும் வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இவ்வரசு அளிக்கும் ரொக்க ஊக்கத்தொகைத் திட்டம் பரவலாக வரவேற்கப்பட்டுள்ளது.

50. இந்த அரசு, கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களை வகுக்கும்போது, மகளிருக்கு ஆற்றல் அளிப்பதற்கு (empowerment) எப்போதுமே முன்னுரிமை அளித்து வந்துள்ளது. தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக்குழு இயக்கத்திற்கு வித்திட்ட மாண்புமிகு முதல்வர், இன்று அவ்வியக்கம் ஒரு கண்கவர் சமூகப் புரட்சி மலராகப் பூத்துக் குலுங்கக் காண்கிறார். முறையே ரூபாய் 889 கோடி மற்றும் ரூபாய் 1,563 கோடிக்கும் அதிகமான சேமிப்பு மற்றும் கடன் வசதியுடன், 3 இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழுக்களில், ஏறக்குறைய 50 இலட்சம் உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு, இன்று தமிழ்நாட்டில் மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம், உண்மையில் ஒரு மாபெரும் சமுதாய இயக்கமாக வளர்ந்துள்ளது. "தொட்டில் குழந்தை திட்டம்" மற்றும் "பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" ஆகிய தனிச் சிறப்பு வாய்ந்த திட்டங்கள், பெண் குழந்தைகளின் வாழ்க்கையைப் பாதுகாப்பதிலும், சமூக அந்தஸ்தை உயர்த்துவதிலும் முக்கியப் பங்காற்றியுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள், முதியோர் ஆகியோருக்கு முழுமையான அளவில் தரமான துணை சத்துணவு அளிக்கப்படுவதை உறுதி செய்த இந்த அரசு பாராட்டிற்குரியது. நாடாளுமன்றத்திலும், மாநிலச் சட்டப் பேரவையிலும் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டத்தை இயற்றுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு விரைந்து எடுக்க வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

51. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு சமூக, பொருளாதார மற்றும் கல்வி உரிமைகளை அளித்து, அவர்களைப் பேணிக் காப்பதே இந்த அரசின் இடையறா முயற்சியாக இருந்து வந்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மகளிருக்காகச் செயல்படுத்தப்படும் புதுமையான நிலம் வாங்கி அளிக்கும் திட்டம், பெண்களுக்கு சொத்துரிமை அளித்து, சமூகப் புரட்சியை ஏற்படுத்தும். வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்து ஆதி திராவிடர் மாணவர் இல்லங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்று, 2001 ஆம் ஆண்டில் இவ்வரசு உறுதி அளித்தது. ரூபாய் 155 கோடி செலவில் 493 மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டு இவ்வுறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. ரூபாய் 4 கோடி செலவில், மேலும் 108 புதிய மாணவரில்லங்களையும் இந்த அரசு தொடங்கும். அனைத்து ஆதி திராவிடர் குடியிருப்புகளிலும் அணுகுசாலை, குடிநீர்வசதி, இடுகாட்டுப்பாதை, தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகளை அமைப்பதற்கான பெருந்திட்டம் வகுக்கப்பட்டு படிப்படியாக செயல்படுத்தப்படும். ரூபாய் 71 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கான முதற்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

52. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரைப் பாதுகாப்பதிலும், அவர்களுடைய நலனைப் பேணுவதிலும், இவ்வரசு எப்போதும் கவனம்

செலுத்தி வந்துள்ளது. இவ்வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் நலனுக்காக வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 761 மாணவர் இல்லங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியளித்திருந்தார்கள். இவ்வரசு உறுதியளித்தவாறே ரூபாய் 235 கோடி செலவில் 761 புதிய மாணவரில்லங்களைக் கட்ட அனுமதி அளித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

53. நெசவாளர்களின் நலனுக்கு இவ்வரசு எப்போதும் உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. இவ்வாண்டு பொங்கல் பண்டிகையின்போது, 1.64 கோடி சேலைகளையும், 1.64 கோடி வேட்டிகளையும், 3.28 கோடி பயனாளிகளுக்கு, ரூபாய் 256 கோடி செலவில் இவ்வரசு வழங்கும். ஏழை எளிய மக்களுக்கு உடைப் பாதுகாப்பு அளிப்பதுடன், இத்திட்டம், இம்மாநிலத்திலுள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பினை அளிக்கும். 2 இலட்சம் நெசவாளர்கள் பயனடையும் வகையில் புதிய சுகாதார ஈட்டுறுதித் திட்டத்தைச் செயற்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. இதன்கீழ் ஒவ்வொரு நெசவாளரும் ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய ஆண்டுக் காப்பீட்டுத் தொகையான ரூபாய் 200–ஐ செலுத்தும் பொறுப்பையும் அரசே ஏற்று, இதற்காக ரூபாய் 4 கோடியை ஒதுக்கியுள்ளது.

54. தமிழ் மொழி, கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பேணுவதிலும் மாநிலத்தின் வளமான பண்பாட்டு பாரம்பரியத்தை பாதுகாப்பதிலும் இவ்வரசு எப்போதுமே கவனம் செலுத்தி வந்துள்ளது. அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்புவரை அறிவியல் தமிழ் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதுடன், மாணவர்களுக்கு இலவசமாக அறிவியல் தமிழ் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சரின் சிந்தையில் உதித்த “அன்னதானத் திட்டம்” பெரும் வெற்றி பெற்று, ஏழை மக்கள் உணவு பாதுகாப்பு பெறும் தலைசிறந்த திட்டமாகப் பாராட்டப் பெற்றுள்ளது. போதுமான வருமானமுள்ள கோயில்களின் நிரந்தரப் பணியாளர்கள், பணியாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் மூலம் மாதமொன்றுக்கு ரூபாய் 750 க்குக் குறையாமல் ஓய்வூதியம் பெறும் வகையில், இவ்வரசு புதிய ஓய்வூதியத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. குறைந்த வருமானமுள்ள கோயில்களைப் பொறுத்தவரையில், உபரிநிதி உள்ள கோயில்களிலிருந்து நிதியைத் திரட்டி, அந்நிதியிலிருந்து மூல நிதியம் ஒன்றை ஏற்படுத்தி, அடுத்த பத்தாண்டுகளில் ஓய்வு பெற உள்ள பணியாளர்கள் உட்பட, அனைத்துப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் ஒரு தனி ஓய்வூதியத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியாளர்களும் மாதமொன்றுக்கு ரூபாய் 750 ஓய்வூதியமாக பெறுவர். மாநிலத்தின் பல்வேறு கோயில்களில் பணிபுரியும் சுமார் 10,000 பணியாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர்.

55. தமிழக மக்களின் பயனுக்கான வளர்ச்சி இலக்குகளை எய்துவதில் அர்ப்பணிப்பு உணர்வு மிக்க அரசுப் பணியாளர்களின் பங்களிப்பை இவ்வரசு மிகவும் மதிக்கிறது. மத்திய அரசு அதன் பணியாளர்களுக்கு வழங்கிய அகவிலைப்படி உயர்வுத் தவணைகளை, இவ்வரசு சந்திக்க வேண்டியிருந்த நிதி நெருக்கடியின் காரணமாக, உடனுக்குடன் வழங்க இயலாமற் போயிற்று. பின்னர் இவ்வரசு அயராத பெரும் முயற்சிகளை மேற்கொண்டு, நிதி நிலையைச் சரிசெய்து, அகவிலைப்படி உயர்வுகள் படிப்படியாகக் குறைந்தகால இடைவெளியுடன் அளிக்கப்படுவதை உறுதி செய்துள்ளது. தற்போது, மாநில அரசுப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் அகவிலைப்படியை 1.1.2006 முதல் அடிப்படைச் சம்பளத்தின் 67 சதவீதத்திலிருந்து 71 சதவீதமாக உயர்த்த இவ்வரசு முடிவு செய்துள்ளது. இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 282 கோடி கூடுதல் செலவு ஆகும். அரசுப் பணியாளர்கள் மக்களுக்கு மேலும் சிறப்பாக சேவை புரிந்திடுவதற்கு ஏற்ற வகையில், அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுவதை உறுதிப்படுத்த வேண்டிய அதே வேளையில், சரியான நிதிநிலை நிர்வாகத்தின் பயன்கள், ஏழை எளிய மக்களைச் சென்றடைய வேண்டியதன் அவசியத்தையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. இந்த நேர்த்தியான சமன்பாட்டைத்தான் இவ்வரசு வெற்றிகரமாக எய்தியுள்ளது.

56. தமிழ்நாட்டில் ஊழலற்ற, மக்கள் பங்கேற்கும், ஒளிவு மறைவில்லாத, பொறுப்புணர்வு மிக்க நிருவாகத்தை அளிக்க, இவ்வரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். அரசு, மாநில தகவல் ஆணையம் அமைக்கப்பட்டிருப்பது குறித்த அறிவிக்கையை வெளியிட்டிருப்பதோடு, 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தேவையான விதிகளையும் இயற்றியுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

57. இவ்வரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் நான் விரிவாக எடுத்துரைத்துள்ளேன். இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும், ஈடு இணையற்ற சாதனைகளுடன் முன்னேறி தலைநிமிர்ந்து பீடுநடைபோடுகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் எழுச்சியூட்டும் தலைமைப் பண்பும், மனிதநேயம் மிக்க நிருவாகமும் முழுப் பாராட்டுதலுக்கு உரியவையாகும். எதிர் காலத்திலும் தமிழ்நாடு தொடர்ந்து அனைத்துத் துறைகளிலும் முதன்மை நிலையை எய்தும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம். ஜெய்ஹிந்த்.

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
# செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
# பக்ரீத் வாழ்த்துச் செய்தி

‘பக்ரீத்’ திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும்
இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும்
எனது இனிய ‘பக்ரீத்’ நல்வாழ்த்துகளை
தெரிவித்துக் கொள்கிறேன்.



பக்ரீத் திருநாள் தியாகத் திருநாள். இறைவனின்
கட்டளையை நிறைவேற்றுவதே வாழ்க்கை என்று
வாழ்ந்த இறையடியார் இப்ராஹிம் அவர்களது
ஈடு இணையற்ற தியாகத்தை நினைவுகூர்கின்ற
திருநாள். அருளாளனாகிய அல்லாவின்
ஆணைகளுக்கு கீழ்ப்படிந்து வாழக் கற்றுத் தரும்
உன்னதத் திருநாளே ‘பக்ரீத்’ திருநாளாகும்.

இந்தத் திருநாளில் விடியற்காலையில் துயில்
எழுந்து, இறைவனை வழிபட்டு, விருந்தோம்பும்
கடமையை விருப்போடு புரிந்து,
பக்ரீத் திருநாளை சிறப்பாகக் கொண்டாடும்
இஸ்லாமிய பெருமக்கள் அனைவருக்கும் எனது
இதயம் கனிந்த ‘பக்ரீத்’ நல்வாழ்த்துகளை
தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற
மகிழ்ச்சி அடைகிறேன்.

இறையடியார் வழி நடப்போம்!
உலக ஒற்றுமையை நாம் வளர்ப்போம்!

❖ ❖ ❖

# பாலாற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டத்தை உடனடியாகக் கைவிட வலியுறுத்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆந்திர முதலமைச்சருக்குக் கடிதம் (5.1.2006)

தமிழ்நாட்டில் பாயும் பாலாற்றின் குறுக்கே ஆந்திர மாநிலம் குப்பம் அருகே நீர்த்தேக்கம் கட்ட ஆந்திர அரசு திட்டமிட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருப்பதைத் தங்களின் அவசர கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் வடக்கு மாவட்டங்கள் வழியாக பாலாறு ஓடுவது தங்களுக்குத் தெரியும். இந்த மாவட்டங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரமாக இந்த ஆறு திகழ்கிறது. பாலாற்றின் குறுக்கே 2,000 கன அடி கொள்ளளவு கொண்ட நீர்தேக்கம் கட்ட இருப்பதாக செய்தித்தாள் மூலம் நான் அறிந்தேன். இந்தச் செய்தியால் இப்பகுதி மக்களிடையே அச்சமும், கவலையும் ஏற்பட்டுள்ளது.

பாலாற்றில் நீர்வரத்து எப்போதும் பற்றாக் குறையாகத் தான் இருக்கும். குறுகிய காலத்துக்கு மட்டுமே தண்ணீர் வரும். அந்தத் தண்ணீரால் வடமாவட்டங்களில் உள்ள ஆயக்கட்டுப் பகுதிகளில் 1 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடைகின்றன.

வேலூர், காஞ்சிபுரம், சென்னை மாவட்டங்களின் பாலாற்று நீர் ஆதாரம் தான் குடிநீர் தேவையை பூர்த்தி செய்கின்றது.

எனவே, பாலாற்றுக்குக் குறுக்கே அணை கட்டும் முயற்சியால் நீர்வரத்து பாதிக்கப்படும்.

மேலும், இது, மாநிலங்களுக்கு இடையேயான நீர்பங்கீட்டு ஒப்பந்தத்தை மீறும் செயலாகவும் அமைந்துவிடும். இந்த அணை குடிநீர் பிரச்சினையை ஏற்படுத்துவது மட்டும் இல்லாமல், வடக்கு மாவட்டங்களில் விவசாய வேலைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்குப் பெரிய மரண அடியாகவும், அமைந்துவிடும் ஆபத்தும் உள்ளது.

தமிழ்நாட்டில் வடக்கு மாவட்டங்களில் வாழும் மக்கள், குடிநீர் தேவை மற்றும் வாழ்வாதாரத்துக்கு பாலாற்றையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள் என்பதை உங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். இத்தகைய சூழ்நிலையால் அவர்கள், மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. பாலாற்று நீரை தேக்குவதன் மூலம் தமிழக வடமாவட்டங்களுக்கு நீர் வராமல் செய்வது மிகவும் வருந்தத்தக்க செயலாகும்.

1892ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட உடன் படிக்கையின்படி, பாலாறானது, மாநிலங்களிடையே ஓடும் ஆறு என்று 'எ' அட்டவணையில் இணைக்கப் பட்டுள்ளது. அது இப்போதும் அமலில் உள்ளது. எந்த மாநிலத்திலிருந்து ஆறு ஓடுகின்றதோ அந்த மாநிலமானது ஆறு ஓடும் அடுத்த மாநிலத்தின் ஒப்புதல் இல்லாமல் நீர்தேக்கம் கட்டுவதோ, அணைகட்டி தடுப்பதோ, நீரை வேறு வழியில் போகச் செய்வதோ சேமித்து, வைப்பதோ கூடாது என்றும், 'எ' அட்டவணையில் உள்ள 15 முக்கிய ஆறுகளில், இவை கடைபிடிக்கப்பட வேண்டும் என்றும் இந்த உடன்படிக்கையின் இரண்டாவது விதியில் கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி ஒப்புதல் பெற, ஆந்திர மாநில அரசு இதுவரை தமிழக அரசை அணுகவில்லை. மேலும் இதுபற்றி எந்தத் தகவல் பரிமாற்றமும் நடைபெறவில்லை.

எனவே, தாங்கள் தயவு கூர்ந்து இதில் தலையிட்டு பாலாற்றில் அணைகட்டும் திட்டம் தொடர்பான வேலைகளை உடனே நிறுத்தி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

□ □ □

# ரூ.256 கோடி செலவில், 3.28 கோடி பேருக்கு இலவச வேட்டி, சேலைகள் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை



தமிழ்நாட்டில் உள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மக்கள் ஆகியோரது நலனைக் கருத்தில் கொண்டு, இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெறுவதற்கு இந்த இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் உறுதுணையாக உள்ளது.

இத்திட்டத்தின்படி கடந்த 2004ஆம் ஆண்டு, தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளன்று 173 கோடி ரூபாய் செலவில், 2.22 கோடி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மக்களுக்கு இலவசமாக வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டன. இவ்வாறு இலவசமாக வழங்கப்பட்ட வேட்டி மற்றும் சேலைகள் பருத்தி இழைகளுடன் பாலியஸ்டர் இழை கலந்து அதிக தரத்துடனும், நயத்துடனும் உற்பத்தி செய்யப்பட்டதால் அனைவருடைய பாராட்டையும் பெற்றன.

தொடர்ந்து, 2005ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மக்கள் பயனடையும் வகையில் இலவச வேட்டி, சேலை திட்டத்தை செயல்படுத்த 175 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து நான் ஆணையிட்டேன். 2005ஆம் ஆண்டில் இலவச வேட்டி, சேலை திட்டத்தின் மூலம், மொத்தம், 1 கோடியே 11 லட்சம் வேட்டிகளும், 1 கோடியே, 11 லட்சம் சேலைகளும் இலவசமாக வழங்கப்பட்டன. இதன் மூலம், 2.22 கோடி பேர் பயன் அடைந்தனர்.

கடந்த ஆண்டில், ஏற்கெனவே உள்ள குடும்ப அட்டைகளைப் புதுப்பிக்கும் பணியும், குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு புதிய குடும்ப அட்டை வழங்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை தொடர்ந்து இவ்வாண்டு, அதாவது 2006ஆம் ஆண்டு செயல்படுத்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதன்படி, இவ்வாண்டு, மொத்தம் 256 கோடி ரூபாய் செலவில், 1 கோடியே 64 லட்சம் வேட்டிகள் மற்றும் 1 கோடியே 64 லட்சம் சேலைகள், தமிழகத்திலுள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மக்கள் ஆகியோருக்கு பொங்கல் திருநாளையொட்டி, இலவசமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், 1 கோடியே 64 லட்சம் பெண்கள் மற்றும் 1 கோடியே 64 லட்சம் ஆண்கள், ஆகமொத்தம் 3.28 கோடி பேர் பயனடைவார்கள் என்பதில் நான் மனநிறைவு அடைகிறேன். இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் பணி பொங்கல் திருநாளான 14.1.2006 அன்று தொடங்கப்பட்டு, 15.3.2006க்குள் வழங்கி முடிக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 11.1.2006

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட சிறப்பு ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள்





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 27.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 13 கோடியே 83 லட்சம் ரூபாய் மதிப்பில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர், கருங்குழி, திருப்போரூர், பெருங்களத்தூர், திருப்பெரும்புதூர் மற்றும் திருநீர்மலை ஆகிய சிறப்பு ஊராட்சிகளில் நிறைவேற்றப்பட்டுள்ள குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், ரூ. 3 கோடியே 33 லட்சம் மதிப்பிலான தாம்பரம் மற்றும் பல்லாவரம் நகராட்சிப் பகுதிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.14 கோடியே 59 லட்சம் மதிப்பிலான திண்டிவனம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய முடிவுற்ற பணிகள் ஆகியவற்றைத் திறந்து வைத்ததுடன், ரூ. 97 லட்சத்து 67 ஆயிரம் மதிப்பில் நிறைவேற்றப்படவுள்ள தாம்பரம் நகராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்தின் மூலம் 52.73 கோடி ரூபாய் செலவில் பல்லாவரம் நகராட்சியில் செயல்படுத்தப்படவுள்ள பல்லாவரம் பாதாள கழிவு நீர் அகற்றும் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.12.2005 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான அரசு தமிழக மக்களுக்கு குறைவின்றி குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை மிகுந்த முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இதன் அடிப்படையில், காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சிறப்பு ஊராட்சியில், 4.65 கோடி ரூபாய் மதிப்பில் செய்யாறு ஆற்றில்

வெங்கச்சேரி என்ற இடத்தில் 2 நீர் உறிஞ்சு கிணறுகள், கருங்குழி சிறப்பு ஊராட்சியில் ரூபாய் 52 லட்சம் மதிப்பில் கருங்குழி ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் புதிய திறந்த வெளி கிணறு, திருப்போரூர் சிறப்பு ஊராட்சியில் 97.34 லட்சம் ரூபாய் மதிப்பில் செம்பாக்கம் ஏரிக்கு அருகில், புதிய 3 திறந்த வெளி கிணறுகள், பெருங்களத்தூர் சிறப்பு ஊராட்சியில் 66.50 லட்சம் ரூபாய் மதிப்பில் புதிய 4 திறந்த வெளி கிணறுகள், திரும்பெரும்புதூர் சிறப்பு ஊராட்சியில் 6.75 கோடி ரூபாய் மதிப்பில் பாலாற்றில் புளியம்பாக்கம் என்ற இடத்தில் 8 நீர் உறிஞ்சு கிணறுகள் ஆகிய பணிகளையும், திருநீர்மலை சிறப்பு ஊராட்சியில் 27 லட்சம் ரூபாய் மதிப்பில், தாம்பரம்–பல்லாவரம் கூட்டு குடிநீர்த் திட்டத்தின் நீர் உந்து குழாயிலிருந்து 5.30 கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் மூலம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்புத் தொட்டிக்கு குடிநீர் கொண்டு செல்லும் பணி, 3.33 கோடி ரூபாய் மதிப்பில், தாம்பரம், பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர் நகராட்சிகள் மற்றும் சிட்லபாக்கம் சிறப்பு ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு கூடுதலாக குடிநீர் வழங்க, செய்யாறு ஆற்றில் புல்லம்பாக்கம் என்ற இடத்தில் 6 நீர் உறிஞ்சு கிணறுகள் அமைத்து குழாய் மூலம் குடிநீர் கொண்டு செல்லும் பணி, விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சிப் பகுதியில் 14.59 கோடி ரூபாய் மதிப்பில், தென்பெண்ணை ஆற்றின் கரையில் உள்ள கண்டரக்கோட்டை என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள 4 ஆழ்துளை கிணறுகள் மூலம் திண்டிவனம் நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் திட்டப் பணி ஆகிய, முடிவுற்ற பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.12.2005 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தாம்பரம் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணியை மேம்படுத்தும் வகையில் 97.67 லட்சம் ரூபாய் மதிப்பில் பாலாற்றின் மேலச்சேரி அருகில் 4 நீர் உறிஞ்சு கிணறுகள் அமைத்து நீர் உந்து குழாய்கள் மூலம் வில்லியம்பாக்கம் தலைமை நீரேற்று நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு, தாம்பரம் நகராட்சிக்கு ஏற்கெனவே அமைந்துள்ள நீர் உந்து குழாய்கள் மூலம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு ஏற்றப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்ய உள்ள குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

**பல்லாவரம் நகராட்சியில் பாதாள கழிவு நீரகற்று திட்டத்தை செயல்படுத்த அடிக்கல்**

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் 52.73 கோடி ரூபாய் மதிப்பில் பல்லாவரம் நகராட்சியில் உள்ள இசா பல்லாவரம், ஜமீன் பல்லாவரம், கீழ்கட்டளை, நெமிலிச்சேரி மற்றும் அஸ்தினாபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில், கழிவு நீர் குழாய்கள் மூலம் கழிவு நீர் வெளியேற்றுதல், கழிவு நீரேற்று நிலையங்கள் அமைத்தல், கழிவு நீரை சுத்திகரிப்பு நிலையத்திற்கு உந்து குழாய்கள் மூலம் கொண்டு செல்லுதல் போன்ற பணிகளை உள்ளடக்கிய பல்லாவரம் நகர பாதாள கழிவு நீர் அகற்றும் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.12.2005 அன்று அடிக்கல் நாட்டினார்கள். □

## தெரிந்து கொள்வோம்

### புகைப்பட தாள் பதிவு

புகைப்படத்தை தாளில் பதிவு செய்யும் முறையைக் கண்டுபிடித்தவர் வில்லியம் டால்பெட் என்ற இங்கிலாந்து நாட்டவர். கண்டுபிடித்த ஆண்டு 1835.

### ஃபோட்டோகிராபி

ஃபோட்டோகிராபியைக் கண்டுபிடித்தவர் ஜான்கார்பட் என்னும் அமெரிக்கர். கண்டுபிடித்த ஆண்டு 1888.

### வண்ணப்படம்

வண்ணப்படம் எடுக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'கேப்ரியேல் லிப்மன்' என்பவராவார். கண்டுபிடித்த ஆண்டு 1891.

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் உலகின் தலைசிறந்த பி.எம்.டபிள்யூ கார் நிறுவனம் சென்னையில் ரூ.180 கோடியில், ஜெர்மன் கார் தொழிற்சாலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில், உலகின் தலைசிறந்த கார் நிறுவனமான பி.எம்.டபிள்யூ கார் தொழிற்சாலையை ரூ.180 கோடியில், சென்னையில் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 8-12-2005 அன்று கையெழுத்தானது.

பி.எம்.டபிள்யூ கார் நிறுவனத்தின் சார்பில் அதன் பொது மேலாளர்கள் ரோனால்ட் ஜென்டாஸ், பீட்டர் குரோஞ்ச்நபல், தமிழ்நாடு அரசின் சார்பாக தொழில் துறை செயலாளர் திரு.து.இராஜேந்திரன், இ.ஆ.ப., ஆகியோர் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

உலகச் சந்தையில் ஓர் ஆண்டுக்கு 40.6 பில்லியன் யூரோ, அதாவது, ரூ2,19,240 கோடி அளவுக்கு வர்த்தகம் செய்யும், பி.எம்.டபிள்யூ நிறுவனம் சர்வதேச வாகனச் சந்தையில் முக்கியமான இடம் வகிக்கிறது.

தமிழ்நாட்டில் பி.எம்.டபிள்யூ கார் தொழிற்சாலை ஒன்றை அமைக்க இந்நிறுவனம் முடிவு செய்துள்ளது. தமிழகம் உட்பட பல மாநில அரசுகளுடன் இது தொடர்பாக இந்நிறுவனம் பேச்சுவார்த்தை நடத்தியது. இறுதியில், தமிழகத்திலுள்ள உள்கட்டமைப்பு வசதி, சாதகமான பல்வேறு ஊக்கச் சலுகைகள், தமிழக அரசின் ஆதரவு ஆகியவற்றை ஆய்வு செய்து, அதன் பின்னர் சென்னையில் கார் தொழிற்சாலையைத் தொடங்குவது என முடிவு செய்தார்கள். வரும் 5 ஆண்டு காலத்தில் ரூ.180 கோடி முதலீடு செய்யவும் முடிவு செய்திருக்கிறார்கள்.

சென்னைக்கு அருகே மறைமலை நகரில் உள்ள மகேந்திரா வேர்ல்டு நகரில், தொழிற்சாலை அமைப்பதற்குத் தேவையான

இடத்தை பி.எம்.டபிள்யூ நிறுவனம் தேர்ந்தெடுத்துள்ளது.

தமிழகத்தில் முதலீட்டுக்குச் சாதகமான சூழ்நிலையால் கார் தொழிற்சாலையை சென்னையில் நிறுவ முடிவு செய்ததாக இந்நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் கிளாஸ் பெர்னிங், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தெரிவித்தார்.

தமிழகத்தின் சிறந்த உள்கட்டமைப்பு வசதி மற்றும் அரசின் ஆதரவுக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் அவர் கூறுகையில், "பி.எம்.டபிள்யூ நிறுவனம் தனது செயல்பாடுகளைத் தொடங்க விரைவாக அனுமதி அளித்தீர்கள். இதுபோன்ற வேகமாகச் செயல்படும் அரசை நாங்கள் இதுவரை எங்கும் பார்த்ததில்லை" என்று தெரிவித்ததுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தனது நன்றியை நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் தெரிவித்துக் கொண்டார்.

இந்தியாவின் பல பகுதிகளைப் பார்வையிட்ட பின்னர், சிறந்த இடமாக சென்னையை, கார் தொழிற்சாலை நிறுவத் தகுந்த இடமாக தேர்ந்தெடுத்தமைக்கு தனது மகிழ்ச்சியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

தனது தலைமையிலான தமிழக அரசின் சிறந்த அணுகுமுறை மற்றும் தமிழ்நாட்டில் நிலவி வரும் ஆரோக்கியமான முதலீட்டுச் சூழ்நிலை ஆகியவையே கார் நிறுவனத்தைச் சென்னையில் அமைக்க தேர்ந்தெடுத்ததற்கு காரணம் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதுமட்டுமல்ல; சென்னையை தொழில் தொடங்க ஏற்ற இடமாக பி.எம்.டபிள்யூ. நிறுவனம் தேர்ந்தெடுத்ததால், ஜெர்மனி நாட்டிலிருந்து மேலும் பல தொழில் முதலீடுகள் தமிழ்நாட்டுக்கு வருவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதை முன்கூட்டியே நமக்கு உணர்த்துவதாக உள்ளது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் சூழ்நிலை திருப்திகரமாக இருப்பதால், முதலீட்டாளர்களின் விருப்பமான இடமாக தமிழ்நாடு திகழ்கிறது. இங்கு ஆரோக்கியமான முதலீட்டுச் சூழ்நிலை இருப்பதாக பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் மாநிலங்களில் பொருளாதார சுதந்திரம் – 2005 என்ற ஆய்வறிக்கையில் 20 மாநிலங்களில் தமிழ்நாடு முதல் இடத்தில் இருப்பதாகவும், வர்த்தக ரீதியாக 5ஆம் இடத்திலிருந்து முதல் இடத்துக்கு தமிழ்நாடு முன்னேறியுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. எனவே, அந்நிய முதலீடுகள் தமிழ்நாட்டை நோக்கி வருவதில் ஆச்சரியம் எதுவும் இல்லை என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தமிழ்நாடு அரசால் அளிக்கப்பட்டுள்ள ஆதரவு ஊக்கம், சலுகைகள் போன்றவற்றால் பி.எம்.டபிள்யூ நிறுவனம் சிறப்பாகச் செயல்பட்டு, சாதனை புரியும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்கள். ஜெர்மனியிலுள்ள கார் உதிரிபாகத் தயாரிப்பாளர்களையும் சென்னைக்கு வரவழைத்து, தென்கிழக்கு ஆசியாவில் சென்னை முக்கிய இடம் வகிக்கும் நிலையை உருவாக்க வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து ஆதரவையும், முழு ஒத்துழைப்பினையும் அளிக்க தமிழ்நாடு அரசு தயாராக உள்ளதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார்கள்.

பி.எம்.டபிள்யூ நிறுவனம் தனது செயல்பாட்டில் மேலும் பலம் பெற்று சிறப்பான வெற்றியைப் பெற வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

❖ ❖ ❖

**புகைப்படப் பதிவு**

வெள்ளி பூசப்பட்ட மெல்லிய செப்புத் தகட்டில் புகைப்படத்தைப் பதிவு செய்யும் முறையைக் கண்டு பிடித்தவர் லூயிடாகர் என்பவராவார். இவர் பிரான்சு நாட்டவர். இவரது காலம் 1787–1851. 1840–ஆம் ஆண்டில் அம்முறையில் எடுக்கப்பட்ட புகைப்படம் இன்றும் அருங்காட்சியகத்தில் இருக்கிறது. காகிதத்தில் பதிவு செய்யும் புகைப்பட முறை பிறகுதான் வந்தது.

# ஒப்புதல் பெறாத வீட்டுமனைகளை முறைப்படுத்த திருத்தி அமைக்கப்பட்ட வழிகாட்டி முறைகள் கொண்ட ஒரு புதிய திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, இந்த பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டு வரும் குடியிருப்புகளுக்கு, குடி தண்ணீர், தெரு விளக்கு, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு செய்து வருகிறது. புதிய மனைப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும் போது, நடைமுறையில் உள்ள விதிமுறைகளின் அடிப்படையில், மனைப் பிரிவுகளுக்கான அங்கீகாரம் வழங்கப்படுகிறது. இவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்ட மனைப் பிரிவுகளுக்கு சாலை, தெரு விளக்கு, குடிநீர், வடிகால் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளால் ஏற்படுத்தித் தரப்படுகின்றன.

அங்கீகாரம் பெறாத வீட்டு மனைப் பிரிவுகளை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு முறைப்படுத்த 3.6.1999 அன்று ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதில் கூறப்பட்ட பல்வேறு நிபந்தனைகளைத் தளர்த்தி, 16.6.2000 மற்றும் 1.2.2001 ஆகிய நாட்களில் அரசாணைகள் வெளியிடப்பட்டன.

22.9.2000 அன்று வணிக வரித் துறையால் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து 'மறுப்பின்மை சான்றிதழ்' பெறாமல் ஒப்புதல் பெறாத தனியார் மனைப் பிரிவுகளில் வீட்டு மனைகளாக மாற்றப்பட்ட நிலத்தின் உரிமை மாற்றத்தை பத்திரப் பதிவு செய்ய இயலாது.

இந்த அரசாணைகளின் காரணமாக அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் வீடுகளைக் கட்டியுள்ள பொது மக்கள், தங்களது மனைகளை பதிவு செய்ய இயலவில்லை என்றும், வீடுகளுக்கு அடிப்படை வசதிகள் பெற இயலவில்லை என்றும் தெரிவித்து, இந்த வசதிகளைப் பெறும் வகையில் இத்தகைய மனைப் பிரிவுகளை முறைப்படுத்துமாறு கோரிக்கைகள் விடுத்துள்ளனர். இதனை கவனமாக பரிசீலித்த பின், சென்னை பெருநகரப் பகுதிக்கு அப்பால் உள்ள நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள ஒப்புதல் பெறாத வீட்டு மனைகளை முறைப்படுத்த திருத்தி அமைக்கப்பட்ட வழிகாட்டி முறைகள் கொண்ட ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த எனது அரசு முடிவு செய்துள்ளது.



இதன் அடிப்படையில்,

1. குடும்ப பாகப் பிரிவினைக்காக அல்லது வேறு நோக்கங்களுக்காக 8 மனை வரையிலும் உட்பிரிவினை செய்வது உட்பிரிவாக கருதப்பட மாட்டாது.

2. 1.1.1980 ஆம் நாளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டு ஒப்புதல் பெறாத மனைப் பிரிவுகளை அனுமதி பெற்ற மனைப் பிரிவுகளுக்கு நிகராகக் கருதி அவற்றுக்கு திறந்த வெளி ஒதுக்கீட்டு (Open Space Reserve ) கட்டணம் வசூலிக்கத் தேவையில்லை. எனினும், அந்த மனைப் பிரிவுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்கு வகை செய்யப்படவில்லை எனில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தற்போதைய அட்டவணைக் கட்டணங்களின்படி வீட்டு மனைக்கான மேம்பாட்டுக் கட்டணத்தை ஒரே தடவையாக வசூலிக்க வேண்டும்.

3. 1.1.1980க்குப் பின்னர், நாளது தேதி வரை உருவாக்கப்பட்ட ஒப்புதல் பெறாத தனியார் மனைப் பிரிவுகளில் அமைந்துள்ள வீட்டு மனைகள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு முறைப்படுத்தப்படும். அவை,

i) ஒப்புதல் பெறாத தனியார் மனைப் பிரிவு ஒரு பொது சாலையை அல்லது ஒப்புதல் பெற்ற மனைப் பிரிவு சாலையை ஒட்டியிருக்க வேண்டும்.

ii) ஒப்புதல் பெறாத மனைப் பிரிவுகளில் உள்ள மனை, குறைந்த பட்சம் 16 அடி அகலம் உள்ள ஒரு சாலையை ஒட்டியிருக்க வேண்டும்.

iii) இம்மனைகள் கடற்கரையோர முறைப்படுத்து மண்டலம், விமான போக்குவரத்து விதிமுறைகள் போன்ற குடியிருப்புக்கு தடை விதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் அமைந்திருக்கக் கூடாது.

iv) மனை உரிமையாளர் உள்ளாட்சி அமைப்புக்கு மேம்பாட்டுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

v) மாநகராட்சிப் பகுதிகளில் சதுர மீட்டர் ஒன்றுக்கு 20 ரூபாய், நகராட்சிப் பகுதிகளில் சதுர மீட்டர் ஒன்றுக்கு 10 ரூபாய், முன்னாள் பேரூராட்சி பகுதிகளில் சதுர மீட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் என்ற வீதத்தில் முறைப்படுத்துக் கட்டணம் வசூலிக்கப்படும்.

vi) மனைப் பிரிவு பரப்பில் 10 சதவீதம் திறந்தவெளிக்கென ஒதுக்கப்பட வேண்டும். இது மனைகளின் பரப்பளவின் அடிப்படையில் தனித்தனி மனைகளுக்கு இடையே சம அளவில் பிரிக்கப்படும். மனை உரிமையாளர் விகிதாச்சாரப்படி திறந்த வெளிக்குரிய இடத்தை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு திறந்த வெளிக்காக ஒதுக்கப்படும் இடம் குறையுமனால் வீட்டு மனை உரிமையாளர் துண்டு விழும் மனைப் பரப்பின் விலையில் 50 சதவீதத் தொகையை செலுத்த வேண்டும். 22.9.2000–க்கு முன்னர் வாங்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட வீட்டு மனைகளைப் பொறுத்த வரை வீட்டு மனை பதிவு செய்யப்பட்ட ஆண்டில் செயலில் இருந்த வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் துண்டு விழும் திறந்த வெளி இடத்திற்கான விலை கணக்கிடப்படும். வீட்டு மனைகள் வாங்கப்பட்டு 22.9.2000–ஆம் நாளுக்கு பின்னர், நாளது தேதி வரை பதிவு செய்யப்படாத வீட்டுமனைகளைப் பொறுத்த மட்டில், வீட்டு மனை வாங்கப்பட்ட நாள் அன்றைய நிலவரப்படியான வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் நிலத்தின் மதிப்பு கணக்கிடப்படும்.

vii) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மேம்பாட்டு கட்டணங்களை வசூலித்துக் கொண்டு, ஒப்புதல் பெறாத தனியார் வீட்டு மனைப் பிரிவுகளுக்கு பொதுவான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை செய்து தரும். இந்த வீட்டு மனைப் பிரிவு முழுவதற்கும் ஒட்டுமொத்தமாக இத்தகைய வசதிகளை செய்து தருவதற்கு ஏதுவாக மொத்த மேம்பாட்டுக் கட்டணத்தில் குறைந்தது 50 சதவீதம் வசூலிக்கப்பட்ட பின்னர், இவ்வசதிகள் படிப்படியாக செய்து தரப்படும்.

viii) அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் நிர்ணயிக்கப்பட்ட வைப்பீட்டுத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணங்களுடன் துண்டு விழும் திறந்தவெளி ஒதுக்கீட்டு வகையிலான விகிதாச்சார விலை மற்றும் மேம்பாட்டுக் கட்டணங்களை வசூலித்த பின்னர் தனிப்பட்ட மனைகளுக்கு குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் குழாய் இணைப்பு போன்ற வசதிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் செய்து கொடுக்கும்.

ix) துண்டு விழும் திறந்த வெளி பரப்புக்கான விலை, மேம்பாட்டுக் கட்டணம் ஆகிய வகையில் விகிதாச்சாரத் தொகையை மனை உரிமையாளர்களிடமிருந்து வசூலித்த பின்னர் ஒப்புதல் பெறப்படாத வீட்டுமனைகள் தொடர்பாக தனித்தனி கட்டட வரைபடங்களுக்கு ஏற்பளிப்பு வழங்கப்படும்.

x) மேலும், 22.9.2000 அன்று வெளியிடப்பட்ட அரசாணையின்படி, உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து மறுப்பின்மைச் சான்றிதழ் பெற்ற பிறகே பத்திரப் பதிவு அதிகாரி வீட்டுமனைகளாக மாற்றப்பட்ட நிலத்தின் உரிமை மாற்றம் தொடர்பான பத்திரத்தைப் பதிவு செய்ய இயலும். இதில் நடைமுறை சிக்கல்கள் உள்ளதால், மனைகளுக்கும், மனை பிரிவுகளுக்கும் உள்ளாட்சி அமைப்புகள் ஏற்பளிப்பு அளிக்கும்போது, அதைப் பற்றிய தகவலை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும், வீட்டு மனை உரிமைதாரர்கள் மறுப்பின்மை சான்றிதழ் பெறவேண்டியது இல்லை என்றும் வழிமுறைகள் மாற்றப்படும்.

தற்போது வழங்கப்படும் இந்த சலுகைகளின் காரணமாக ஒப்புதல் பெறாத 2569 மனைப்பிரிவுகளில் மனைகள் வாங்கியுள்ள சுமார் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட வீட்டுமனை உரிமையாளர்கள் பயன்பெறுவர். இந்த திட்டத்தினால் இந்த மனைப் பிரிவுகளில் வசித்து வருவோர் அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற ஏதுவாகும் என்பதுடன் அவர்களது சுற்றுச்சூழல் மற்றும் வாழ்க்கைத் தரம் பெரிதும் மேம்படவும் வழிவகுக்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 12.1.2006

# விவசாயிகள், விவசாயக் கூலி தொழிலாளர்களின் வாழ்வுக்கு வழிவகுக்கும்

# தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்



**நா**ட்டில் அனைத்து தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் பல்வேறு வகையான சலுகைகள், பாதுகாப்புகள் இருக்கின்றன. ஆனால், அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு எவ்வித பாதுகாப்பும், அவர்களின் வாழ்க்கைத் தரத்திற்கு எந்தவித உத்திரவாதமும் இல்லாமல் துயருற்ற விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்கள் வாழ்வுக்கு வழிவகுக்கும் உன்னதமான திட்டமான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டதன் மூலம் அதிக அளவில் விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்களை உள்ளடக்கிய விவசாயம் சார்ந்த மாவட்டமான ஈரோடு மாவட்டத்தில் தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சிறு, குறு விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் பயனடையும் வகையில், அவர்களது துயரத்தை நீக்கி, அவர்களது சமூகப் பொருளாதார நிலையை உயர்த்திட தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற சமூகப் பாதுகாப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த திட்டத்தின் மூலம் விவசாயம் நிறைந்த மாவட்டமான ஈரோடு மாவட்டத்தில், 50,188 சிறு விவசாயிகள், 57,808 குறு விவசாயிகள், 2,23,743 விவசாய கூலித் தொழிலாளர்கள் என 3,31,739



உறுப்பினர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்படி, இயற்கை மரணம், விபத்தால் ஏற்படும் மரணம் ஆகியவற்றிற்கு இழப்பீடு வழங்குதல், திருமண உதவி வழங்குதல், குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல், மகப்பேறு உதவித் தொகை வழங்குதல், 60 வயதிற்கு பிறகு ஒய்வூதியம் வழங்குதல் போன்ற பல்வேறு சமூகப் பாதுகாப்பு உதவிகள் வழங்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இவ்வாறு பல்வேறு வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக ஈரோடு மாவட்டத்திற்கு ரூ.2,42,75,000 நடப்பாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள 7 தாலுகா அளவில் தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள அனைவருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்குவதின் அடிப்படையில் 19.11.2005 அன்று மொடக்குறிச்சியிலும், 20.11.2005 அன்று கோபிசெட்டிபாளையம் தாலுகாவிலும் விழா எடுக்கப்பட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் திருமண உதவித் தொகையாக 205 நபர்களுக்கு ரூ.8,25,000, ஒய்வூதியமாக 427 நபர்களுக்கு ரூ.85,400, இயற்கை மரணத்தின் மூலம் நிவாரணத் தொகையாக 48 நபர்களுக்கு ரூ.4.80 லட்சமும், விபத்தால் ஏற்பட்ட இறப்பின் காரணமாக 9 நபர்களுக்கு ரூ. 1 லட்சமும் ஆக மொத்தம் 681 பயனாளிகள் இதுவரை தேர்வு செய்யப்பட்டு ரூ. 14.90 லட்சம் நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 1,26,364 விண்ணப்பங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 62,017 குடும்பங்களுக்கு குடும்ப அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்கள் சேர்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 681 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கும் விழா 19.11.2005 அன்று மொடக்குறிச்சியிலும், 20.11.2005 அன்று கோபிசெட்டி பாளையத்திலும் நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., தலைமை வகித்தார். மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.சி.இராமசாமி அவர்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இவ்விழாவில், மாவட்டத்தின் அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் விவசாய பெருமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் ஈரோடு மாவட்டத்தில் அதிக அளவில் சிறு, குறு விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்கள் பயன் பெற்றுள்ளனர். மேலும், விவசாயிகள் வாழ்க்கை உயர்வுக்கு வழிவகுத்த உன்னதமான திட்டத்தை அனைத்து தரப்பு மக்களும் பாராட்டியுள்ளார்கள்.

செய்தி– மக்கள் தொடர்பு அலுவலர்
ஈரோடு மாவட்டம்.

## திண்டுக்கல் மாவட்டத்தில்

# தேசிய தோட்டக்கலை இயக்கத்திற்கு ரூ.467.41 இலட்சம் நிதி ஒதுக்கீடு

திண்டுக்கல் மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சிக்காக, தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் ரூ.467.41 இலட்சம் மதிப்பிலான நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

தோட்டக்கலைத் துறையின் கூடுதல் வளர்ச்சிக்காக, புதிய தொழில்நுட்ப முறைகளை கண்டுபிடிக்கவும், தொழில்நுட்ப முறைகளை வேளாண் பெரு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தோட்டக்கலைப் பயிர்களை அதிக அளவில் பயிரிடவும், தோட்டக்கலை மூலம் அறுவடை செய்யப்பட்ட காய்கறி மற்றும் பழங்களை பதப்படுத்தி விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கின்ற வகையில் விற்பனை செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டப் பணிகளை மாவட்ட இயக்கக் குழுவின் மேற்பார்வையில் செயல்படவுள்ளன.

தோட்டக்கலைத் துறையின் சார்பில், விவசாயிகளுக்குத் தேவையான செயல் விளக்க நாற்றங்கால் ரெட்டியார்சத்திரம் அரசு பழப்பண்ணை, கொடைக்கானல் அரசு பழப்பண்ணை மற்றும் தாண்டிகுடி அரசு பழப்பண்ணைகளில் ரூ.39 இலட்சம் மதிப்பில் செயல் படுத்தப்படவுள்ளன.



தனியார் நிறுவனங்கள் மூலம், தோட்டக்கலைப் பயிர் செடிகளை உற்பத்தி செய்ய, ஊக்குவிக்கின்ற வகையில், திண்டுக்கல் மாவட்டத்தில் இரண்டு இடங்களில் பெரிய அளவிலான செயல்விளக்க நாற்றங்காலும், நான்கு இடங்களில் சிறிய அளவிலான செயல்விளக்க நாற்றங்காலும் ரூ.24 இலட்சம் மதிப்பில் 50 சதவிகித மானியத்தில் செயல்படுத்தப்படவுள்ளன.

தோட்டக்கலைத் துறையின் சார்பில் 2 இடங்களில் ரூ.30 இலட்சம் மதிப்பில் 100 சதவிகித மானியத்தில் விதை உற்பத்திக்கான உள்ளீட்டு வசதிகளை மேம்படுத்தவும், புதிய பழத்தோட்டங்களை அமைக்கின்ற வகையில், 600 ஹெக்டேர் பரப்பளவில் மா வகைகளும், 700 ஹெக்டேர் பரப்பளவில் நெல்லி வகைகளும், 150 ஹெக்டேர் பரப்பளவில் வாழை வகைகளும் ரூ.157.5 இலட்சம் மதிப்பில் 75 சதவிகித மானியத்தில் செயல்படுத்தப்படவுள்ளன.

மலர் பயிர்களை விவசாயிகள் அதிக அளவில் பயிரிட வைக்கும் வகையில், 205 ஹெக்டேர் பரப்பில் சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய அடிப்படையிலும், ஏனைய பிற விவசாயிகளுக்கு 33 சதவிகித மானிய அடிப்படையிலும், ரூ.37.10 இலட்சம் மதிப்பிலும், 25 ஹெக்டேர் பரப்பளவில் 75 சதவிகித மானியத்தில் ரூ.2.81 இலட்சம் மதிப்பில் மிளகாய் சாகுபடி செய்யவும், 65 ஹெக்டேர் பரப்பளவில் 75 சதவிகித மானியத்தில் ரூ.7.31 இலட்சம் மதிப்பில் நறுமணப் பயிர்கள் சாகுபடி செய்யவும் திட்டமிடப் பட்டுள்ளன.

பலனளிக்காத மா மரங்களை பலனளிக்கின்ற வகையில் புத்துயிர் அளித்திட 100 ஹெக்டேர் பரப்பளவில் 50 சதவிகித மானியத்தில் ரூ.15 இலட்சம் மதிப்பில் இத்திட்டம் செயல் படுத்தப்படவுள்ளன.

நீர்நிலை ஆதாரங்களை உருவாக்கி தோட்டக் கலைப் பயிர்கள் பயன் பெறுகின்ற வகையில், 10 சமுதாயக் குளங்கள் ரூ.1 கோடி மதிப்பில் உருவாக்கப் படவுள்ளன.

சிறு, குறு விவசாயிகள் 4,000 சதுர மீட்டர் பரப்பில் உயர் தொழில்நுட்ப முறையில் பாலித்தீன் பசுமைக் கூடாரம் அமைத்திடவும், 1,000 சதுர மீட்டர் பரப்பளவில் சாதாரண பாலித்தீன் பசுமைக் கூடாரம் அமைத்திடவும், ஏனைய பிற விவசாயிகள் 5,000 சதுர மீட்டர் பரப்பில் உயர் தொழில்நுட்ப பாலித்தீன் பசுமைக் கூடாரம் அமைத்திடவும், மண்ணில் ஈரப்பதம் காத்திடும் வகையில், 4 ஹெக்டேர் பரப்பில் நிலப்போர்வை அமைத்திடவும், 3,000 சதுர மீட்டரில் நிழல் வலை அமைத்திடவும், 1,660 ஹெக்டேரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையும், 100 ஹெக்டேர் பரப்பளவில் இயற்கை வழிப் பண்ணை அமைத்திடவும், 6 இடங்களில் மண்புழு உரம் உற்பத்தி பண்ணை அமைத்திடவும், மகரந்தசேர்க்கையை அதிகரித்து உற்பத்தியை பெருக்குகின்ற வகையில், 100 தேனீப் பெட்டிகள் அமைத்திடவும் ரூ.54 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்றும், இத்திட்டத்தில் பங்கு கொண்டு பயன் பெற ஆர்வமுள்ள விவசாயிகள் இத்திட்டங்கள் பற்றிய முழு விவரங்களை திண்டுக்கல் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் திரு. ஜி.இராமசாமியை அணுகி விவரங்களைத் தெரிந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு.முருகய்யா, இ.ஆ.ப., கேட்டுக் கொண்டுள்ளார்.

### ரூ.30 இலட்சம் மதிப்பில் சூரிய சக்தி, எரிசக்தி பூங்கா

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மரபுசாரா எரிசக்தி திட்டங்களை ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படுத்திடும் வகையில் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்குத் தலைமையேற்றுப் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு. முருகய்யா, இ.ஆ.ப., அவர்கள் கூறியதாவது :

“திண்டுக்கல் மாவட்டத்தில் சூரிய சக்தி மூலம் தெரு விளக்குகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 2002 – 2003ஆம் ஆண்டில் வில்பட்டி, மன்னவனூர், பிளாக்கவை, புலியூர், மஞ்சம்பட்டி ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் 10 தெருவிளக்குகளும், 2003 – 2004ஆம் ஆண்டில் திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள சிறுமலை, தென்மலை, அரளிக்காடு, கடமான்குளம், தவிட்டுக்கடை, தாளக்கடை, வில்பட்டி, வெள்ளகவி, ஆண்டிபட்டி, செக்காபட்டி, நாகையா கோட்டை, ஸ்ரீராமபுரம், சித்தூர், பெரும்பள்ளம், சாந்திபுரம், பூத்தாம்பட்டி, நல்லமநாயக்கன்பட்டி போன்ற ஊராட்சிகளில் 60 தெருவிளக்குகளும் அமைக்கப் பட்டுள்ளன.

நடப்பாண்டில் கொடைக்கானல் வட்டம் பூலத்தூர், கூக்கால், வடகவுஞ்சி மற்றும் ரெட்டியார்சத்திரம், வத்தலக்குண்டு, ஆத்தூர், ஒட்டன்சத்திரம் ஆகிய பகுதிகளில் 25 சூரிய சக்தி தெருவிளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களில், கழிப்பறையுடன் இணைந்த கரிமவாயு கலன் அமைக்கும் திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு பழனி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள பாப்பம்பட்டி, குப்பம்பாளையம் ஆகிய கிராமப்பகுதியில் உள்ள 10 ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கு கழிப்பறையுடன் இணைந்த கரிமவாயு கலன் அமைக்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் பி.எஸ்.என்.ஏ. பொறியியல் கல்லூரியில் உள்ள விடுதிக்கு இத்திட்டத்தின் கீழ், கரிமவாயு கலன் அமைக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்தில் இத்திட்டத்தின் கீழ், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள என். பஞ்சம் பட்டியில் இக்கலன் அமைக்க தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சிக் கழக நிறுவனத்திற்கு நிர்வாக அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தாவரக் கழிவின் மூலம் மின் உற்பத்தி செய்யப்படும் பயோமாஸ் கேஸிபையர் இயந்திரத்தினை 14 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் நிறுவிட ஏற்பாடுகள் செய்யப் பட்டு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் ரூ.18.90 இலட்சம் மதிப்பிலான மானிய நிதி பெறப் பட்டுள்ளது. பயோமாஸ் கேஸிபையர் இயந்திரத்தினை பயன்படுத்துவதன் மூலம் குடிதண்ணீர் மோட்டாரை இயக்கவும், தெருவிளக்குகளை எரிய வைக்கவும் பயன்படுவதால் ஊராட்சிகளின் மின் கட்டணத் தொகை வெகுவாக குறைவதற்கு வாய்ப்புள்ளது.

நடப்பாண்டில், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2 பயோமாஸ் கேஸி பையர் இயந்திரத்தை ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் கரிசல்பட்டி கிராமத்திலும், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் தேவரப்பன்பட்டி கிராமத்திலும் ரூ.6.40 இலட்சம் மதிப்பில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது'' என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஆர்.எஸ்.வி.ஒய். திட்டத்தின் கீழ், ரூ.30 இலட்சம் மதிப்பில் பொதுமக்களின் பார்வைக்காகவும், இத்திட்டப் பயனை பொதுமக்கள் நேரில் கண்டறிந்து விழிப்புணர்வு பெறும் வகையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் எரிசக்தி பூங்கா அமைக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்**

# தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில்

# வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்தநாள் விழா

**தூ**த்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, சத்தியபாமா திருமண மண்டபத்தில், 17-12-2005 அன்று, சுதந்திரப் போராட்டத் தியாகி வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்தநாள் விழா, தமிழக அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.சந்திரசேகரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகத் தலைவர் திரு.இரா. அமிர்தகணேசன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

விழாவில், வீரன் அழகுமுத்துக்கோன் திருவுருவப் படத்தினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் திறந்துவைத்தார். மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கினார். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள், தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், சமூகநலத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தாட்கோ, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி, இலவச வீட்டுமனைப்பட்டா உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை ரூ. 7.50 லட்சம் மதிப்பில் 130 பயனாளிகளுக்கு வழங்கினார். விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் பேசியதாவது : "இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கி, நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சுதந்திரத்திற்காக பாடுபட்ட தியாகிகளுக்கு அரசு சார்பில் விழா எடுத்து வருகிறார். மனிதனின் வாழ்க்கைக்கு கல்வி அடிப்படையானதாகும். அந்த கல்விக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறப்பு திட்டமான தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் 1 கோடியே 37 லட்சம் உழவர் பாதுகாப்பு அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. விடுதலைப் போராட்ட வீரர்கள், தியாகிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நல்லாட்சியில் தான் மணிமண்டபங்கள், நினைவகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன எனப் பேசினார்.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் பேசியதாவது : "சாதி, மத, இன வேறுபாடின்றி நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சியில் தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழ்கிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக சென்று மக்களை சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை



மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கினார். அதேபோல, வெள்ள பாதிப்பு பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டு நிவாரண உதவிகள் வழங்கினார். பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சக்தியும், ஊக்கமும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். சுதந்திரப் போரட்ட தியாகிகளை, வீரர்களை, அறிஞர்களை, கௌரவித்து போற்றுகின்ற அரசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு'' எனப் பேசினார்.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பேசியதாவது : "தமிழகத்தில் குறிப்பாக நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தில்தான் வ.உ.சிதம்பரனார், வீரன் அழகு முத்துக்கோன், வீரன் சுந்தரலிங்கம், கட்டபொம்மன், மகாகவி பாரதியார் போன்ற சுதந்திரப் போராட்ட தலைவர்கள் மற்றும் தியாகிகள் வாழ்ந்த புண்ணிய பூமியாகும்.

சுதந்திரப் போராட்டத் தியாகி வீரன் அழகு முத்துக்கோனுக்கு சென்னையில் சிலை வைத்து சிறப்பு செய்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள். சுதந்திரத்திற்காக உயிர்த்தியாகம் செய்தவர்களை மக்கள் மறக்கக் கூடாது என்பதற்காகத்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நினைவு மண்டபங்களை எழுப்பியுள்ளார்கள். தமிழகத்தில்தான் சட்டம் ஒழுங்கு சிறப்பாக நிலைநாட்டப்பட்டு வருகிறது. பெற்ற சுதந்திரத்தை பேணி பாதுகாத்து வருபவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள்'' எனக் கூறினார்.

**- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
தூத்துக்குடி மாவட்டம்.


விழாக்காலம் – கோ-ஆப்டெக்ஸ் காலம்
கோ-ஆப்டெக்ஸ்
காலத்திற்கேற்ற புதுமையுடனும்
பாரம்பரியப் பெருமையுடனும்...
1935 முதல் மிகச் சிறந்த இரகங்களை
உங்களுக்காகவே வழங்குகிறது.
• காஞ்சிபுரம் அசல் பட்டு சேலைகள்
• சேலம் தரமிக்க பட்டு சேலைகள்
• ஆரணி தரமிக்க பட்டு சேலைகள்
• கோயமுத்தூர் உயர்ரக பருத்தி சேலைகள்
• உறையூர் பருத்தி சேலைகள்
• சேலம் உயர்ரக பருத்தி சேலைகள்
• மதுரை சுங்கடி புடவைகள்
• சென்னிமலை ஏற்றுமதி தரம் வாய்ந்த படுக்கை விரிப்புகள்
• கோவை ஏற்றுமதி தரம் வாய்ந்த எரலை துண்டுகள் (டவல்கள்)
• குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி தரம் வாய்ந்த லுங்கிகள்
• தாத்தையங்கார்பேட்டை வேட்டிகள்
கோ-ஆப்டெக்ஸ்
Visit us at www.tn.gov.in www.cooptex.com
இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ்.
வாருங்கள், பாருங்கள், வாங்குங்கள்- முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.
ஆண்டுதோறும் 1,00,000 பட்டு புடவைகள், 3,00,000 பருத்தி புடவைகள், 10,00,000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10,00,000 டவல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
டெல்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், கோவை, திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.

தமிழரசு
R.N.I.No.21446/70 - Regn. No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR)/WPP-518/06-08



